கலைஞர் 100

1924 - 2024





# கலைஞர் நூற்றாண்டு நிறைவு மலர் – ஜூன் 2024

தொகுதி - 1

கலைஞர்
100
1924 - 2024





# கலைஞர் நூற்றாண்டு நிறைவு மலர் - ஜூன் 2024

தொகுதி-1



# நான் யார்?

★ கோளிலி என்பது என்னை விதைத்த ஊர் திருக்
குவளையூர் என்றும் தீந்தமிழ் பேசும்!
நாற்றுப் பயிராய் அவ்வூர் வளர்ந்து தென்றல்
காற்றுத் தமிழைத் திருஆரூர் பயின்றேன்!

★ ஈரோட்டுப் பள்ளியில் இனமானக் கல்வி அறிவுத்
தேரோட்டிக் காஞ்சியில் இலட்சியக் கல்வி!

★ இந்தித் திணிப்பை என்றும் எதிர்க்க
முந்திக் கிளம்பிய தமிழர் படையில்
இளைஞர் அணியை அன்றே கண்டு
இரண்டறக் கலந்தேன் இயக்க நடப்பில்!



★ தண்டவாளத்தில் படுத்த போதும்
தனிமைச் சிறையில் வறுத்த போதும்
கண்ட அண்ணன் வடித்த கண்ணீர் என்
களைப்பைத் தீர்க்க தெளித்த பன்னீர்!


★ ஆண்டு இருபதைக் கடந்த வயதில்
பாண்டியில் என்னை வதைத்த காலை
தந்தை பெரியார் தடவிய மருந்தே என்
சிந்தை குளிர்ந்த அமுத விருந்தாம்!

★ எப்படி நான் கவிதைக் கடலோரம் சென்றேன்
என்பதனைக் கடுகளவாவது விளக்கத்தான் வேண்டும்.
'கருவிலே திரு' என்பர்; அதை நான் கதையென்பேன்; ஆனால்
கனவிலே தேவி வந்தெனக்குக் கவிதை கற்றுத் தரவில்லை.



'வெள்ளாவி பத்து நாள், வெளுக்க இருபது நாள்
முள்ளாடிக் கஞ்சி போட முப்பது நாள் ஆயினும்
காக நிறமாய், கருங்குருவி வால் நிறமாய்
மேக நிறமாய் வெளுத்தானே என் தோழன் வைத்தி மகன்'

இந்தப் பாடலனைய பலவற்றை என்
தந்தை முத்துவேலர் இயற்றியுள்ளார் என்பதாலே அவர்
வழித்தோன்றல் எனுமுறையில் வளமான தமிழ் எனக்கும்
வழித்துணையாய் எப்போதும் இருப்பதால் தான்
'கருவிலே திரு' என்றால்
தப்பில்லையென்று ஒப்புதல் தவறில்லை!



★ அஞ்சுகத் தாய் முத்துவேலர்
எனைப் பெற்றபோது
இசைபாடி மகிழ்விப்பான்
இவனென்று காத்திருந்தார்!
இவனோ;
வசைபாடும் அரசியலின் மத்தியிலே
வசமாகச் சிக்கிக் கொண்டான்!



★ தோளில் துண்டணியக் கூடாது என்று
வாளின் முனையில் ஆணையிட்ட கொடுமையினை எதிர்த்துக்
குடுமித் தலையைக் கிராப்புத் தலையாக்கிக் கொண்டு
குக்கிராமம் திருக்குவளையைத் திராவிடக் கோட்டையாக்கக்
கையில் பிடித்த பேனா தான் அய்யா அண்ணா அடியொற்றிக்
கவிப் பாவேந்தர் கனித் தமிழைப் போற்றும் கலைஞனாக்கியது.



★ அஞ்சுக அன்னையிடம் உயிர்ப்பால் அருந்தி
அய்யாவின் கொள்கையின் பால், உவப்பால் தவழ்ந்து
அண்ணாவின் பேரன்பால் ஆளாகி வளர்ந்து
இளமைத் துடிப்பால் இந்திப் போர்ப்படை கூட்டி
இலட்சிய முனைப்பால் முரசொலிக்க வந்தவன் நான்!

★ தொள்ளாயிரத்து முப்பத்தெட்டில் தூக்கிய கொடியைத்
தோளில் இன்னும் நான் சுமக்கிறேன் என்றால்;
தொண்டு கிழமாய்ப் போன பின்னும் சுமப்பேனடா!
பண்டுநம் இனப் பெருமை காப்பேனடா!

தலைவராகி விட்டதாலோ முன்னாள் முதல்வராக இருப்பதாலோ
துளியும் தயக்கம் தடுப்பதில்லை தோளில் கொடி தூக்குவதற்கு!

நெருக்கடி நெருப்பு நம்மைச் சூழ்ந்த காலத்தே நான்
சுருக்கமாய் எழுதிய என் பிறந்த நாள் செய்தியினை
நிறுத்தியே தீரவேண்டுமெனத் தணிக்கை அதிகாரி தடுக்கவே
அச்சிலே ஏற்றி அச்செய்தியை அண்ணா சாலையில்
துண்டு அறிக்கைகளாய் விநியோகித்திடத்
தோளில் கொடியேந்திச் சிறைப்பட்டவன் நான்.

★ தமிழர்களே தமிழர்களே!
என்னைக் கடலில் தூக்கி வீசினாலும் ,
அதில் கட்டுமரமாகத் தான் மிதப்பேன்.
அதில் ஏறி நீங்கள் சவாரி செய்யலாம்!



தமிழர்களே தமிழர்களே!
என்னை நீங்கள் நெருப்பில் தூக்கிப் போட்டாலும்,
அதிலே நான் விறகாகத்தான் விழுவேன்
அடுப்பெரித்து நீங்கள் சமைத்துச் சாப்பிடலாம்!

தமிழர்களே தமிழர்களே!
நீங்கள் என்னைப் பாறையில் மோதினாலும்
சிதறுத் தேங்காயாகத் தான் உடைவேன்.
நீங்கள் என்னை எடுத்துத் தின்று மகிழலாம்!

தமிழ் வெல்லும்
மு.க.

மு.க. ஸ்டாலின்
தமிழ்நாடு முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

21.05.2024

**அணிந்துரை**

**கலைஞர் கருவூலம்**

வீழ்ந்து கிடந்த தமிழ்ச் சமுதாயத்துக்கு விடிவெள்ளியாய்த் தோன்றி – வாழும் காலத்தில் ஒளிதரும் உதயசூரியனாக வாழ்ந்து – நிறைந்து பிறகும் கலங்கரை விளக்கமாக வழிகாட்டிக் கொண்டிருக்கிறவர்தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

உலகெங்கும் வாழும் தமிழர்களுக்கு எல்லாம் தமிழினத் தலைவர். இலக்கியவாதிகளுக்கு முத்தமிழறிஞர். கலையுலகத்தினருக்கு என்றும் கலைஞர். தலைவர்களுக்கு எல்லாம் தலைவர். முதல்வர்களுக்கு எல்லாம் முதல்வர். இந்திய அரசியலை வழிநடத்திய அரசியல் ஞானி. நவீன தமிழ்நாட்டின் சிற்பி. இப்படி தலைவர் கலைஞரை அடையாளப்படுத்திக் கொண்டே செல்லலாம். மொத்தத்தில் அவர் நமது அடையாளம்.

1924–ஆம் ஆண்டு உதயமானார் தலைவர் கலைஞர். அவரது நூற்றாண்டு விழாவைத் தமிழ்நாடு அரசு ஓராண்டு காலம் நடத்தத் திட்டமிட்டது. ஏனென்றால் கலைஞர் அவர்களின் புகழ்வாழ்வு என்பது, எத்தனை பாடினாலும் தீராத பாடுபொருளைக் கொண்டது.

கலைஞர் அவர்கள், ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராக அமர்ந்தவர்; 13 முறை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு 13 முறையும் வெற்றி பெற்றவர்; தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் அமர்ந்து அரிய வாதங்களை எடுத்து வைத்தவர்.

இந்திய நாட்டின் குடியரசுத் தலைவர்களை – துணைக் குடியரசுத் தலைவர்களை பல முறை தேர்ந்தெடுத்து அவர்களை அப்பொறுப்புகளில் அமர்த்தியவர். இந்தியாவின் பிரதமர்களைப் பல்வேறு முறை உருவாக்கியவர். தமிழ்நாட்டின் அரசியல் தலைவராக மட்டுமல்ல – இந்திய அரசியலின் திசையைத் தீர்மானிப்பவராகவும் அவர் இருந்தார்.

முதல் முறை ஆட்சிக்கு வந்தபோது, "நான் முதலமைச்சராக கோட்டையில் இருந்தாலும், அங்கிருந்தபடியே குடிசைகளைப் பற்றியே சிந்திப்பவன்" என்றார் கலைஞர் அவர்கள். அப்படித்தான் ஆட்சி நடத்தினார். குடிசைகளைக் கோபுரங்களாக மாற்றினார். சாமானியர்களைச் சாதனையாளர்களாக உயர்த்தினார். நவீனத் தமிழ்நாட்டை உருவாக்கினார்.

அத்தகைய தலைவர் கலைஞரின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவது என்பது நம்முடைய கடமையாகும். இவ்விழாக்கள் கலைஞரின் பன்முக ஆற்றலை வெளிப்படுத்துபவையாகவும், அவருக்கு நமது நன்றியைத் தெரிவிக்கும் விழாக்களாகவும் அமைய வேண்டும் என்று கருதி சில வழிகாட்டுதல்களை வழங்கி இருந்தேன்.

1. இதழாளர் – கலைஞர்
2. எழுத்தாளர் – கலைஞர்
3. கலைஞர் – கலைஞர்
4. சமூகநீதிக் காவலர் – கலைஞர்
5. பண்பாட்டுப் பாசறை – கலைஞர்
6. ஏழைப் பங்காளர் – கலைஞர்
7. சட்டமன்ற நாயகர் – கலைஞர்
8. பகுத்தறிவு, சீர்திருத்தச் செம்மல் – கலைஞர்
9. நவீனத் தமிழ்நாட்டின் சிற்பி – கலைஞர்
10. நிறுவனங்களின் நாயகர் – கலைஞர்
11. தமிழ்த்தாயின் தவப்புதல்வர் – கலைஞர்
12. தொலைநோக்குச் சிந்தனையாளர் – கலைஞர்

– ஆகிய 12 குழுக்கள் அமைக்கப்பட்டன. மூத்த அமைச்சர், அண்ணன் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களும், இந்திய ஆட்சிப்பணி அதிகாரிகளும், பன்முகத் திறமை கொண்ட ஆளுமைகளும் இக்குழுக்களில் இடம்பெற்று இருந்தார்கள். இக்குழுக்கள் சார்பில் தமிழ்நாடு முழுவதும் கடந்த ஓராண்டு காலத்தில் பல்வேறு நிகழ்ச்சிகள், விழாக்கள், கருத்தரங்குகள், போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன.

தலைவர் கலைஞரைப் போற்றும் ஆண்டாக கடந்த ஓராண்டு காலம் அமைந்திருந்தது. 12 குழுக்களின் சார்பில் நடத்தப்பட்ட அனைத்து நிகழ்வுகளும் இம்மலரில் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன. இந்நிகழ்வுகளை ஒருங்கிணைத்து நடத்திய அமைச்சர் பெருமக்களுக்கும், அரசு அதிகாரிகள், அலுவலர்களுக்கும், அனைத்து ஆளுமைகளுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவுக்கு மகுடம் சேர்க்கும் வகையில் 'தமிழரசு' இதழின் சார்பில் நூற்றாண்டு மலர் தொகுக்கப்பட்டு உங்கள் கையில் தவழ்கிறது. நூற்றாண்டு நாயகராம் தலைவர் கலைஞரை முழுமையாக அறிந்து கொள்ளும் கருவூலமாக இம்மலர் தயாரிக்கப்பட்டிருப்பதை அறிந்து மகிழ்கிறேன்.

தலைவர் கலைஞர் குறித்து 100 ஆளுமைகளின் கருத்துகள் இதில் இடம்பெற்றுள்ளன. காலத்தால் அழியாத தலைவர் கலைஞரின் 100 கவிதை வரிகள் இதில் இடம்பெற்றுள்ளன. ஆயிரக்கணக்கான திட்டங்களைத் தந்த கலைஞரின் முத்தான 100 திட்டங்கள் இதில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. கலைஞர் வாழ்வின் மிக முக்கியமான நாட்கள் 'நெஞ்சுக்கு நீதி'யின் சுருக்கத்தைப் போலத் தரப்பட்டுள்ளன. இவர்தான் கலைஞர் என்று சொல்லத்தக்க வகையில் இந்தப் பக்கங்கள் அமைந்துள்ளன.

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் இயக்குநர் இரா.வைத்திநாதன் இ.ஆ.ப. அவர்களுக்கும், தமிழரசு நிர்வாக ஆசிரியர் அண்ணா அவர்களுக்கும், ஆசிரியர் குழுவுக்கும், இம்மலர் குழுவுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தலைவர் கலைஞரின் வாழ்க்கை, நமக்கெல்லாம் பாடம் ஆகும். அவர் பாதையில் பயணிப்போம்.

அன்புடன்,



(மு.க.ஸ்டாலின்)

**மு.பெ. சாமிநாதன்**
தமிழ் வளர்ச்சி மற்றும்
செய்தித் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை-600 009


நாள் 22-05-2024

## வாழ்த்துச் செய்தி

"முத்தமிழறிஞர் கலைஞர்" அவர்கள், வலிமை வாய்ந்த எழுத்தாலும், தலைசிறந்த பேச்சாலும் தமிழ்நாட்டு வரலாற்றில் ஒரு மாபெரும் திருப்பு முனையை உருவாக்கிய வரலாற்று நாயகன், நான் போற்றி வணங்கும் மகத்தான உன்னத தலைவரின் திருப்பெயர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் உலக அரங்கில் தமிழன் உயர வேண்டும் என நினைத்து செயலாற்றியவர், தமிழும், தமிழ்ப்பண்பாடும் தரணியில் மேன்மை பெற வேண்டும் எனப் பாடுபட்டவர், தமிழ்நாட்டின் தொழில் வளம் சிறக்க வேண்டும் என செயல்பட்டவர், தமிழர்கள் தலைநிமிர்ந்து வாழ வேண்டும் என தன் வாழ்நாளெல்லாம் அரும்பாடுபட்டு ஓய்வெடுக்காமல் உழைத்து இன்று பேரறிஞர் அண்ணா அவர்களின் அருகில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அரும்பணிகளை வருங்கால இளைய தலைமுறையினரும் அறிந்து கொள்ளும் வகையில் அவரின் நூற்றாண்டு விழாவினை தமிழ்நாடு அரசு மிகச்சிறப்பாக கொண்டாடியது குறித்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இவ்வுலகம் உள்ளவரை கோடானு கோடி தமிழ் நெஞ்சங்களில் நிரந்தரமாக குடிகொண்டிருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினை முன்விட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட 12 குழுக்களின் பன்முகத் தன்மைகளை தாங்கி வெளியிடப்படும் "முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு மலர்" தமிழர்களின் கரங்களில் தவழ எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்!

அன்புடன்

22/5/24.

(மு.பெ.சாமிநாதன்)

**முனைவர் இல. சுப்பிரமணியன்,** இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.

## அணிந்துரை

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டு மக்களின் இதயங்களில் எழுத்தாலும், பேச்சாலும், கலையுலகத் தொண்டுகளாலும், ஆட்சிக் கலை நிர்வாகத் திறங்களாலும் எழுச்சியை ஏற்படுத்தி அவர்களின் எண்ணங்களில் பகுத்தறிவுச் சிந்தனைகளைப் புகுத்திச் செதுக்கிய **"நவீன தமிழ்நாட்டின் சிற்பி"** நாடு போற்றும் முதல்வர்களுள் முதன்மையானவர். அத்தகைய மகத்தான தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவது என்பது மிகவும் பெருமைக்கு உரியதாகும்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பன்முக ஆற்றலையும்,, அவர் நமக்குப் படைத்தளித்த பார்போற்றும் திட்டங்களையும் தமிழ்நாட்டின் இளைய தலைமுறையினர் என்றும் போற்றிப் பாதுகாக்கும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு நியமித்த 12 சிறப்புக் குழுக்களின் மூலம் பள்ளி, கல்லூரி மாணவர்கள், பெண்கள், பொதுமக்கள் ஆகியோருடன் இணைந்து கொண்டாடப்பட்ட விழாக்களையெல்லாம் தொகுத்து தயாரித்துள்ள **"முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா சிறப்பு மலர்"** தமிழ்நாடு அரசின் செய்தித் துறை **"தமிழரசு"** அச்சகத்தின் மூலம் வெளியிடப்படுவது மிகவும் போற்றுதலுக்குரியதாகும்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மலர் சிறப்புடன் வெளிவந்து மிளிரப் பெருந்தொண்டாற்றிய செய்தித் துறை அலுவலர்களுக்கு எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்

(முனைவர் இல. சுப்பிரமணியன்)

தொலைபேசி : 044–25672887, நிகரி : 044–25672021, மின்னஞ்சல் : tdinfosec@tn.gov.in

**மரு. இரா. வைத்திநாதன்,** இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர்

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை,
நாமக்கல் கவிஞர் மாளிகை (9–வது தளம்)
தலைமைச் செயலகம், சென்னை–600 009.
தொலைபேசி : 044–25671300
நிகரி : 044–25677777
மின்னஞ்சல் : dipr@tn.gov.in

## வாழ்த்துரை

திருக்குறளுக்கு உரை எழுதிய திருக்குவளை ஈன்றெடுத்த சங்கத் தமிழ் நாயகன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டு மக்களின் நலன்காக்க அறிவித்து நிறைவேற்றிய திட்டங்கள் அனைத்தும் மக்களுக்கு கொண்டு சேர்க்கும் விதமாக மாவட்டம் தோறும் கட்டுரை, பேச்சுப் போட்டிகள் மற்றும் பயன்தரத்தக்க பல்வேறு நிகழ்ச்சிகள் மூலமாக நூற்றாண்டு விழாவினை நடத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 12 சிறப்பு குழுக்களை அறிவித்து, நடத்தப்பட்ட விழா நிகழ்வுகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து **"முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா சிறப்பு மலர்"** ஒன்றினைச் செய்தித் துறை உருவாக்கியிருக்கிறது.

தமிழ்ச்சமுதாயத்தின் பாதுகாவலராகத் திகழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நினைவாக நடத்தப்பட்ட நூற்றாண்டு நிறைவு விழா சிறப்பு மலரில் இடம்பெற்றுள்ளவை அனைத்தும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புகழ்பாடும் கருவூலமாகும். அவை காண்போரின் கண்களுக்கும், கருத்திற்கும் விருந்து படைப்பவை.

இம்மலரைச் சிறப்புடன் உருவாக்கியுள்ள செய்தித் துறை அலுவலர்களைப் பாராட்டுகிறேன்.

இம்மலர் மலர்ந்து, மணம் வீச எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்,

(மரு.இரா. வைத்திநாதன்)



# திராவிடர் கழகம்

தலைமை நிலையம்:பெரியார் திடல், 84/1 (50), ஈ.வெ.கி.சம்பத் சாலை, வேப்பேரி, சென்னை-600 007, தமிழ்நாடு, இந்தியா. • தொலைபேசி: 91-44-26618161/62/63 • தொலைப்பதிவி: 91-44-26618866
• மின் அஞ்சல்: dkheadquarters@gmail.com • இணையதளம் : www.dravidarkazhagam.org

நிறுவனத் தலைவர்
**தந்தை பெரியார்**

தலைவர்
**கி.வீரமணி,** எம்.ஏ.,பி.எல்.,

நாள் : 24.05.2024

## “மானமிகு சுயமரியாதைக்காரரான” கலைஞரின் நூற்றாண்டு நிறைவு விழாவுக்கு வாழ்த்துகள்!

தமிழ்நாட்டின் தன்னிகரற்ற தலைவராகவும், ஒப்பற்ற முத்தமிழ் கலைஞராகவும், ஓய்வறியா உழைப்பின் உச்சமானவரும், எதிர்நீச்சல் போடுவதில் எம் தந்தை பெரியாரின் நகலாகவும், மானம் பாராத, நேரம் காலங்கருதாத வாழ்நாள் போராளியாகவும், தொண்டர்களை – தோழர்களை உயிரினும் மேலாகக் கருதி கொள்கைக் குடும்பத்தின் காவலராகவும், தனது 80 ஆண்டுக்கு மேற்பட்ட பொதுவாழ்வை, வெற்றிகரமாக நடத்தி வீரஉலா வந்த **“மானமிகு சுயமரியாதைக்காரன்”** என்பதையே தனது லட்சிய அடையாளமாகக் கொண்டு, உடலால் மறைந்தாலும், உணர்வாலும், சாதனைகளாலும் சரித்திரம் படைத்து நிலைத்த புகழின் கல்வெட்டாகவும், அவற்றிற்கெல்லாம் மேலாக **மாமனிதராகவும்** வாழ்ந்து பாடம் புகட்டும் நமது கலைஞருக்கு ஓராண்டு முழுவதும் நூற்றாண்டையொட்டி, நினைவிடம், நூலகம், பல்நோக்கு மருத்துவமனை போன்ற பல மக்கள் நலம் பெறும் திட்டங்களை தமிழ்நாடு அரசு செயலாக்கியுள்ளது. இப்போது நூற்றாண்டு நிறைவு விழாவை நாட்டு மக்களின் உரிமைகளைப் பேணி ‘திராவிட மாடல்’ அரசு கொண்டாடவிருப்பதையொட்டி, தமிழ்நாடு அரசின் செய்தித் துறை நிறைவு விழா மலர் வெளியிடுவது மிகவும் பாராட்டத்தக்க பெருமிதத்திற்குரியதாகும்.

மானமிகு கலைஞரின் தனிச் சிறப்பு – அறிவு ஆசான் தந்தை பெரியாரின் கட்டளையை ஏற்று, பெரியாரைத் துணைக் கொண்டு ஆட்சி நடத்திய பான்மையாகும்! அவரது அரசியல் ஆசான் அறிஞர் அண்ணா, “எனது மீதிப் பாதியை என் தம்பி கருணாநிதி எழுதுவார்” என்றார்! அந்த இருபெரும் தலைவர்களால் அடையாளம் காட்டப்பட்டு, ஆட்சியை, திராவிடத்தின் மீட்சியாக நடத்தி, புகழின் உச்சத்தைத் தொட்டு, அதன் மிச்சத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மூலம் வெளிவரச் செய்த அருஞ்சாதனையாளர் நம் கலைஞர்!

முத்தமிழறிஞரின் பாசறைப் பயிற்சியில் பக்குவப்பட்டு, களப்பணி முதல் ஆட்சிப் பணி வரை செய்யும் வகையில் அத்துணைத் துறைகளிலும் கொள்கை எதிரிகள் குலைநடுங்க நல்லாட்சி நடத்தும் நமது முதலமைச்சர் **சமூகநீதிக்கான சரித்திர நாயகர்,** திராவிட நாயகன் ஆட்சிக்கு வந்த இந்தக் காலகட்டத்தில், ‘தம்மின் தம்மக்கள் அறிவுடைமையை’ அகிலத்திற்கு காட்டிட மாட்சிமை நாயகன் ஆட்சிக்கு வந்த இந்தக் காலக்கட்டத்தில், ‘தம்மின் தம்மக்கள் அறிவுடைமையை’ அகிலத்திற்குக்க காட்டிட மாட்சிமை மிக்க இவ்வாட்சியால் முத்தமிழறிஞருக்கு, நூற்றாண்டு நிறைவு விழா நடத்தப்படுவது என்பது காலம் தந்த கருவூல நன்கொடையே!

மலர் சிறக்க, கொள்கை மணம் வீச, வரும் தலைமுறைக்கும் வரலாற்றுச் சுவடுகளாகத் திகழ நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகள்!

(கி.வீரமணி),
தலைவர்,
திராவிடர் கழகம்.

**S. PETER ALPHONSE**, B.Sc., B.L.,
Chairman
State Minorities Commission
Member: State Police Board
GOVERNMENT OF TAMIL NADU

735, Anna Salai,
LLA Building (3rd Floor),
Chennai - 600 002.
Phone No: 044-28510303
Fax No: 044-28515255
E-Mail: smcchairmantn@gmail.com

**த**லைவர் கலைஞர் ஒரு மாபெரும் சகாப்தம். வாழ்கின்றபோதே வரலாறாக வாழ்ந்தவர். ஒரு சாமானியர் எப்படி **“சரித்திர நாயகர்”** ஆனார் என்பதுதான் அவரது வாழ்க்கையின் கதை.

தொலைநோக்குப் பார்வையும், தன்னலமில்லா சிந்தனையும், சாதி, மதம், இனம் கடந்த பொதுநோக்கும், நீதிக்கு மட்டுமே தலைவணங்கும் சுயமரியாதை உணர்வும், ஏற்றுக்கொண்ட கொள்கைகளுக்காக எதையும் இழக்க தயாரான தியாக நெஞ்சும், தாய் தமிழின்மீது இறவாத காதலும் இவற்றையெல்லாம் நடைமுறைப்படுத்த ஓய்வறியாத உழைப்பும் ஒன்றாய்க் கலந்து வாழ்ந்த தலைவர் கலைஞர் ஒரு யுக புருஷர். தமிழ் சமுகத்திற்கு கிடைத்த வாராதுவந்த மாமணி.

அவர் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்ததும், அவர் அருகில் அமர்ந்து அவர் சுவாசித்த காற்றை சுவாசித்ததும், அவர் நடை தளர்ந்த காலங்களில் அவர் கைபிடிக்க தோள் கொடுத்ததும், கரகரத்த அவரது காந்தக்குரலில் **“அன்பிற்குரிய தம்பி பீட்டர்”** என்றழைக்கப்பட்டதும் வாழ்க்கை முழுவதும் நினைத்து நினைத்து பெருமைப்பட்ட கொடுப்பினைகள். இன்னும் எத்தனை பிறவிகள் கிடைத்தாலும் கிட்டாத பாக்கியங்கள்.

தாழ்ந்து கிடந்த தமிழ்ச் சமூகத்தை தனது தளராத உழைப்பு எனும் நெம்புகோலால் தூக்கி நிறுத்திய நம் காலத்தின் கதாநாயகனின் பெருமைகள் சொல்ல **“தமிழரசு”** நூற்றாண்டு விழா மலர் ஒன்று படைக்க இருப்பதறிந்து மகிழ்ச்சியடைகிறேன். நவீன தமிழகத்தின் அச்சாணியாக இயங்கி அதன் ஒவ்வொரு பரிணாமத்தையும் தன் நுண்மான் நுழைபுலத்தால் செதுக்கி செழுமைப்படுத்திய காலம் தந்த “பெருந்தச்சன்” தலைவர் கலைஞர்.

தமிழரசு இதழின் நூற்றாண்டு விழா சிறப்பு மலர் அம்மாபெரும் தலைவனின் புகழ் மகுடத்தில் மின்னும் வைரமாக ஜொலிக்கும் என்பதில் ஐயமில்லை. தலைவர் கலைஞர் அவர்களின் வாழ்நாள் சாதனைகளை தாங்கிவரும் நூற்றாண்டு விழா மலர் அவரது புகழ் பாடும் அழியாத ஆவணமாக என்றென்றும் விளங்கும்!

தங்கள் அன்புள்ள,

(சா.பீட்டர் அல்போன்ஸ்)

# தமிழரசு

தமிழ்நாடு அரசு

செய்தித்துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2055

வைகாசி - ஆனி

ஜூன் 2024

## கலைஞர் நூற்றாண்டு நிறைவு மலர் - ஜூன் 2024

### சிறப்பு மலர்

| | | |
|---|---|---|
| ஆசிரியர் - வெளியிடுபவர் | : | மரு. **இரா.வைத்திநாதன்,** இ.ஆ.ப.,<br>இயக்குநர்,<br>செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்<br>அலுவலால் அரசு துணைச் செயலாளர் |
| நிருவாக ஆசிரியர் | : | **இரா. அண்ணா**<br>இணை இயக்குநர் (வெளியீடுகள்) |
| முதன்மைப் பொறுப்பாசிரியர் | : | **க.அ. முகம்மது ரசூல்**<br>உதவி இயக்குநர் |
| பொறுப்பாசிரியர்கள் | : | **எஸ். உதயா கதிரவன்**<br>**ப. கருணாகரன்**<br>**ச. மஞ்சுளா**<br>செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள் |
| உதவி ஆசிரியர்கள் | : | **மு. மணிமேகலை**<br>**சி. சுஜிதா**<br>**இரா. பாலாஜி**<br>**கு. சுபாஷ்** |
| நிருபர்கள் | : | **எஸ்.ஆர்.எஸ்.ஸ்ரீந்தர்**<br>**ஜெ.ஜெயசிம்ஹன்** |
| ஓவியர் | : | **இரா. உமாமகேஸ்வரி** |
| இதழ் உதவியாளர் | : | **நி. ஷீலா** |
| கணினி வடிவமைப்பு | : | **தி. ஜெய்சங்கர்**<br>**க.இரா. உமாமகேஸ்வரி** |
| முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர் | : | **கோ. சந்திரசேகர்** |
| இளநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர் | : | **த. பிரியா** |

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

**தமிழரசு அலுவலகம்**

எண். 5, இராஜீவ் காந்தி சாலை, கானகம், தரமணி, சென்னை-600 113.

தொலைபேசி : 044 – 2254 2221 / 22542224

மின்னஞ்சல் : ddpub.tamilarasu@tn.gov.in,

இணையதளம் : www.tndipr.gov.in

# பொருளடக்கம்

நான் யார்? .................................................................. 02

இலச்சினை வெளியீட்டு விழா .................................................18

கலைஞரின் கொள்கைகள்தான் நமது இலட்சியங்கள்! ............... 20
- மாண்புமிகு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின்

பன்முக வித்தகர் கலைஞரின்
பரிமாணங்களைப் போற்றுவோம்! ........................................... 26

கலைஞரின் காலடிச் சுவடுகள் ................................................ 30

கலைஞர் பற்றி 100 ஆளுமைகள் .......................................... 38
- தொகுப்பு: ப.திருமாவேலன்

சாதனைகள் 100 (மட்டும்) ...................................................... 70

கனல் தெறிக்கும் கவிதை வரிகள் .......................................... 78
- தொகுப்பு: ப.திருமாவேலன்

கலைஞரின் படைப்புலகம் ...................................................... 98

பொருளாதாரத்துக்கு ஊக்க உணவு அளித்த கலைஞர் ............110
- ஜெ.ஜெயரஞ்சன்

எல்லோரையும் காத்த கலைஞரின் கொடை ..............................116
- என்.ராம்

தமிழ்நாட்டை வளர்த்த பெருமை அவரையே சேரும்! ................120
- ஏ.எஸ்.பன்னீர்செல்வம்

## கலைஞர் நூற்றாண்டு விழாக் குழுக்கள்:

இதழாளர் - கலைஞர் ....................................................126

எழுத்தாளர் - கலைஞர் ....................................................134

கலைஞர் - கலைஞர் ....................................................140

சமூக நீதிக் காவலர் - கலைஞர் ....................................................148

பண்பாட்டுப் பாசறை - கலைஞர் ....................................................152

ஏழைப் பங்காளர் - கலைஞர் .................................................... 158

சட்டமன்ற நாயகர் - கலைஞர் ....................................................164


பகுத்தறிவு சீர்திருத்தச் செம்மல் - கலைஞர் ....................................................170

நவீன தமிழ்நாட்டின் சிற்பி - கலைஞர் ....................................................178

நிறுவனங்களின் நாயகர் - கலைஞர் ....................................................184

தமிழ்த்தாயின் தவப்புதல்வன் - கலைஞர் .................................................... 190

தொலைநோக்குச் சிந்தனையாளர் - கலைஞர் ....................................................194


கலைஞர்
100
1924 - 2024




# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு இலச்சினை வெளியீட்டு விழா

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 02.06.2023 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி செய்தி மக்கள் தொடர்பு துறைத் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட மேற்கு வங்க மாநில முன்னாள் ஆளுநர் திரு. கோபாலகிருஷ்ண காந்தி அவர்கள் முன்னிலையில், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு இலச்சினையை வெளியிட்டார். முத்தமிழறிஞர்




கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டு மக்களின் நலனிற்காக ஆற்றிய பணிகள், நிறைவேற்றிய திட்டங்கள் குறித்த குறும்படத்தையும் வெளியிட்டார்.

செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி அமைக்கப்பட்ட புகைப்படக் கண்காட்சியைத் திறந்து வைத்துப் பார்வையிட்டார். இப்புகைப்படக் கண்காட்சியில் முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள், சாதனைகள், அவற்றால் மக்கள் பெற்ற பயன்கள், இளமை காலம் முதல் அவர் மேற்கொண்ட அரசியல் பயணம், பல்வேறு அரசியல் மற்றும் முக்கியத் தலைவர்களுடனான சந்திப்புகள் போன்றவை குறித்து காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.



# கலைஞரின் கொள்கைகள்தான் நமது இலட்சியங்கள்!

**மாண்புமிகு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 02.06.2023 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு இலச்சினையை வெளியிட்டு உரையாற்றினார்.

பாலர் இல்லமாக இருந்த இந்த இடத்தை தலைவர் கலைஞர் அவர்களால் கலைவாணர் அரங்கமாக ஆக்கப்பட்டு, அந்த கலைவாணர் அரங்கத்தில் நடைபெறும் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு இலச்சினை, அதாவது லோகோ வெளியீட்டு விழாவிற்குச் சிறப்பு சேர்க்கக்கூடிய வகையில் நம்முடைய பெருமதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய திரு.கோபாலகிருஷ்ண காந்தி அவர்கள் வருகை தந்திருக்கிறார்கள். தந்தை பெரியாரின் கொள்கை வாரிசான தலைவர் கலைஞரை வாழ்த்துவதற்காக மகாத்மா காந்தியின் பேரன் அவர்கள் இங்கே வருகை தந்திருக்கிறார்.

திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர்களாக நாங்கள் இருந்தாலும், அண்ணல் காந்தியடிகளுக்கும் எங்கள் இயக்கத்துக்குமான தொடர்பை மரியாதைக்குரிய திரு.கோபாலகிருஷ்ண காந்தி அவர்கள் நன்கு அறிவார்.



தந்தை பெரியார் அவர்கள் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்குவதற்கு முன்பு காங்கிரஸ் இயக்கத்தில் அண்ணல் காந்தியடிகளின் தொண்டராகத்தான் இருந்தார். கதராடை உடுத்தினார். கதர்த் துணிகளோடு நாடு முழுவதும் சுற்றினார். கள்ளுக்கடை மறியல் நடத்தினார். தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராகவும் இருந்தார். வகுப்புரிமையைக் காக்க தனி இயக்கம் தேவை என்பதால் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கினார் தந்தை பெரியார் அவர்கள்.

மதவெறியன் கோட்ஸேவால் மகாத்மா காந்தி அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டபோது, தந்தை பெரியார் அடைந்த வேதனை என்பது வார்த்தைகளால் விவரிக்க முடியாதது. "இருந்த காந்தி, அவர்கள் காந்தி! இறந்த காந்தி, எங்கள் காந்தி!" என்றார்.

அதே போல் பேரறிஞர் அண்ணா அவர்களும் அண்ணல் காந்தியடிகள் மீது மிகுந்த மதிப்பு வைத்திருந்தார்கள். 'உலகப் பெரியார் காந்தி' என்ற தலைப்பில் 1948ஆம் ஆண்டு ஒரு புத்தகம் எழுதினார் பேரறிஞர் அண்ணா. அண்ணல் காந்தி அவர்கள் கொல்லப்பட்ட போது,

**"காந்தியாரின் புகழொளியை அல்ல,**

**அவரது உழைத்து அலுத்த உடலைத்தான்**

**வெறியன் சுட்டு வீழ்த்தினான்"** – என்று

தனது '**திராவிட நாடு**' இதழில் எழுதினார்.

அந்த வரிசையில்தான் கலைஞர் அவர்களும் அண்ணல் காந்தியடிகள் மீது மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார்கள். நாங்கள் எப்படி அண்ணல் காந்தியடிகள் மீது மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறோமோ, அதைப் போல தந்தை பெரியார் – பேரறிஞர் அண்ணா – தலைவர் கலைஞர் – திராவிட இயக்கம் மீது மதிப்பு கொண்டவர் தான் நம்முடைய திரு. கோபாலகிருஷ்ண காந்தி அவர்கள்.

'திராவிடக் கப்பல் சென்றடைய வேண்டியது கூட்டாட்சித் துறைமுகம்' என்றும் சொன்னார். 'தந்தை பெரியாரின் இலட்சிய அரசியலை, பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் செல்வாக்கு, ஆட்சிப்பீடத்தில் அமர்த்தியது' என்றும் எழுதியவர் திரு.கோபாலகிருஷ்ண காந்தி அவர்கள். மேலும், 'பேரறிஞர் அண்ணா, கலைஞர் ஆகியோரின் அரசியல் என்பது ஏழைகளுக்கு ஆதரவான, உழவர்களுக்கு ஆதரவான, சாமானிய மக்களுக்கு ஆதரவான, சாதியத்துக்கு எதிரான, மதவாதத்துக்கு எதிரான கொள்கைகளின் வழியே ஆட்சியதிகாரத்தை அணுகுவது' என்றும் எழுதியிருக்கிறார்.

தமிழ்நாட்டில் உள்ள சிறைச்சாலைகளில் கனரக சலவை இயந்திரங்கள் வழங்கிய போது அதனை கோபாலகிருஷ்ண காந்தி அவர்கள் மனந்திறந்து பாராட்டினார்.

அண்ணல் காந்தியடிகளின் பேரனான அவர் இங்கு வருகை தந்து, கலைஞரையும், எங்களது ஆட்சியையும் பாராட்டிப் பேசியது எனக்கு வாழ்நாளில் கிடைத்தற்கரிய மாபெரும் பேறு! இந்த பெயரைக் காப்பாற்றும் வகையில் நான் நடந்து கொள்வேன் என்று மரியாதைக்குரிய திரு.கோபாலகிருஷ்ண காந்தி அவர்களுக்கு நான் உறுதி அளிக்கிறேன்.

நாளைய தினம் ஜூன் 3ஆம் நாள்!

வீழ்ந்து கிடந்த தமிழ்ச் சமுதாயத்துக்கு விடிவெள்ளியாய்த் தோன்றி – வாழும் காலத்தில் ஒளிதரும் உதயசூரியனாக வாழ்ந்து – நிறைந்த பின்பும் கலங்கரை விளக்கமாக வழிகாட்டிக்




கொண்டிருக்கிற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தோன்றிய நாள். அவரது பிறந்த நாள் என்பதைவிட, தமிழ்ச் சமுதாயத்திற்கு உயிராக உணர்வாக இருந்தவர் – உதயமான நாள் என்றே சொல்ல வேண்டும்.

கலைஞரின் நூற்றாண்டு விழாவை தமிழ்நாடு அரசு ஓராண்டு காலம் கொண்டாடத் திட்டமிட்டுள்ளது. ஏனென்றால், கலைஞர் அவரே தமிழ்நாடு அரசு ஆவார். என் தலைமையிலான இந்த திராவிட மாடல் அரசையே அவருக்கும், அவரது புகழுக்கும் நான் காணிக்கை ஆக்குகிறேன். இந்த நவீனத் தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பி என்றால் தலைவர் கலைஞர் அவர்கள்தான். அவர் தொடாத துறையும் இல்லை, தொட்டுத் துலங்காத துறையும் இல்லை என்ற வகையில் அனைத்துத் துறையிலும் முத்திரை பதித்தவர்.

அவர் அமைத்துக் கொடுத்த பாதையில் தான் அனைத்துத் துறைகளும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. பொதுநலனும் தொலைநோக்குப் பார்வையும் கொண்ட அரசாங்கத்தைக் கலைஞர் அவர்கள் நடத்தினார். அதனால்தான் ஐந்து முறை இந்த மாநிலத்தை ஆட்சி செய்யும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது.

விடுதலை இந்தியாவில் நடந்த 13 சட்டமன்றத் தேர்தல்களில் நின்று – வென்று காட்டிய வெற்றி வீரராக அவர் இருந்ததற்கு இதுதான் காரணம் – மக்களோடு மக்களாக இருந்ததுதான். அவர் மக்களின் மனங்களில் என்றும் ஆட்சி செய்கிறார், இன்றும் வாழ்கிறார் கலைஞர். இலக்கியவாதிகளுக்கு எல்லாம் இலக்கியவாதியாக, கவிஞர்களுக்கு எல்லாம் கவிஞராக, அரசியல் தலைவர்களுக்கு எல்லாம் தலைவராக, முதலமைச்சர்களுக்கு எல்லாம் முதல்வராகத் திகழ்ந்த தலைவர் கலைஞருடைய நூற்றாண்டு விழாவை ஆண்டு முழுவதும் கொண்டாடத் தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது. அதுகுறித்த இலச்சினையை (லோகோ) வெளியிட்டு இருக்கிறோம்.

கலைஞர் பெயரால் மாபெரும் நூலகம் மதுரையில் அமைய இருக்கிறது. சென்னையில் அவரது நூற்றாண்டு நினைவு மருத்துவமனை அமைய இருக்கிறது. அரசின் சார்பில் மாதந்தோறும் – மாவட்டந்தோறும் விழாக்களை நடத்த இருக்கிறோம். இவை புகழ்பாடும் விழாக்களாக மட்டுமல்ல – கலைஞர் இந்த தமிழ்ச் சமுதாயத்திற்குச் செய்த சாதனைகளை விளக்கும் விழாக்களாக அமைய இருக்கின்றன. பயன்பெற்றோர் பங்கேற்கும் விழாக்களாக அமைய இருக்கின்றன.

கடந்த ஐம்பது ஆண்டுகால தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும், மேன்மைக்கும் அடித்தளம் அமைத்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். தொலைநோக்குப் பார்வையும் மிகச் சரியான திட்டமிடுதலும் மக்கள் மீது உண்மையான பற்றும் கொண்ட தலைவரால்தான் இப்படிச் செயல்பட முடியும் என்பதை தலைவர் கலைஞர் அவர்கள் மெய்ப்பித்துக் காட்டினார்கள்.

அவர் உருவாக்கிய பள்ளிகள் – கல்லூரிகள் நிறுவனங்கள் தொழிற்சாலைகள் – நகரங்கள் மிகப்பெரிய வளர்ச்சியைத்தான் நாம் இப்போது பார்த்துக்கொண்டிருக்கிறோம். அவரால் பள்ளிப்படிப்பை படித்தவர்கள் – கல்லூரிக் கல்வியைத் தொட்டவர்கள் – பொருளாதார விடுதலை அடைந்த மகளிர் – வேலைவாய்ப்பைப் பெற்ற அரசு ஊழியர்கள் – பணியாற்ற இடம் பெற்ற தொழிலாளர்கள் – இப்படி கோடிக்கணக்கான மக்களின் நல்வாழ்க்கையோடு தொடர்புடையவர் நம்முடைய தலைவர் கலைஞர்.

இன்றைய சென்னையிலும், சென்னையைச் சுற்றியிருக்கக்கூடிய திருவள்ளூர் – காஞ்சிபுரம் மாவட்டங்களில் இந்தளவுக்கு தொழில் நிறுவனங்கள் உதயமாகி இருக்கிறது என்றால், அதற்குக் காரணம் கலைஞர் ஆட்சிக்காலம் தான் என்பதை யாரும் மறந்திருக்க முடியாது. அதேபோன்ற தொழில் புரட்சியைத்தான் இன்று நமது திராவிட மாடல் அரசும் உருவாக்கி வருகிறது.

கடந்த சில நாட்களுக்கு முன்னால் சிங்கப்பூர், ஜப்பான் ஆகிய நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு தமிழ்நாட்டை நோக்கி ஏராளமான தொழில் முதலீடுகளை ஈர்த்து வந்துள்ளேன். ரூ.3233 கோடி மதிப்பிலான ஒப்பந்தங்களும் கையெழுத்தாகி இருக்கிறது.

வருகிற ஜனவரி மாதம் சென்னையில் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்த இருக்கிறோம். அந்த மாநாட்டில் கலந்துகொள்ள வேண்டும் என்று சிங்கப்பூர், ஜப்பான் முதலீட்டாளர்களுக்கு நான் அழைப்பு விடுத்திருக்கிறேன். தமிழ்நாட்டின் மீதும் திராவிட முன்னேற்றக் கழக அரசு மீதும் அவர்கள் வைத்திருக்கக்கூடிய மதிப்பையும் மரியாதையையும் அப்போது நான் அறிந்து கொண்டேன்.

தமிழ்நாட்டின் வளர்ச்சியையும், உட்கட்டமைப்பு வசதிகளையும் சிங்கப்பூர், ஜப்பான் தொழில் நிறுவனங்கள் அறிந்து வைத்திருக்கிறது. இந்தியாவில் முதலீடு செய்யும் போது நிச்சயமாக, தமிழ்நாட்டில்தான் எங்களது நிறுவனங்களைத் தொடங்குவோம் என்று அவர்கள் உறுதி அளித்திருக்கிறார்கள். இதற்கெல்லாம் காரணம், தலைவர் கலைஞர் அமைத்துக் கொடுத்த அடித்தளம் தான்.

சிங்கப்பூர் மக்களிடத்திலே, தமிழர்களிடத்திலே நான் உரையாற்றும்போது தலைவர் கலைஞர் அவர்கள் பெயரைச் சொன்னாலே கைதட்டுகிறார்கள். தமிழ்நாட்டுத் தமிழர்களுக்கு மட்டுமல்ல – உலகெங்கும் வாழக்கூடிய தமிழினத்தின் தலைவராக தலைவர் கலைஞர் அவர்கள் செயல்பட்டார் என்பதை அவர்கள் பெருமிதத்தோடு சொல்கிறார்கள். அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை தமிழ்நாடே கொண்டாட இருக்கிறது. உலகெங்கும் வாழும் தமிழர்கள் கொண்டாட இருக்கிறார்கள்.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞருடைய நூற்றாண்டு விழாக்களை முன்னெடுக்க அமைச்சர்கள், அரசு உயர் அலுவலர்கள், பல்வேறு துறையைச் சார்ந்த வல்லுநர்கள் கொண்ட குழுக்கள் விரைவில் அமைக்கப்படும், இரண்டொரு நாட்களில் அது வெளி



யிடப்படும். அந்தக் குழுக்கள் முத்தமிழறிஞர் கலைஞருடைய பன்முக ஆற்றலால் நிகழ்த்தப்பட்டிருக்கக்கூடிய சாதனைகள், மக்கள் பணிகளைக் கொண்டாடும் விதமாக நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து இந்த ஆண்டு முழுவதும் தமிழ்நாடு முழுக்க மிகச் சிறப்பான வகையில் எழுச்சியோடு நடத்தப்படும் என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு நான் அறிவிக்கிறேன்.

தலைவர் கலைஞர் என்பவர் தனிப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சொத்து அல்ல; தமிழ்நாட்டின் சொத்து! உலகத் தமிழர்களின் சொத்து!

தலைவர் கலைஞர் அவர்களுக்கு மாபெரும் கனவு இருந்தது. உலகில் தலைசிறந்தவர்களாக தமிழர்கள் வலம் வர வேண்டும் என்று அவர் நினைத்தார். அதைப் போலவே, உலகத்தவர் அனைவரும் வலம் வரும் இடமாக தமிழ்நாட்டை ஆக்கிக் காட்ட வேண்டும் என்றும் நினைத்தார்.

இந்தியாவில் எந்த மாநிலமும் முன்னெடுக்காதபோது, 1997ஆம் ஆண்டே டைடல் பார்க்கை உருவாக்கி தகவல் தொழில்நுட்பத் துறையில் புரட்சியை ஏற்படுத்தியவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். அந்தத் துறையில் தமிழ்நாடு மாபெரும் சாதனையை நிகழ்த்துவதற்கும், உலக நிறுவனங்கள் அனைத்தும் தமிழ்நாட்டை நோக்கி வருவதற்கும் வாசலைத் திறந்து வைத்தது கலைஞர் உருவாக்கிய அந்த டைடல் பார்க் தான்.

அந்த வகையில் – நவீன தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பியான தலைவர் கலைஞரின் நூற்றாண்டு தொடங்குவதை ஒட்டி அவருக்கு, அவருடைய புகழுக்கு மேலும் மேலும் புகழ் சேர்க்கும் வகையில், ஓர் அறிவிப்பை நான் வெளியிட விரும்புகிறேன்.

தலைநகர் சென்னையில் உலகத்தரம் வாய்ந்த பன்னாட்டு அரங்கம் அமைக்கப்படும். உலகளவில் உள்ள கூட்ட அரங்கங்களில் மகத்தான "BEST IN CLASS" Convention Centerஆக இது அமைய வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

உலகளாவிய தொழில் கண்காட்சிகள் வர்த்தக மாநாடுகள் தொழில்நுட்பக் கூட்டங்கள் – உலக நிறுவனங்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகள் – உலகத் திரைப்பட விழாக்கள் – போன்றவை நடக்கும் இடமாகக் 'கலைஞர் Convention Centre' அமைய வேண்டும் என எண்ணுகிறேன். இது, சிங்கப்பூர், ஜப்பான் பயணத்தின்போது எனக்கு ஏற்பட்ட எண்ணம்!

மிகப்பெரிய Convention Centre-கள் உலகின் பல நாடுகளில் இருப்பதுபோல தமிழ்நாட்டில் – சென்னையில் இருக்கிறது. அதுவும் கலைஞர் பெயரால் இருக்கிறது என்பதுதான் மாபெரும் பெருமையாக இருக்கும். Convention Centre போன்ற பயன்பாட்டுச் சின்னங்கள் கலைஞர் புகழை நூற்றாண்டுகள் கடந்தும் – உலகமெங்கும் எடுத்துச் செல்லும்.

ஏற்கெனவே, தற்போது சென்னை நந்தம்பாக்கத்தில் 10 ஆயிரம் சதுர மீட்டர் பரப்பளவில் வர்த்தக மையம் அமைந்திருந்தாலும், கூடுதலாக கட்டப்பட்டு வரும் வர்த்தக மையம் சுமார் 12 ஆயிரம் சதுர மீட்டர் அளவில் அது இருந்தாலும், இது வளர்ந்து வரும் தேவைக்கும், எதிர்காலத் தேவைக்கும் போதுமானதாக இல்லை. எனவே, இதனைக் கருத்தில் கொண்டு அமையவுள்ள இந்த 'கலைஞர் Convention Centre' சுமார் 25 ஏக்கர் பரப்பளவில் 5 ஆயிரம் நபர்கள் அமரக்கூடிய – உலகத்தரத்திலான மாநாட்டு அரங்கம், கண்காட்சி அரங்கங்கள், நட்சத்திரத் தரத்திலான தங்கும் விடுதிகள், உணவகங்கள், ஊடக அரங்கங்கள், பூங்காக்கள், பன்னடுக்கு வாகன நிறுத்தம் ஆகியவற்றை உள்ளடக்கி மிகப்பிரம்மாண்டமாக உலகத் தரத்தில் சென்னையில் அமைக்கப்படும் என்பதை பெருமையோடும், மகிழ்ச்சியோடும் தெரிவித்துக்கொள்கிறேன்.

'கலைஞர் convention centre' என்பது தமிழ்நாட்டு இளைய சக்தியை, அறிவு சக்தியை பூமிப்பந்தில் உள்ள அனைத்து இடங்களுக்கும் அழைத்துச் செல்வதாக அமையும்.

'நான் முதல்வன்' என்ற திட்டத்தின் மூலமாகப் பயிற்சி பெற்று வரும் இலட்சக்கணக்கான தமிழ்நாட்டு மாணவர்களுடைய, இளைஞர்களுடைய அறிவுக்குடியிருப்பாக 'கலைஞர் convention centre' அமையுமானால் காலமெல்லாம் கலைஞர் வாழ்வார்! அதுவே நம்மை ஆளாக்கிய தலைவருக்கு நாம் செய்யக்கூடிய சிறப்பான, உண்மையான புகழாக இருக்கும்.

**கலைஞரின் முகம்தான் நமது இலச்சினை!**

**கலைஞரின் கொள்கைகள்தான் நமது இலட்சியங்கள்!**

கலைஞரின் கனவுகளை நிறைவேற்றுவதுதான் நமது வாழ்நாள் கடமை என்பதைச் சொல்லி முத்தமிழறிஞர் கலைஞரின் புகழ் இன்னும் பல நூற்றாண்டுகள் கடந்து, வாழ்க, வாழ்க, வாழ்க.

★★★


தமிழ்நாடு அரசு
தலைமைச் செயலகம்
காலம் பொன் போன்றது
கடமை கண் போன்றது




# பன்முக வித்தகர் கலைஞரின் பரிமாணங்களைப் போற்றுவோம்!

## 12 குழுக்கள் அமைத்து மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவு

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை சிறப்பாகக் கொண்டாட மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் தலைமையில் குழுக்கள் அமைத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவு

ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தவரும், 13 முறை சட்டமன்றத் தேர்தல்களில் போட்டியிட்டு, 13 முறையும் வெற்றி பெற்றவரும், தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், தமிழ்நாட்டின் அரசியல் தலைவராக மட்டுமல்லாமல், இந்திய அரசியலின் திசையைத் தீர்மானிப்பவராகவும் திகழ்ந்த நூற்றாண்டு நாயகர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பன்முக ஆற்றலையும், அவர் படைத்தளித்த மக்கள் நலத் திட்டங்களையும் தமிழ்நாட்டின் வருங்காலத் தலைமுறையினர் என்றென்றும் நினைவில் போற்றும் வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மாநிலம் முழுவதும் ஜூன் 2023 திங்கள் முதல் ஜூன் 2024 திங்கள் வரை தமிழ்நாடு அரசால் கொண்டாட முடிவு செய்யப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை தமிழ்நாடு அரசின் சார்பில் சிறப்பாகக் கொண்டாடுவது குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 22.05.2023 அன்று தலைமைச் செயலகத்தில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.




இக்கூட்டத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நவீன தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பி 'தமிழினத் தலைவர்' கலைஞர் அவர்களை பெருமைப்படுத்தும் விழாக்களாக மட்டுமல்லாமல், அவர் தமிழ்நாட்டு மக்களின் நலனிற்காக அறிவித்து, நிறைவேற்றிய திட்டங்களை இளைய சமுதாயத்தினர் அறிந்து கொள்ளும் வகையில் இந்த விழாக்கள் அமைய வேண்டும் என்றும், மாதந்தோறும் ஒவ்வொரு பொருளின் அடிப்படையில் இந்த விழாக்களை நடத்திட வேண்டும் என்றும், பெரிய அளவிலான விழாக்களாக மட்டுமல்லாமல், அனைத்துத் தரப்பினரும் பங்கெடுக்கும் விழாக்களாக இவற்றை நடத்த வேண்டும் என்றும் தெரிவித்தார். மேலும், அரசு நடத்துவதாக மட்டுமல்லாமல் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், மாணவர்கள், பெண்கள், அரசு ஊழியர்கள், பயனடைந்த மக்கள் ஆகியோர் இணைந்து கொண்டாடுவதாக அமைய வேண்டும் என்றும் தெரிவித்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பல்வேறு திறமைகள் கொண்ட பன்முக வித்தகர். அவர் தமிழ்நாட்டிற்கு ஆற்றிய அரும்பணிகளில் அவரின் பரிமாணங்களை போற்றும் வகையில்

**இதழாளர் – கலைஞர்**

**எழுத்தாளர் – கலைஞர்**

**கலைஞர் – கலைஞர்**

**சமூக நீதிக் காவலர் – கலைஞர்**

**பண்பாட்டுப் பாசறை – கலைஞர்**

**ஏழைப் பங்காளர் – கலைஞர்**







**சட்டமன்ற நாயகர் – கலைஞர்**

**பகுத்தறிவு, சீர்திருத்தச் செம்மல் – கலைஞர்**

**நவீன தமிழ்நாட்டின் சிற்பி – கலைஞர்**

**நிறுவனங்களின் நாயகர் – கலைஞர்**

**தொலைநோக்குச் சிந்தனையாளர் – கலைஞர்**

**தமிழ்த்தாயின் தவப்புதல்வன் – கலைஞர்**

இத்தலைப்புகளில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் தலைமையில் இணைத் தலைவர்கள், உறுப்பினர் செயலர் மற்றும் உறுப்பினர்கள் கொண்ட 12 குழுக்கள் அமைத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இக்குழுக்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பன்முகத்தன்மையை பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், மாணவர்கள், பெண்கள், அரசு ஊழியர்கள், பயனடைந்த மக்கள் ஆகியோருடன் இணைந்து எவ்வாறு கொண்டாடப்பட வேண்டும் என்பதற்கான ஆலோசனைகளை வழங்குவதோடு மட்டுமல்லாமல், பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் பயன்பெறும் விழாக்களாக அமைய வேண்டும் என்பதற்கான திட்டப் பணிகளை மேற்கொண்டு, அரசுடன் இணைந்து விழாக்களை சிறப்பாக நடத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

★★★




# கலைஞரின் காலடிச் சுவடுகள்




# கலைஞரின் மறக்க முடியுமா?

## (1924 - 2018)

| | | |
|---|---|---|
| *03.06.1924* | – | கலைஞர் பிறந்தார் |
| *18.04.1942* | – | முரசொலி இதழ் தொடக்கம் |
| *28.08.1944* | – | சாந்தா அல்லது பழனியப்பன் நாடகம் முதன்முதலாக திருவாரூரில் அரங்கேற்றம் |
| *11.04.1946* | – | வசனம் எழுதிய ‘**ராஜகுமாரி**’ படம் வெளியானது. |
| *06.05.1948* | – | வசனம் எழுதிய ‘**அபிமன்யூ**’ படம் வெளியானது. |
| *19.09.1949* | – | திராவிட முன்னேற்றக் கழகம் தொடக்கம், கழக பொதுக்குழு, பிரச்சாரக் குழு உறுப்பினர் ஆனார். |
| *02.04.1950* | – | கதை, வசனம் எழுதிய ‘**மருதநாட்டு இளவரசி**’ படம் வெளியானது. |
| *24.06.1950* | – | கதை, வசனம், பாடல் எழுதிய ‘**மந்திரிகுமாரி**’ படம் வெளியானது. |
| *15.08.1951* | – | திரைக்கதை வசனம் எழுதிய ‘**மணமகள்**’ படம் வெளியானது. |
| *14.12.1951* | – | திமுக முதல் மாநில மாநாட்டில் முதல் உரையாற்றினார். |
| *17.10.1952* | – | திரைக்கதை, வசனம், பாடல்கள் எழுதிய ‘**பராசக்தி**’ வெளியானது. |
| *27.12.1952* | – | திரைக்கதை, வசனம் எழுதிய ‘**பணம்**‘ வெளியானது. |
| *04.01.1953* | – | நெசவாளர் துயர் துடைக்க கைத்தறித் துணிகளை தோளில் சுமந்து விற்றார். |
| *15.07.1953* | – | கல்லக்குடி போராட்டத்தில் தண்டவாளத்தில் தலை வைத்துப் படுத்ததால் கைது செய்யப்பட்டு 6 மாத காலம் சிறை வைக்கப்பட்டார். |
| *03.03.1954* | – | திரைக்கதை வசனம் எழுதிய ‘**மனோகரா**’ படம் வெளியானது. |
| *04.05.1957* | – | குளித்தலை தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக சட்டமன்றத்துக்குள் சென்று முதன்முதலாக உரையாற்றினார். |
| *16.05.1957* | – | கதை வசனம் எழுதிய ‘**புதையல்**’ படம் வெளியானது. |
| *22.02.1958* | – | ‘உதயசூரியன்’ நாடகம் முதன்முதலாக தேவகோட்டையில் நடைபெற்ற ராமநாதபுரம் மாவட்ட மாநாட்டில் அரங்கேற்றப்பட்டது. |
| *01.03.1958* | – | உதயசூரியன் சின்னம் அதிகாரப்பூர்வமாக தேர்தல் ஆணையத்தின் மூலமாகக் கிடைத்தது. |
| *25.09.1960* | – | திமுக பொருளாளராகத் தேர்வு ஆனார். |
| *19.07.1962* | – | விலைவாசிப் போராட்டத்தில் பங்கேற்று கைதானார். |
| *26.10.1963* | – | கதை, வசனம் பாடல்கள் எழுதிய ‘**காஞ்சித் தலைவன்**’ வெளியானது. |
| *15.06.1964* | – | திமுக பொருளாளராக இருந்தபோது ‘**அன்பகம்**’ கட்டடம் வாங்கி கழகத்துக்கு சொந்தமாக்கினார். |



*18.09.1964* – திரைக்கதை, வசனம், பாடல் எழுதிய ‘**பூம்புகார்**’ வெளியானது.

*16.02.1965* – இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைத் தூண்டியதற்காக தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு பாளை சிறையில் அடைக்கப்பட்டார்.

*12.08.1966* – திரைக்கதை,வசனம்,பாடல் எழுதிய ‘**மறக்கமுடியுமா?**’ வெளியானது.

*18.09.1966* – காகிதப்பூ நாடகம் முதன்முதலாக அரங்கேற்றம்.

*29.12.1966* – தேர்தல் நிதியாக 11 லட்சம் வழங்கினார்.

*06.03.1967* – மாண்புமிகு முதலமைச்சர் அண்ணா அவர்களின் அமைச்சரவையில் பொதுப்பணி போக்குவரத்துத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றார்.

*22.10.1968* – ‘ஜாக்குலின்கள்’ என்பது அவர் எழுதிய முதல் கடிதம் ஆகும். ‘அன்பு நண்பா’ எனத் தொடங்கி ‘அன்புள்ள மறவன்’ என முடிகிறது.

*03.02.1969* – பேரறிஞர் அண்ணா மறைவு

*09.02.1969* – சட்டமன்றக் கட்சித் தலைவராக கலைஞர் தேர்வு செய்யப்பட்டார்.

*10.02.1969* – மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் தலைமையிலான முதல் அமைச்சரவை பொறுப்பேற்றது.

*27.07.1969* – திமுக தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

*22.02.1970* – திருச்சி மாநாட்டில் ஐம்பெரும் முழக்கங்களை வழங்கினார்.

*15.03.1971* – சைதாப்பேட்டை தொகுதியில் வென்று இரண்டாம் முறையாக தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார்.

*23.06.1972* – கதை, வசனம் எழுதிய ‘பிள்ளையோ பிள்ளை’ படம் வெளியானது.

*24.12.1973* – தந்தை பெரியார் உடலை அரசு மரியாதையுடன் அடக்கம் செய்தார்.

*20.04.1974* – சட்டமன்றத்தில் மாநில சுயாட்சி தீர்மானம் நிறைவேற்றினார்.

*15.08.1974* – மாநில முதலமைச்சர்கள் சுதந்திர தினத்தன்று கொடியேற்றலாம் என்ற உரிமையைப் பெற்றுத் தந்து கொடியேற்றினார்.



*18.09.1974* – வள்ளுவர் கோட்டத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

*27.06.1975* – நெருக்கடி நிலைக்கு எதிராக தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றினார்.

*21.09.1975* – சென்னை அண்ணா சாலையில் திராவிடர் கழகம் சார்பில் கலைஞருக்கு சிலை அமைக்கப்பட்டது.

*30.01.1976* – திமுக ஆட்சிக் கலைப்பு

*01.02.1976* – திமுகழகத்தினர் கைது படலம் தொடக்கம். இன்றைய முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் அன்றைய தினம் கைது செய்யப்பட்டார்.

*02.06.1976* – ‘முரசொலி’யில் எழுதிய அறிக்கையை வெளியிட தடை வந்ததை எதிர்த்து அண்ணா சாலையில் துண்டறிக்கைகள் கொடுத்து போராட்டம் நடத்தினார்.

*30.10.1978* – திரைக்கதை, வசனம் எழுதிய ‘வண்டிக்காரன் மகன்’ படம் வெளியானது.

*20.07.1980* – திமுக இளைஞரணியைத் தொடங்கி வைத்தார்.

*15.09.1981* – ஈழத்தமிழர் உரிமைக்காக போராடி சிறை வைக்கப்பட்டார்.

*02.02.1982* – திருச்செந்தூர் அறங்காவலர் மரணத்துக்கு நீதி கேட்டு மதுரை முதல் திருச்செந்தூர் வரை நடைபயணம் தொடங்கினார்.

*28.05.1982* – கதை, வசனம், பாடல் எழுதிய ‘தூக்குமேடை’ படம் வெளியானது.

*1983* – ஈழத்தமிழர் படுகொலையைக் கண்டித்து சட்டமன்ற உறுப்பினர் பொறுப்பை விட்டு விலகினார்.

*1984* – தமிழ்நாடு சட்டமன்ற மேலவை எதிர்க்கட்சித் தலைவர் ஆனார்.

*17.02.1985* – கலைஞரின் ‘குறளோவியம்‘ நூல் வெளியானது.



| | | |
|---|---|---|
| 03.05.1986 | – | ஈழத்தமிழர் உரிமைக்காக மதுரையில் தமிழ் ஈழ ஆதரவாளர் மாநாட்டை அகில இந்தியத் தலைவர்களை வரவழைத்து நடத்தினார். |
| 01.11.1986 | – | திரைக்கதை, வசனம் எழுதிய 'பாலைவன ரோஜாக்கள்' படம் வெளியானது. |
| 30.01.1987 | – | இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து கைது செய்யப்பட்டார். |
| 8.05.1987 | – | கதை, வசனம், பாடல் எழுதிய 'ஒரே ரத்தம்' படம் வெளியானது. |
| 12.08.1987 | – | கலைஞரின் கடிதங்கள் 10 தொகுதிகள் வெளியானது. |
| 26.08.1987 | – | கலைஞரின் சங்கத்தமிழ் நூல் வெளியானது. |
| 15.09.1987 | – | அண்ணா அறிவாலயம் திறந்தார். |
| 17.09.1988 | – | தேசிய முன்னணி தொடக்க விழா மாநாட்டை நடத்தினார். |
| 27.01.1989 | – | துறைமுகம் தொகுதியில் வென்று மூன்றாவது முறையாக தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். |
| 28.03.1989 | – | மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 20 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கினார். |
| 06.05.1989 | – | பெண்களுக்கு சொத்துரிமைச் சட்டம் கொண்டுவந்து நிறைவேற்றினார். |
| 25.05.1990 | – | மாமன்னன் ராசராச சோழன் விருது பெற்றார். முத்தமிழறிஞர் பட்டமும் வழங்கப்பட்டது. |
| 22.06.1990 | – | பழங்குடியின மக்களுக்கு ஒரு விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கினார். |
| 07.08.1990 | – | முதலமைச்சர் கலைஞரின் கோரிக்கையை ஏற்று மண்டல் ஆணையத்தின் பரிந்துரையை பிரதமர் வி.பி.சிங் அவர்கள் நிறைவேற்றினார். |
| 30.01.1991 | – | மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் தலைமையிலான திமுக ஆட்சி கலைக்கப்பட்டது. |
| 1991 | – | துறைமுகம் தொகுதியில் வென்ற கலைஞர், பதவி விலகினார். |
| 13.05.1996 | – | துறைமுகம் தொகுதியில் வென்று நான்காவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். |
| 15.04.1996 | – | திருக்குறள் கலைஞர் உரை வெளியானது. |
| 03.06.1998 | – | கலைஞரின் 75 ஆவது பிறந்தநாள் பவளவிழாவாகக் கொண்டாடப்பட்டது. |
| 01.01.2000 | – | குமரி முனையில் 133 அடியில் திருவள்ளுவருக்கு சிலை அமைத்து திறந்து வைத்தார். |
| 04.07.2000 | – | தரமணியில் டைடல் பார்க் திறந்து வைத்தார். |
| 30.07.2001 | – | நள்ளிரவில் மிகக் கொடூரமான முறையில் கைது செய்யப்பட்டார். |
| 02.07.2005 | – | சேதுசமுத்திரத் திட்டத்தை தொடங்கி வைத்தார். |
| 13.05.2006 | – | திருவாரூர் தொகுதியில் வென்று ஐந்தாவது முறை முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். கிலோ அரிசி 2 ரூபாய்க்கு வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார். |
| 16.05.2006 | – | அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் சட்டத்தைக் |

| | | |
|---|---|---|
| | | கொண்டு வந்தார். |
| 02.06.2006 | – | கலைஞரின் சிந்தனையும், செயலும் – காலப் பேழையும், கவிதைச் சாவியும் ஆகிய இரு நூல்கள் வெளியானது. |
| 17.09.2006 | – | நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு இலவச நிலம் வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார். |
| 05.12.2006 | – | சென்னையில் செம்மொழித் தமிழாய்வு மையம் அமைக்க ஒன்றிய அரசு ஒப்புதல் வழங்கியது. |
| 10.01.2007 | – | சிறந்த படைப்பாளிகளுக்கு ஆண்டுதோறும் நிதி வழங்க ஒரு கோடி ரூபாய் நிதி வழங்கினார். |
| 11.05.2007 | – | கலைஞரின் சட்டமன்றப் பொன்விழா நடைபெற்றது. |
| 18.08.2007 | – | சென்னையில் செம்மொழித் தமிழாய்வு நிறுவனம் தொடங்கப்பட்டது. |
| 29.01.2008 | – | தை முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு நாள் என்ற சட்டத்தை நிறைவேற்றினார். |
| 30.06.2008 | – | செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தில் கலைஞர் மு.கருணாநிதி செம்மொழி அறக்கட்டளை நிறுவ ஒரு கோடி ரூபாய் வழங்கினார். |
| 15.09.2008 | – | பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடினார். ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய் என வழங்கினார். |
| 11.02.2009 | – | முதுகுத் தண்டு அறுவை சிகிச்சை போரூர் ராமச்சந்திரா மருத்துவமனையில் நடைபெற்றது. |
| 10.06.2009 | – | சென்னை மெட்ரோ ரயில் திட்டம் தொடங்கப்பட்டது. |
| 26.02.2009 | – | அருந்ததியினருக்கான 3 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கும் சட்டத்தை முதலமைச்சர் கலைஞருக்கு பதிலாக மாண்புமிகு துணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொண்டு வந்து நிறைவேற்றினார். |
| 27.04.2009 | – | இலங்கையில் போர் நிறுத்தம் செய்ய வலியுறுத்தி அண்ணா நினைவிடத்தில் உண்ணாவிரதம் இருந்தார். |
| 13.03.2010 | – | புதிய தலைமைச் செயலகம் திறந்து வைத்தார். |
| 15.05.2010 | – | செம்மொழியான தமிழ்மொழியே பாடலை வெளியிட்டார். |
| 23-26.06.2010 | – | உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டை கோவையில் நடத்தினார். |
| 15.09.2010 | – | சென்னையில் பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகம் அமைத்து திறந்து வைத்தார். |
| 22.09.2010 | – | தஞ்சைப் பெரிய கோவிலில் ஆயிரமாவது ஆண்டு விழாவை நடத்தினார். |
| 13.05.2011 | – | திருவாரூர் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இது 12ஆவது முறை கிடைத்த வெற்றியாகும். |
| 09.04.2011 | – | திரைக்கதை, வசனத்தில் ‘பொன்னர் சங்கர்’ படம் வெளியானது. |
| 27.02.2012 | – | திராவிட இயக்க நூற்றாண்டு விழாவை நடத்தினார். |
| 14.12.2013 | – | நெஞ்சுக்கு நீதி நூலின் ஆறாவது பாகத்தை வெளியிட்டார். |



| | | |
|---|---|---|
| *09.01.2015* | – | திமுகவின் தலைவராக 11 ஆவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். |
| *14.01.2016* | – | முரசொலி பொங்கல் மலரில் தீட்டிய 'ஒன்றுபட்டு உழைத்திடுவீர், ஒப்பிலா வெற்றி பெற்றிடுவீர்' என்பதே அவரது இறுதிக் கட்டுரை ஆகும். |
| *19.05.2016* | – | திருவாரூர் தொகுதியில் வெற்றி பெற்றார். இது 13 ஆவது முறை கிடைத்த வெற்றியாகும். |
| *10.08.2016* | – | 'முரசொலி பவள விழாவைக் கொண்டாடினார். |
| *15.11.2016* | – | ரூபாய் நோட்டுக்கள் செல்லாது என்ற ஒன்றிய அரசின் அறிவிப்பைக் கண்டித்து கலைஞர் எழுதிய கடிதம்தான், அவர் இறுதியாக எழுதிய கடிதம் ஆகும். |
| *28.11.2016* | – | ரூபாய் நோட்டுகள் செல்லாது என்ற அறிவிப்புக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ள அறிக்கை வெளியிட்டார். இதுவே அவரது இறுதி அறிக்கை ஆகும். |
| *01.12.2016* | – | உடல்நிலை காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். 23ஆம் தேதி வீடு திரும்பினார். |
| *19.10.2017* | – | முரசொலி வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த பவளவிழாக் காட்சி அரங்கத்தைப் பார்வையிட்டார். |
| *14.01.2018* | – | முரசொலி பொங்கல் மலரில் தீட்டிய 'வாழ்த்துகள் பரிமாறுவோம்' என்பது அவரது இறுதிக் கவிதை ஆகும். |
| *12.04.2018* | – | பிரதமர் மோடியே திரும்பிப் போ போராட்டத்தில் கருப்புச்சின்னம் அணிந்து காட்சி அளித்தார். |
| *27.07.2018* | – | உடல்நிலை பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். |
| *07.08.2018* | – | மாலை 6.10 மணியளவில் நிறைவாழ்க்கை தொடங்கினார். |

★★★



# கலைஞர் பற்றி ஆளுமைகள்

தொகுப்பு: ப.திருமாவேலன்

## சமூக - அரசியல் ஆளுமைகள்

### 1. தந்தை பெரியார்:

கலைஞர் அவர்கள் நமக்குக் கிடைத்த மிகப்பெரிய வாய்ப்பு ஆவார்கள். நமக்குக் கிடைத்திருக்கிற பொக்கிஷமாகும்.

அண்ணா அவர்களுக்குப் பிறகு தமிழ்நாட்டைத் திறம்பட ஆண்டு வரும் கருணாநிதி உழைப்பால் உயர்ந்தவர். தொண்டால் வளர்ந்தவர். பிற்படுத்தப்பட்ட வகுப்பில் தோன்றி சமுதாய மேம்பாட்டுக்காகப் பாடுபட்டு பல தியாகங்களைச் செய்து முன்னேறியவர். இன்று தமிழகத்தை முன்னேற்றி வருபவர். அண்ணாவின் மறைவுக்குப்பின் நமக்குக் கிடைத்த மாபெரும் சொத்தாகவே கலைஞரைக் கருதுகிறேன்.

அண்ணாவின் மறைவுக்குப்பின் ரேடியோவில் அண்ணாவைப் பற்றி அவர் பாடிய கவிதையைக் கேட்ட பொழுதுதான் அவர் எவ்வளவு பெரிய புலவராக வளர்ந்திருக்கிறார் என்று என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. உடனே டெலிபோனில் கூப்பிட்டு, 'ஐயா, நீங்கள் இவ்வளவு பெரிய புலவர் என்பதை இப்பொழுதுதான் தெரிந்து கொண்டேன்' என்று பாராட்டினேன். இவ்வளவு நெருங்கிப் பழகிய என்னாலேயே அவருடைய திறமைகளை எல்லாம் உணர்ந்துகொள்ள முடியவில்லை. அப்படி எந்தத் துறையிலும் பிரகாசமாக விளங்குகிறார் கலைஞர் கருணாநிதி.

கலைஞர் கருணாநிதி அவர்கள் எந்தெந்த வகையில் எதிர்ப்புகள் வந்தாலும், அவைகளை சமாளித்து தி.மு.கழகத்தின் தொண்டராகப் பணியாற்றும் கழகத் தலைவர். இவரைப் போலக் கட்சிக்குப் பணியாற்றும் ஆள்கிடைப்பது அபூர்வம்.

கலைஞர் அறிவில் சிறந்தவர். நிர்வாகத்தில் சிறந்தவர். பொதுத் தொண்டுக்காகத் தியாகம் செய்வதில் சிறந்தவர்.









## 2. பேரறிஞர் அண்ணா:

காது கொடுத்துக் கேள் நீ தம்பி; என்றன்
கருணாநிதி எனுமரிய கழகக் கம்பி!
ஏதுமறிய யாத்தமிழர் தூய வாழ்வை
எனக்குப் பின் சீர்படுத்தும் மறவன் நீதான்!
தோதான நம்முயர்வுக்குக் கொள்கை பற்றித்
துறைதோறும் புகுத்துவதே உன்றன் வேலை!
மாதுக்கம் சூழ்ந்திருக்கும் இனிய நாட்டில்
மறுமலர்ச்சி பூக்கச் செய்வாய்நீ தம்பி!
கண்ணீரில் மிதப்போரின் துயரத்தைத் தீர்க்க
எண்ணியெண்ணிச் செயலாற்றிப் புகழைத் தேக்கு!
இதயத்தை எப்போதும் துயரில் ஆழ்த்தி
உண்ணாமல் கிடக்கின்ற ஏழை வாழ்வை
உயிரோட்ட மாக்குவதே பெருந்தொண் டாகும்!
அண்ணனென் சொல்வழியில் நடந்து சென்று
அவனியெல்லாம் போற்றுவண்ணம் ஆள்க தம்பி!
புதுமையெலாம் இத்தமிழர் நாட்டில் இன்றே
புலர்ந்தெழநீ பாடுபடு! உன்நெஞ் சுள்ளே
இதுகொடுமை எனக்கண்ட தெல்லா மும்நீ
என்வழியில் சென்றுடனே களைவாய்! தஞ்சைப்
பதுமைக்கே ஒப்பான திந்த வையம்
பகுத்தறிவின் வழிதொடரக் கடமை யாற்று!
எதுதீமை யோ அதனை மண்ணுள் ஆழ்த்தி
இந்நாட்டார் வாழ்வுக்கே வாழ்க தம்பி!

## 3. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்:

தண்பொழிலில் குயில்பாடும் திருவாரூரில்
தமிழ்நாடு தமிழ்மாணவர் மன்றங்காண்!
வண்மையொடும் உண்மையொடும் வாழ்த்திடுங்காண்!
மக்களிடை எழுச்சிக்கு மருந்தாகுங்காண்!
கண்மூடிக் குறிமறந்து தமிழர் தங்கள்
கலைமறந்த நெஞ்சத்தில் ஒளியெய் துங்காண்!
புண்வாய்ந்தோர் அல்லர்காண்! திருவாரூரின்
புலி இளைஞர் காண்! தோள்கள் பூரித்தார் காண்!
கிளம்பிற்று காண் தமிழ்ச் சிங்கக் கூட்டம்!
கிழித்தெறியத் தேடுது காண் பகைக்கூட்டத்தை!







### 4. மூதறிஞர் இராஜாஜி

கலைஞர் முழுக்க முழுக்க அரசியல்வாதி. இலக்கியவாதி. பத்திரிக்கையாளர். தமிழ்நாட்டின் எதிர்காலம் இவர் கையில் தான் இருக்கிறது.

### 5. பெருந்தலைவர் காமராசர்

கருணாநிதி என்னைப் போலவே பின் தங்கிய சமுதாயத்தில் பிறந்தவர். அவர் இல்லாவிட்டால் இந்த சமுதாயத்துக்கு வேறு யார் இருக்கிறார்கள்?

### 6. முன்னாள் முதல்வர் எம்.பக்தவத்சலம்

கலைஞர் கருணாநிதியின் அரசியல் வாழ்க்கை திமுகழகத் தொடர்போடுதான் தொடங்கியது. ஆனால் அவருடைய சிறிய வயதில் தானாகவே உழைத்துத் தம்முடைய ஆற்றலிலே தான் அவர் முன்னுக்கு வந்தார். அவரது ஆற்றலை அவரது இளமைக் காலத்திலேயே நான் பார்த்தேன்.

### 7. ஜெயப்பிரகாஷ் நாராயணன்

தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதி அவர்கள் உடனுக்குடன் துணிகரமாக நீண்ட காலப் பயனளிக்கக்கூடிய முடிவுகளை எடுக்கக் கூடிய ஆற்றலைப் பெற்றவர்.

### 8. பாபு ஜெகஜீவன் ராம்

திரு. கருணாநிதி அவர்கள் எந்த நாற்காலியில் அமருகிறாரோ அதன் காரணமாக அந்தப் பதவி நாற்காலிக்குப் பெருமை கிடைக்கும். அத்தகைய மனிதர் தான் கருணாநிதி.

### 9. முன்னாள் குடியரசுத் தலைவர் சஞ்சீவி ரெட்டி

கலைஞர் கருணாநிதி துணிச்சல்காரர்.

### 10. முன்னாள் குடியரசுத் தலைவர் ஜெயில்சிங்


திறமைக்கும், வேகத்துக்கும், அன்புக்கும், அருளுக்கும், நிர்வாகத் திறமைக்கும் பிரச்சினைகளை அணுகுவதற்கும் உரிய வரலாற்றுச் சிறப்பு மிக்க மனிதர் கலைஞர் கருணாநிதி.

### 11. முன்னாள் குடியரசுத் தலைவர் வி.வி.கிரி

கருணாநிதியின் திறமையான நிர்வாகத்தின்கீழ் தமிழ்நாட்டு அரசாங்கம் மக்களுக்கு முன்னேற்றத்தையும் செழுமையையும் தரும்.

### 12. முன்னாள் குடியரசுத் தலைவர் சங்கர் தயாள் சர்மா

தமிழ் இலக்கியத்தின் சிரஞ்சீவி. இவரை முத்தமிழ் அறிஞர் என்று அழைக்கலாம்.





### 13. முன்னாள் குடியரசுத் தலைவர் ஆர்.வெங்கட்ராமன்

அரசியலில் இலக்கியத்தை இணைத்து இரண்டிலும் புகழ் பெற்றவர். அரசியல்வாதிகளும் கலைஞர்களும் மதிக்கத்தக்க அளவுக்கு உள்ளவர். நல்ல சேவை மனப்பான்மை கொண்டவர்.

### 14. முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம்

ஓர் அறிஞர். ஒரு கவிஞர். இரண்டும் இணைந்தவர் கலைஞர்.

### 15. முன்னாள் குடியரசுத் தலைவர் கே.ஆர்.நாராயணன்

பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களைக் கைதூக்கிவிட இட ஒதுக்கீடு, பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை என்பன போன்ற எண்ணற்ற சட்டங்களை நிறைவேற்றி தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர் ஆகியோரது கொள்கைகளுக்கு வலிவு சேர்க்கும் விதமாக கலைஞர் அவர்கள் ஆற்றிவரும் பணிகள் மிகுந்த சிறப்புக்குரியவை.

### 16. முன்னாள் குடியரசுத் தலைவர் பிரதிபா பாட்டீல்

கலைஞர் கருணாநிதி சிறந்த கவிஞர். பன்முகத்திறன் படைத்த எழுத்தாளர். ஆட்சி வல்லுநர்.

### 17. முன்னாள் பிரதமர் இந்திரா

அரசியலில் நண்பராக இருக்கும் போதும், எதிராக இருக்கும் போதும் தன் நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பவர் கலைஞர் கருணாநிதி.

### 18. முன்னாள் பிரதமர் சரண்சிங்

திரு. அண்ணாதுரை உருவாக்கிய உயர்ந்த மரபுகளைப் புகழத்தக்க விதத்தில் திரு.கருணாநிதியும் கையாண்டு வெற்றியும் பெற்றுள்ளார்.







## 19. முன்னாள் பிரதமர் வி.பி.சிங்

இந்திய அரசியலில் மிக உயர்ந்த தலைவர்களில் ஒருவர் கருணாநிதி. ஏழைகள், சமூகத்தின் அடிநிலையில் உள்ள மக்களின் குறைகளைக் கேட்பதற்காக அவருடைய வீட்டுக் கதவும், அவருடைய காதுகளும் எப்போதும் திறந்தே இருக்கும். கொள்கைக்காக எப்போதும் என்னுடன் இருந்தார். தனது ஆட்சியைப் பற்றிக் கவலைப்படாமல் இருந்தார். அதற்காக என் வாழ்நாள் முழுக்க அவருக்கு நான் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன்.

## 20. முன்னாள் பிரதமர் தேவகவுடா

பிரதமர் பதவியை வி.பி.சிங் மறுத்த நிலையில், அடுத்ததாக உச்சரிக்கப்பட்ட பெயர் கருணாநிதி. ‘என்னுடைய உயரம் எனக்குத் தெரியும்‘ என்று சொல்லி உடனே அவர் மறுத்துவிட்டார். தெற்கில் உட்கார்ந்து கொண்டு வடக்கின் போக்கை தீர்மானிப்பவராக அவர் இருந்தார்.தமிழ்நாட்டுக்கான திட்டங்களைப் பெறுவதில் எப்போதும் அக்கறை காட்டும் கலைஞர், கூட்டணி ஆட்சிக் காலங்களில் இந்தியாவின் தலைநகராக சென்னையை மாற்றிவிடுவார்.

## 21. முன்னாள் பிரதமர் ஐ.கே.குஜ்ரால்

உலகமெங்கும் வாழும் தமிழ் மக்களால் கலைஞரின் எழுத்துகள் படிக்கப்படுகின்றன. அவரது திரைப்படங்கள் பார்த்து ரசிக்கப்படுகின்றன.

## 22. முன்னாள் பிரதமர் வாஜ்பாய்

கலைஞர் கருணாநிதி, நமது சமுதாயத்தின் நலிந்த பிரிவினரை முன்னேற்றுவதற்காக தனது வாழ்க்கையைத் தந்துள்ளார். நலிந்த பிரிவு மக்கள் சமூக, பொருளாதார, அரசியல் துறையில் எழுச்சி பெறுவதற்காகப் போராடும் ஒரு மாபெரும் வெற்றி வீரர் இவர்.





## 23. முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங்

இந்திய நாட்டின் வரலாற்றிலும் தமிழ் நாட்டின் வரலாற்றிலும் கலைஞர் அவர்களின் பெயர் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டிருக்கும். அவர் தமிழ்நாட்டின் தலைவர் மட்டுமல்ல, நவீன இந்தியாவை உருவாக்கிய சிற்பிகளில் ஒருவர். அவரது வாழ்வும் செயல்பாடுகளும் நாடு முழுவதும் இருக்கும் பலருக்கும் ஊக்கமளிப்பதாக இருக்கிறது.

## 24. முன்னாள் ஆளுநர் கே.கே.ஷா

அரசியல்வாதிகள் மறைந்துவிடலாம். எழுத்தாளராக, மனிதத் தன்மை உள்ளவராக இருக்கும் கருணாநிதி என்ன நேர்ந்தாலும் வரலாற்றில் இருந்து மறைய மாட்டார்.

## 25. முன்னாள் ஆளுநர் சி.சுப்பிரமணியம்

இந்தியத் துணைக்கண்டத்துக்கு எடுத்துக்காட்டான தலைவராகத் திகழ்பவர் கலைஞர்.

## 26. முன்னாள் ஆளுநர் சுர்ஜித் சிங் பர்னாலா

இந்திய தலைவர்களில் அருகிக் காணப்படும் பன்முகத் திறன்கள் கொண்ட தலைவர்களில் ஒருவர் கலைஞர்.

## 27. முன்னாள் ஆளுநர் பி.சி.அலெக்சாண்டர்

எளிய சமுதாயத்துக்காக தொடர்ந்து பணியாற்றியவர்.அவருடன் பணியாற்றுவது மிகப்பெரிய பேறு.

## 28. முன்னாள் ஆளுநர் சென்னா ரெட்டி

இந்தியாவில் உள்ள அனைத்துத் தலைவர்களும் கலைஞரைப் போல செயல்பட்டால் நாடு நன்றாக இருக்கும்.







## 29. முன்னாள் ஆளுநர் பாத்திமா பீவீ

ஆட்சிக் கலையில் மிகச்சிறந்த நிர்வாகி. எவரும் வெற்றிகொள்ள முடியாத ஒரு சமூக சீர்திருத்தவாதி கலைஞர்.

## 30. ஆச்சார்யா வினோபா பாவே

அண்ணாத்துரையின் கருத்துக்கு மாறாக திரு.கருணாநிதி ஒருபொழுதும் நாட்டை நடத்திச் செல்ல மாட்டார். ஏனெனில் அவர் பெயரே கருணையும் நிதியும் சேர்ந்தது.

## 31 எல்லைக்காந்தி கான் அப்துல் கபார்கான்

இறைவனுக்குப் பிடித்த பணிகளைச் செய்து வருபவர் கருணாநிதி.

## 32. தவத்திரு குன்றக்குடி அடிகளார்

வள்ளுவன் நெறியும் அண்ணா நெறியும்

வாழும் வகைக்கிரு கால்களாம் என்றே

கொண்ட கொண்டல் கொழிதமிழ்க் கலைஞர்

புதிய புறநானூற்றைப் படைக்கும் புரவலர்!

## 33. திருமுருக கிருபானந்த வாரியார்

இறைவன் கருணையே வடிவானவன், இறைவன் வேறு கருணை வேறு அல்ல. தனமும் மனமும் படைத்தவர்கள் அனாதைக் குழந்தைகளுக்கு ஆதரவு காட்ட வேண்டும். தனம் உள்ளவர்கள் இந்தப் பணியைச் செய் யாததால் டாக்டர் கலைஞர், கருணை இல்லங்களை உருவாக்கி இந்தப் பணியைச் செய்கிறார். இந்த அருமையான திட்டம் நாட்டுக்கு இன்றிய மையாதது. கருணை கொஞ்சமாக இருப்பவர்களால் எதுவும் செய்ய முடி யாது. கருணை நிதியாக இருந்தால்தான் கருணாநிதியாக இருந்தால்தான் இதையெல்லாம் செய்ய முடியும். தனக்காக வாழ்கிறவன் சிறியவன், பிற

ருக்காக வாழ்கிறவன்தான் பெரியவன். நீண்ட காலமாக நம் முதல்வர் கலைஞர் இதைப் பற்றிச் சிந்தனை செய்தார்.இந்தப் பணி ரொம்பவும் உயர்ந்த பணி, இதற்கு மேற்பட்ட ஒரு பணி இருக்க முடியாது. முதல்வர் செய்யும் இதுபோன்ற நல்ல காரியங்களைப் பார்த்து 'நல்ல காரியம் செய்தாரப்பா முதல்வர்' என்று எம்பெருமானே மகிழ்வார். இப்படிப்பட்ட அற்புதமான சேவை நாட்டுக்குத்தேவை. முதல்வர் கலைஞர் அதைச் செய்ததால் எனது பிரத்யேகமான அன்பை தெரிவித்துக் கொள்கிறேன்.

### 34. பொதுவுடைமைத் தலைவர் மணலி கந்தசாமி

நாங்கள் ரத்தமும், வியர்வையும் சிந்தி நடத்திய போராட்ட முழக்கங்களை, ஒரு துளி மையால், கையால் கையெழுத்துப் போட்டு நிறைவேற்றிக் காட்டியவர் கலைஞர்.

### 35. காந்தியின் பேரன் கோபாலகிருஷ்ண காந்தி

கருணாநிதியின் அரசியல் அண்ணாவின் அரசியலை அடியொற்றியதாக அமைந்தது. ஏழைகளுக்கு ஆதரவான, விவசாயிகளுக்கு ஆதரவான, சாமானிய மக்களுக்கு ஆதரவான, சாதியத்துக்கும், மதவாதத்துக்கும் எதிரான கொள்கைகளின் வழியே ஆட்சியதிகாரத்தை அணுகுவது தான் அந்த அரசியல். தேசிய அரசியல் சதுரங்கத்தால் தவிர்க்கவே முடியாதவராகத் திகழ்ந்த ராஜதந்திரி கலைஞர்.

### 36. சமூகவியல் அறிஞர் யோகேந்திர யாதவ்

மக்கள் தொகையில் மிகச் சிறிய எண்ணிக்கையைக் கொண்ட, சாதிய அடுக்குகளில் கீழே இருக்கும் ஒரு சமூகத்திலிருந்து வந்து இவ்வளவு உயர்ந்த இடத்தை கருணாநிதி தக்க வைத்திருப்பது சமூகப் புரட்சியே தவிர வேறல்ல. அந்தப் புரட்சிக்கு அவரும் ஒரு காரணமாக இருந்திருக்கிறார். சமூகநீதிக்கான இயக்கத்தை வெற்றிகரமான அரசியல் கட்சியாக மாற்றிய முதல் தலைமுறை அரசியல்வாதிகளில் முக்கியமானவர் கருணாநிதி.

### 37. வங்க ஆய்வாளர் கர்க சட்டர்ஜி

கருணாநிதியைப்போல எங்களுடைய உரிமைகளுக்காக, நலன்களுக்காகப் போராட எங்களுக்கு ஒரு தலைவர் கிடைக்கவில்லையே என்று ஏங்குகிறேன். அதனாலேயே கருணாநிதியை எங்களில் ஒருவராகப் பார்க்கிறேன். இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கு இணையான மரியாதையும், கண்ணியமும் எங்களுக்கும் வேண்டும் என்று கருதும் கோடிக்கணக்கான பிறமொழி பேசும் இந்தியர்கள் ஒவ்வொருவராலும் கருணாநிதி ஒரு போராளியாக நெடுங்காலத்துக்கு நினைவுகூறப்படுவார்.

### 38. கல்வியாளர் அனந்த கிருஷ்ணன்

சமூகநீதியை அடையும் பாதையாகக் கல்வியை அணுகும் பார்வை திராவிட இயக்கத்தவரின் சிறப்பம்சம் என்று சொல்வேன். சமூகத்தின்




அடித்தளத்தில் இருப்பவர்கள் உண்மையில் பலனடைகிறார்களா என்ற பார்வையும் அதில் இருக்கிறது. உயர்கல்வியில் இந்திய அளவில் முன்னணியில் வர வேண்டும் என்ற வேட்கையும் இருந்தது. இதனைச் சிந்தித்த கலைஞர் அவர்கள், கல்வியாளர்களுக்கு மிகப்பெரிய மதிப்பளித்தார். நிறைய எதிர்ப்புகளையும் தாண்டி சீர்திருத்தங்களுக்குத் துணை நின்றார். இன்று இணைய உலகில் தமிழ் முன்னே நிற்க பலவகைகளில் விதை போட்டார்.

## 39. திரு. இராஜமாணிக்கம் - ஐ.ஏ.எஸ்.

முதலமைச்சராக இருக்கும்போது படிக்காமல் ஒருகோப்பில்கூட கையெழுத்துப் போட மாட்டார் முதல்வர் கலைஞர். கோப்புகளைத் தேங்க விடமாட்டார். ஒரே நாளில் 250 கோப்புகளில் கையெழுத்திட்ட நாட்கள் உண்டு. கையெழுத்திடும் முன் கேள்வி கேட்பார். அதன் மூலமாக அந்தப் பிரச்னையை உள்வாங்கிக் கொள்வார். கோப்புகள் வழியாக மட்டும் பிரச்னைகளை அணுகாமல் களநிலவரம் எப்படி இருக்கிறது என விசாரிப்பார். அதிகாரப் படிநிலையை உடைத்து எல்லோரிடமும் பேசுவார். யார் சொன்னாலும், மறுமுறையும் சரிபார்ப்பார். அவர் வேகத்துக்கு ஈடுகொடுப்பது சிரமமாக இருக்கும். ஒரு உத்தரவு கட்சி வரை போய்ச்சேர்ந்துள்ளதா எனப் பார்ப்பார். அரசுப் பணியை சமூகத்தை மேம்படுத்துவதற்கான வாய்ப்பாகக் கருத வேண்டும் என்று வலியுறுத்துவார். மக்களுக்கு திட்டங்களைக் கொண்டு செல்ல ஏதாவது தடைகளைச் சொல்லிக் கொண்டே இருந்தால்

அவருக்குப் பிடிக்காது. தடைகளை உடைக்க வழிசொல்லுங்கள் என்பார். அமைச்சர்கள் அனுப்பும் கோப்புகளில் அவர்கள் எழுதும் குறிப்பை வைத்தே அவர்களுடைய செயல்பாடுகளை எடை போட்டுவிடுவார். நிறைய சொல்லிக் கொடுப்பார். ‘சமத்துவபுரம்‘ அவரது இதயத்துக்கு மிக நெருக்கமான திட்டம். பெண்களுக்கு சம சொத்துரிமையைக் கொண்டு வந்தபோது நெகிழ்ச்சியாக இருந்தார். டெல்லிக்குச் செல்வதை விடவும் டெல்லிக்கு இணையான அதிகாரத்தை சென்னைக்குப் பெற வேண்டும் என்று செயல்பட்டவர் கலைஞர்.



# இலக்கிய ஆளுமைகள்

## 40. தமிழ் அரிமா சி.இலக்குவனார்:

முன்னேற்றக் கழகத்தின் முடிசூடா மன்னன் நீ
இன்னினிய பல நூல்கள் எழுதுகின்ற ஆசான் நீ
பன்னரிய நாடகங்கள் பரவுகின்ற நடிகன் நீ
கன்னலெனும் நற்பாக்கள் கட்டுரைக்கும் புலவன் நீ

## 41. திராவிட மொழிநூல் ஞாயிறு தேவநேயப் பாவாணர்:

கலைஞரின் 'ரோமாபுரிப் பாண்டியன்' நூலைப் படித்தபோது இவர்கள் பிறப்பிலேயே இதற்குரிய திறன் அமைந்தவர்கள் என்று நினைக்கும்படியாக இருக்கின்றது. கரிகால் வளவனே திரும்ப நம் கருணாநிதியாராகப் பிறந்தானோ என்றுகூட நாம் நம்பும்படியாக இருக்கின்றது. அந்தக் கரிகால் வளவனும் இந்தக் காவிரி நாட்டிலேயேதான் பிறந்தான். இவரும் அந்த நாட்டிலேதான். அந்தப் பூம்புகாரை அவன் வளப்படுத்தினான். இவரும் இப்போது அதைப் புதுப்பித்து வருகின்றார். காவிரிக்கு அவன் கரை கட்டினான். இவரும் காவிரி நீருக்கு ஒரு வரப்பு கட்டுவதற்கு இயன்றவரை முயல்கின்றார். அவன் இளமையிலேயே பகைவராலே இடர்ப்பட்டுத் துன்பப்பட்டு அதிலிருந்து தப்பினான். அப்படியே இவரும் போன பொதுத் தேர்தலிலே எப்படியோ பகைவரிடத்தில் அகப்பட்டுத் தப்பினார் என்பது எல்லோருக்கும் தெரிந்த செய்தி.

இந்தப் பெயரைப் பார்த்தால்கூட அந்த முதல் எழுத்து கரிகாலன்; கருணாநிதி என்கிற முதல் அசைகூடக் கொஞ்சம் ஒத்துவருகிறது. இனி அந்தக் காலத்திலேயே அவரைப்பற்றி ஏதாவது ஒரு புகைப் படமோ, பூச்சுப்படமோ இருந்திருந்தால் இவர் முகச்சாடைகூட ஒத்துப்போகுமோ என்றுகூட நாம் நினைக்கும்படியாக இருக்கிறது. அந்த அளவிற்கு இவர்களுடைய உள்ளம் முழுவதும், இவர்களுடைய அறிவு, நினைவு, மதி மூன்றும், அந்தப் பூம்புகாரைப் புதுப்பிப்பது, காவிரியை வளப்படுத்துவது இவற்றிலேயே முனைந்திருக்கின்றது. இவர்கள் இப்போது அதிகார முறையிலே, ஓர் அரசன் நிலையிலே, ஆளுகின்ற அரசன் நிலையிலே இருக்கின்றார்கள். அஞ்சாமை, ஈகை, அறிவூக்கம் இந்நான்கும் எஞ்சாமை வேந்தற்கு இயல்பு. தூங்காமை, கல்வி, துணிவுடைமை இம்மூன்றும் நீங்கா நிலனாள் பவர்க்கு. சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு தாழ்ச்சியுள் தங்குதல் தீது. தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க தூங்காது செய்யும் வினை. இப்படிப் பல திருக்குறளைப் பார்த்தால் அவற்றிற்கெல்லாம் ஒரு சிறந்த இலக்கியமாக இவர்கள் விளங்குகிறார்கள்.

## 42. முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம்:

கலைஞர் கருணாநிதி அவர்கள் தலைசிறந்து விளங்குவதற்குக் காரணம், அவர் திருக்குறளை நன்கு படித்திருப்பதனால் தான். குறள் நெறிப்படி வாழ்ந்தும் வருகிறார்.

## 43. நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கனார்:

பேரறிஞர் எனப் பெரும்புகழ் பெற்ற
அண்ணா அவர்களின் அருமைத் தம்பி
முன்னவர் பணித்த முப்பெரும் கொள்கை
கடமை, கண்ணியம், கட்டுப் பாட்டை
உயிரெனக் காக்கும் ஒருபெரும் பக்தன்
அன்பும் அறனும் பண்பும் பயனுற

இனிய முகத்துடன் இன்சொலே பேசி
அதிகாரம் தரும் அகந்தையில் லாமல்
எங்கும் சென்று எவரொடும் பழகி
ஏழைகட் கெல்லாம் இரக்கம் காட்டி
உரியவர்க் கெல்லாம் உதவிகள் செய்து
மாற்றாரும் மிக மகிழும் படித்தாய்
முதலமைச் சர்திரு. மு. கருணா நிதி
அவர்கள் திறம்பட ஆட்சி நடத்திய
ஓராண்டுக் காலம் உண்மை யாகவே
தமிழ்த்திரு நாட்டின் சரித்திரத் தில்ஒரு
பொற்கால மாகப் பொறிக்கத் தக்கது.



## 44. தமிழறிஞர் மயிலைச் சீனி வேங்கடசாமி:

சேர, சோழ, பாண்டியர் போல், தமிழை வளர்க்க மன்னர் இல்லாத இக்காலத்தில், கலைஞர் கருணாநிதி தோன்றித் தமிழை வளர்த்து வருகிறார்.

## 45. பத்திரிகையாளர் நாரண. துரைக்கண்ணன்

கலைஞர் இன்றுள்ள உன்னத நிலைக்கு உயர்ந்திருக்கிறார் என்றால், சதா படிப்பு, பேச்சு, எழுத்து, உழைப்பு, ஊக்கம் தான் காரணம். உணவு, உறக்க நேரந்தவிர கலைஞர் எப்போதும் எதையாவது படித்துக் கொண்டே இருப்பார். எழுதிக் கொண்டே இருப்பார். சிந்தனை செய்து கொண்டே இருப்பார். பாவேந்தர் பாடல்கள் முழுவதும் கலைஞருக்கு மனப்பாடம். நாடக, சினிமா வசன வளத்துக்குக் காரணம் அவருக்கு இளமை தொட்டு சேர்த்து வைத்த சொல்லாட்சியும், பொருட்செறிவும் கற்பனை வளமும் தான் காரணம்.

முதலமைச்சர் ஆனதும் கலை இலக்கியத்தைக் கைவிட்டுவிடுவாரோ என்று நான் கருதியதுண்டு. ஆனால் அவர் பத்திரிக்கைகளுக்கு எழுதுவதையும், படைப்பிலக்கியம் ஆக்குவதையும் விடவே இல்லை. முன்னை விட மிகுதியாக எழுதுகிறார். நூல்களை ஆக்குகிறார். ‘எழுதுவதை நிறுத்திவிடாதீர்கள், இலக்கியத்தை மறந்துவிடாதீர்கள்’ என்று நான் சொல்வேன். ‘எந்த நிலையிலும் நான் எழுதுவதை விடமாட்டேன். உறுதியாக நம்புங்கள்’ என்று சொல்வார். அப்படிச் சொன்னபடியே, இல்லத்தில் இருக்கும்போதும் அலுவலகத்தில் இருக்கும்போதும் மட்டுமல்லாமல் வெளியே கார், ரயில் பயணங்களின்போதும் எழுதிக் கொண்டேயிருப்பார் என்று அவருக்கு நெருக்கமானவர்கள் சொல்லக் கேட்டு நான் மகிழ்ந்திருக்கிறேன்.

## 46. சிலம்புச் செல்வர் ம.பொ.சி.:

கலைஞரின் எழுதுகோலுக்கு ஆட்சியைத் தாக்கவும் தெரியும். தாங்கவும் தெரியும்!

அது மாற்றார் ஆட்சியைத் தாக்கும். உற்றார் ஆட்சியைத் தாங்கும்!

நல்லாட்சியாயின் காக்கும், அல்லாட்சியாயின் அழிக்கும்.

இத்தகு ஆற்றலை வெகு சிலரே பெற முடியும்.

ஒரு போர்வீரருக்கு உரிய மனத்திண்மையும், மதி நுட்பமும் பெற்றிருக்கிறார். அத்துடன் ஒரு ராஜதந்திரிக்கு உரிய அடக்கத்தையும் ஆழ்ந்து சிந்திக்கும் திறனையும் பெற்றிருக்கிறார். அவர் ஒரு அற்புத சித்தர்! அவதார புருஷர்! செயற்கரிய செய்யும் பெரியவர்! கலையுணர்வு படைத்த ஒரு அரசியல்வாதியிடமன்றி, வேறு யாரிடமும் இத்தகைய சாதனைகளைக் காண்பது அரிது.

சோழ நாட்டில் பிறந்த நம் கலைஞர், இராச ராச சோழன், இராசேந்திர சோழன் ஆகிய மாமன்னர்களின் வாரிசாகச் செயல்பட்டு வருகிறார். ஆம் தமிழினத்தின் உரிமைகளை, தமிழ் மொழியின் பெருமைகளைக் காப்பதிலே!

## 47. முனைவர் வ.சுப.மாணிக்கம்:

கலைஞர் தமிழ்ப்பற்று, தமிழறிவு, தமிழுணர்வு மிக்கவர். சங்க இலக்கியப் பயில்வினர். தமிழ் நாகரிகமே மனித நாகரிகம் என்ற கடைப்பிடியினர். புத்திலக்கியம் படைக்கும் கற்பனைக் கவிஞர். எழுத்திலும்,சொல்லிலும் தொடை வளமிக்க உரைநடைக் கவிதையர். நாடகப் பார்வையர். உரைபல கற்றவர். நாட்டின் ஆட்சியில் உயர்பதவி தாங்கியவர். உலக அரசியற் கண்ணோட்டத்தர். பல்துறை மக்களொடு அணுகிப் பழகிக் காலவுலகியல் கைவரப்பெற்றவர். வாழ்வுப் பாசறையில் மலையும் கடலும் கண்டவர். தோலா நாவினர். தொய்யா நெஞ்சினர். சாதிசமயச் சழக்கிற்புகாப் பகுத்தறிவினர். சிந்தனைச் செயலினர். திருக்குறட் சிந்தையர். தமிழினத் தலைவர். எழுத்துக்கலை, செந்நாக்கலை, நாடகக் கலை, கவிதைக்கலை, அரசியற்கலை, எழிற்கலை என்றாங்கு பல்வேறு கலைகளிலும் நெஞ்சு, அறிவு, செயல், தோய்ந்த கலைஞரே இவர்.

## 48. டாக்டர் மு.வரதராசனார்:

தமிழகத்தின் பெருமையைச் சங்ககாலம்போல மீண்டும் உலகம் போற்றக்கூடிய அளவுக்கு உயர்த்த வேண்டும் என்ற கனவை நனவாக்க விடாமுயற்சியை மேற்கொண்டுள்ள சிறந்த அறிஞர் கலைஞர். தமிழ் அரசர்களான நலங்கிள்ளி, நெடுங்கிள்ளிக்குப் பின் புலவராகவும், அரசராகவும் வாழ்பவர் கலைஞர் ஒருவர் தான். தமிழறிஞர்களை, புலவர்களை வாழ்விக்கும் புரவலராக இருந்து பாதுகாத்து வருபவர் கலைஞர்.

## 49. சிற்ப மேதை கணபதி ஸ்தபதி:

கலைஞர் என்ற சிறப்புப் பெயரைப் பெற்றிருக்கும் அவர் ஒரு சிருஷ்டிக் கலைஞர். அவருடனான எனது முதல் சந்திப்பிலேயே அவரை ஒரு பெரும் கலைஞராகத்தான் எனக்கு உணர்த்தியது. அதனால்

தான் 02.03.1975 அன்று மாமல்லபுரத்தில் நடந்த சிற்பக் கலைஞர்கள் மாநாட்டில் 'பூம்புகார் படைத்த பெருந்தச்சன் கலைமாவளவன்' என்ற பட்டத்தை 3000 சிற்பிகள் கூடி வழங்கி மகிழ்வித்தோம். என்னுடைய பார்வையில் அவர் ஐந்தமிழ் அறிஞர்.

இயல், இசை, நாடகம், கட்டடக்கலை, சிற்பக் கலை என ஐந்திலும் உள உணர்வும், உளப்பண்பாடும் உடையவர். இந்த ஐந்து தமிழ்க் கலைகளிலும் ஆழ்ந்த பற்றும், ஞானமும், அனுபவமும் நிரம்பப் பெற்ற அவரை ஐந்தமிழ் அறிஞர் என்று அழைப்பதே பொருத்தமானது ஆகும்.

## 50. ஓவியர் முரசொலி செல்லப்பன்:



முரசொலி' வாரஇதழில் 'வெள்ளிக்கிழமை' தொடர்கதை எழுதத் தொடங்கியபோது படங்களுக்கான கருத்துகளைத் தலைவர் கலைஞரே தெரிவிப்பார்கள். பிறகு படத்தை வரைந்ததும் சரியாக வந்திருக்கிறதா என்று பார்ப்பார்கள். சில சமயங்களில் என்னுடைய 'ஸ்கெட்ச்' புத்தகத்தை வாங்கி அதில் உள்ள ஓவியங்களைப் பார்த்து அதில் அவர்களுக்குப் பிடித்த ஏதாவது ஒரு படத்தைக் கொடுத்து, தலைப்பும் தந்து படத்தை வரையச் சொல்லுவார்கள்.

தலைவர் அவர்கள் சில வேளைகளில் நான் படம் போட்டுக் கொண்டிருக்கும் மேஜைக்கு மறுபக்கத்தில் உட்கார்ந்து எழுதுவார்கள். நான் உடனே அவர்களுக்கு இடையூறாக இருக்கும் என்று எழுந்து விடுவேன். ஆனால் தலைவர் அவர்கள் என்னை அங்கேயே உட்காரச் சொல்லி என் வேலையைத் தொடர்ந்து செய்யச் சொல்வார்கள்.

'முரசொலி' நாளிதழுக்காக கேலிச் சித்திரங்களுக்கான கருத்துக்களை தலைவர் அவர்களே தருவார்கள். படம் எழுதும்போது அவருக்கு எந்த அவசர வேலை இருந்தாலும் நான் பென்சிலால் மாதிரி வரைபடத்தை முடிக்கும்வரை அங்கேயே இருந்து பார்த்து தேவையான மாற்றங்களைச் சொல்லி, அதை மறுபடியும் திருத்தி அவர்களுடைய கருத்து சரியாக வந்திருக்கிறதா என்று திருப்தி அடைந்த பிறகு மையால் வரையச் சொல்லி விட்டுப் போவார்கள்.

## 51. பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன்:

கோல்டுஸ்மித் என்ற ஆங்கிலப் பேரறிஞரைப் பற்றி ஜான்சன் என்ற திறனாய்வாளர் சொன்னதைப்போல் தமிழ்நாட்டில் ஒருவரைச் சொல்ல வேண்டுமென்றால் அது கருணாநிதிதான். அவர் தொடாத துறையே இல்லை. தொட்டதைக் கலைஞர் பொன்னாக்காமல் விட்டதும் இல்லை. ஐம்பது வருடம் கழித்துத் தமிழ்நாட்டில் வரலாறு எழுதப்படும்போது தமிழ்நாட்டில் ஒருபத்து இருபது பேர்தான் தேர்வார்கள். அதிலே ஒரு இடத்தில் கலைஞர் கருணாநிதி இருக்கிறார்.

## 52. பத்திரிகையாளர் சாவி:

நான் தினமணிக்கதிரில் இருக்கும்போது கலைஞர், 'குறளோவியம்' எழுதிக் கொடுப்பார். அது வந்தவுடன் கையெழுத்துப் பிரதியிலேயே



அதைப் படித்து விடுவோம். ஒரு இடத்தில் கூட அடித்தல் திருத்தல் இராது. இரண்டாவது முறை மாற்றி எழுத மாட்டார். கலைஞருக்குத் தான் அப்படி எழுத்து வரும். தெளிவான சிந்தனை இருப்பவர்களுக்கு அடித்தல் திருத்தல் எதுவும் இருக்காது.

வீட்டுக்கு ஒரு நூலகம் என்பார்கள். நூலகம் கூட வேண்டாம். கலைஞரின் ‘குறளோவியம்‘ இருந்தால் போதும். எந்த நேரமும் பயன்படக் கூடியது.

## 53. டாக்டர் மெ.சுந்தரம்:

இந்தியத் துணைக்கண்டத்திலேயே முதல் முதல், ஆறு எம்.பில், பட்டங்களையும், ஐந்து டாக்டர் பட்டங்களையும் பெறக்கூடிய அளவிற்குப் படைப்பிலக்கியத்தை எழுதிய ஒரே பெருமகன் கலைஞர் அவர்கள்தான். அமெரிக்காவில் உள்ள மினசோட்டா பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் பிலியம் செகல் மென் 11.02.1985 அன்று எனக்கு எழுதிய கடிதத்தில், கலைஞரின் இன உணர்வையும் மொழி உணர்வையும் இலக்கியப் புலமையையும் பெரிதும் பாராட்டியிருக்கிறார் .கலைஞரின் பணி தமிழ்த் தாய்க்கு மணிமுடிசூட்டிடும் பணி என்று மற்றொரு பேராசிரியர் ஹார்டு கிரேன் எனக்கு எழுதிய கடிதத்தில், கலைஞரைப் பாராட்டி இருக்கிறார். இவர்கள், கலைஞரை நேரடியாக அறியாதவர்கள், அவரது எழுத்தைப் படித்து இந்தப் புகழாரத்தைச் சூட்டியிருக்கின்றார்கள்.

## 54. நாடக ஆசிரியர் கோமல் சுவாமிநாதன்:

என் கையில் முதலில் கிடைத்த புத்தகம் கலைஞரின் ‘தூக்குமேடை. கலைஞர் கருணாநிதி என்ற பெயர் பராசக்தி மூலமும், மனோகரா மூலமும் திரையுலகில் கொடிகட்டிப் பறந்து கொண்டிருந்தது. புதிய தமிழ்ச் சொற்கள் திராவிட இயக்க மேடைகளில் பயன்படுத்தப்பட்டு அது மக்களின் வழக்குச் சொற்களாகவே மாறிவிட்டன. இளைஞர்கள் தமிழ்மொழிமீது காதல் கொள்ள இந்த மேடைகள் பயன்பட்டன. நாடக மேடைகளில் புதிய குரல்கள் ஒலித்தன. பலர் உற்சாகமடைந்தனர். சிலர் தாங்கள் உலுக்கப்படுவதை உணர்ந்தனர். சில சமயம் நாடக மேடைகள், சண்டைக் களமாகவும் மாறியதுண்டு. பக்தர்கள் பாயவந்தனர். போலீஸ் கெடுபிடி நடத்தியது. தமிழ் மக்களின் கலாச்சார வேர்களில் திராவிட இயக்கத்தின் நீர் பாயத் தொடங்கியது.

1950 களில் திராவிட இயக்கத்தினர் சார்பாக நடத்தப்பட்ட நூற்றுக்கணக்கான நாடகங்களை நான் பார்த்திருக்கிறேன். இந்தப் பங்களிப்பில் முக்கியத் தளபதியாக பேரறிஞர் அண்ணா இருக்க, களவீரனாக கதாநாயகனாக கலைஞர் காட்சியளித்தார். புதியதாக நாடகம் எழுதப் புகுந்த பல இளைஞர்கள் கலைஞரை வழிகாட்டியாகக் கொண்டார்கள். அரசியல் நாடகம் தமிழ் மேடையில் கிளைவிரித்துப் பரவ மூல வேர் கலைஞர். அரசியல் குறிக்கோளுக்கு கலாச்சார வடிவங்களை முழுமுனைப்பாகக் கையில் எடுத்துக் கொள்வது அங்கிருந்துதான் தொடர்கிறது.





கலைஞரின் நாடகங்கள் அரசியல் ஆயுதங்கள். கலைஞருக்கு நாடகம் எழுதுவதும் அரசியல் நடவடிக்கையே.

### 55. உவமைக் கவிஞர் சுரதா:

ஓடுவதில் கங்கை நீ! வரலாற்றோடு
உருளுவதில் பூமி நீ ! புதுமை எண்ணம்
தேடுவதில் பெரியார் நீ ! கருத்து வெள்ளம்
தேக்குவதில் கல்லணை நீ ! அண்ணா கொள்கை
பாடுவதில் செங்குயில் நீ ! பகுத்தறிவைப்
பரப்புவதில் சூரியன் நீ ! மக்கள் வெள்ளம்
கூடுவதில் தென்மதுரை தேரோட்டம் நீ!
'குவளை' தந்த குவலயத்தின் புகழ்த்தெப்பம் நீ!

### 56. கவிஞர் அப்துல்ரகுமான்

கவிதைத் துறையில் கலைஞரின் சாதனைகள் மூன்று. தமிழில் புதுக்கவிதை தோன்றிய காலத்தில் எல்லோரும் வசன கவிதை (Prose Poem), புதுக்கவிதை (New Verse) என்ற வடிவங்களில் எழுதி வந்தபோது கலைஞர் மட்டும் தான் கவி வசனம் (Poetic Prose) என்ற வடிவத்தில் எழுதினார். இது முதல் சாதனை.

சங்ககாலத்தில் தமிழர்கள் இளவேனிலின் வருகையை கவிதையால் கொண்டாடியதைப்போல அண்ணாவின் பிறந்தநாளை கவிதையால் கொண்டாடும் மரபைத் தோற்றுவித்தார். இது இரண்டாவது சாதனை.

அரசியல் கேட்க வந்தவர்களை கவிதை ரசிகர்களாக மாற்றியவர் கலைஞர். கவியரங்குகளில் கவிதை கேட்க லட்சக்கணக்கானவர்களைத் திரண்டு வரச் செய்த சாதனையும் கலைஞருடையது. இது மூன்றாவது. இது உலகில் வேறெங்கும் நடக்காத அதிசய நிகழ்ச்சி.







## 57. கவிஞர் மு.மேத்தா

கலைஞரின் அரசியல் அலைகளை எதிர்த்துக் கொடிபிடிப்பவர்கள் கூட அவரது கவிதை மழையை மறுத்து குடைபிடிக்க மாட்டார்கள். மேலும் மேலும், அதில் நனையத்தான் விரும்புவார்கள். மரபை தனக்கேற்ப வளைத்துக் கொள்வதிலும், வளர்த்துக் கொள்வதிலும் அவர் மகாகவி. அவருடைய புதுமைகளெல்லாம் தமக்கென்று ஒரு தனி வடிவத்தையும் வரம்பையும் அமைத்துக் கொண்டவை. அப்படியானால் கலைஞரின் கவிதைகள் மரபுக்கவிதையா, புதுக்கவிதையா? நவீன தமிழின் நாயகராக விளங்கும் கலைஞரின் கவிதைகளை 'புது மரபுக் கவிதை'கள் என்பதே பொருத்தமானதாக இருக்கும்.

## 58. கவிப்பேரரசு வைரமுத்து:

இரண்டு நூற்றாண்டுகளிலும் இரண்டு கால்களை அழுத்தமாய் ஊன்றி நிற்கும் தமிழ்ப்பெருந்தலைவர். அறுபது ஆண்டுகாலப் பத்திரிகைகளுக்குத் தொடர்ந்து செய்தியானவர், செய்தி தருகிறவர். தம் பொதுவாழ்க்கையின் ஒவ்வொரு நாளுக்கும் பதிவுகள் வைத்திருப்பவர். முதல் தலைமுறையில் எழுதிப் பழகிய தமிழ் நடையை மூன்றாம் தலைமுறைக்கும் செல்லும்படி செய்தவர். படைப்பாளிகளை உருவாக்கிய படைப்பாளி.

ஆயிரம் மேடைகளில் பேசியும் அடைய முடியாத கருத்து, திரைப்படத்தில் ஒரு பாத்திரத்துக்குள் புகுந்து பேசியபோது சத்தியமாயிற்று. சமூகம் என்ற நிறுவனத்தையும், அரசாங்கம் என்ற இயந்திரத்தையும், தர்மம் என்ற விழுமியத்தையும், சமயம் என்ற விழுமியத்தையும்கூட குத்திக் கிழித்துக் கூறுபோடுகிறது கலைஞரின் எழுத்து.

தமிழர்களின் அகமாற்றத்திற்கு ஓரளவும், தமிழகத்தின் புறமாற்றத்திற்குப் பேரளவும் காரணமானவர். இழந்து போன தமிழ் அடையாளங்களைத் தம் எழுத்திலும், பேச்சிலும், செயலிலும் மீட்டெடுத்தவர். தமிழின் ஆதி இலக்கியங்களை கலைஞர் அடையாளம் காட்டியபோது பாமரனும்கூட அந்தத் தொல் இலக்கியங்களைத் தொட்டுப் பார்த்தான்.

நற்றமிழ் நாட்டில் நீ
நடக்காத சாலையில்லை.
பெற்றதாய் நாட்டில் நீயும்
பேசாத ஊரில்லை.
நெற்றியில் தமிழை வைத்தோர்
நெடுங்கணக் கதிகம்.
ஆனால்
வெற்றியில் தமிழை வைத்த
வித்தகன் நீ மட்டும் தான்!



**59. டேவிட் ஷுல்மன்:** *(இஸ்ரேலிய அறிஞர், சங்க இலக்கியத்தை ஹீப்ரு மொழியில் மொழிபெயர்த்தவர்)*

திராவிட இயக்கத்தின் தலைசிறந்த தலைவர்களுக்கு முன்மாதிரியாக அமைந்த இலக்கிய – அழகியல் உணர்வும், பேச்சு வன்மையும் கருணாநிதியிடம் மிளிர்வதைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

**60. பேராசிரியர் ஜார்ஜ் ஹார்ட்:** *(தமிழ்ப் பீடம் தெற்காசிய ஆய்வு மையம் கலிபோர்னியா பல்கலைக்கழகம், பெர்க்கிலி)*

கலைஞர் கருணாநிதி போல் அத்தனை படைப்புகள் எழுத வேறொருவர் முயன்றால் அதற்கு ஒரு பிறவி போதாது.

முதலமைச்சர் கலைஞர் தமிழ்ச் சங்க இலக்கியம், தமிழில் சிறந்த இலக்கியம் மட்டுமன்று அது தமிழ்ச் சமூகம் நல்ல நிலையில் வளர உதவும் ஒன்று என்பதை உணர்ந்திருக்கிறார். பெரியாருடைய பகுத்தறிவு, தாழ்த்தப்பட்ட குலமக்களின் உயர்வு போன்ற கருத்துகளில் ஈடுபாடு கொண்டு வளர்ந்தவர் கலைஞர். தாழ்த்தப்பட்ட தமிழர்களைக் கீழான முறையில் நடத்தும் முறை, மற்ற சமூக வேறுபாடுகள் மறைய வேண்டுமானால் சங்க கால வாழ்வு போன்ற ஒரு சமத்துவ வாழ்வு அனைவருக்கும் வேண்டும் என்ற கருத்தை அவர் இலக்கியப் படைப்புகளில் அறிவிக்கின்றார். கலைஞர் படைப்புகளைப் படிக்கும்போது தமிழிலக்கியத்தின் கருத்துக்களை இவர் போல் விளக்கியவர்கள் யாரும் இருக்க முடியாது என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது. தமிழர் எவ்வாறு வாழ வேண்டும், தமிழ் மொழியை எவ்வாறு போற்ற வேண்டும், தமிழில் எவ்வாறு இலக்கியங்களைப் படைக்க வேண்டும் என்பதற்கெல்லாம் அவர் ஒரு பெரும் சிகரம் என்றால் அவரைச் சிறிய அளவில் புகழ்வதாக மட்டுமே இருக்கும்.

**61. எழுத்தாளர் பிரமிள்:**

பாரதியிடமிருந்து பாரதிதாசனும், பாரதிதாசனிடமிருந்து அண்ணாதுரையும் கருணாநிதியும், ஒரு பரம்பரைத் தொடர்ச்சியைக் காட்டுகின்றனர். கவித்தவமாகப் பாரதியிடம் பிறந்த நவீனத் தொனியை, புதுமைப்பித்தனின் பின்னலான சிந்தனைச் செறிவுகொண்ட உரைநடை



தொடராகக் கண்டாலும், பாரதிதாசன், புதுமைப்பித்தன், அண்ணாதுரை, கருணாநிதி யாவருமே ஒரு புதிய மனோதர்ம எழுச்சியினை எழுத்தியலாகப் பயின்றவர்களாவர். இவர்களுள் புதுமைப்பித்தனின் இலக்கியச் சாதனை வீறு, ஒரு சக்ரவர்த்தியாக அவரைக் காட்டுகிறது. நவீன தொனி, சிந்தனைச் செறிவு ஆகியவற்றைப் பின்வைத்து, பாமரப் பெருவாரி மக்களிடையே இந்தப் புதிய மனோதர்மத்தைப் பரப்பி வேரூன்றச் செய்ய எழுந்த ஈ.வெ.ராமசாமி (பெரியார்) இயங்கிய நேர்முகத்தன்மையை, பாரதிதாசன், அண்ணாதுரை, கருணாநிதி ஆகியோர் ஆதர்சித்து எழுதியிருக்கிறார்கள். எழுத்து வடிவங்களிலிருந்து கிடைக்கும் சாட்சியங்கள் இவை. இந்த இயக்கத்தின் நாடகத்துறை வெளியீடு மிகக் காட்டமாக பெரியாருடன் இயங்கிய எம்.ஆர்.ராதாவிடமும், சினிமா வெளியீடு கவர்ச்சித்தன்மையாக அண்ணாதுரை, கருணாநிதியுடன் இயங்கிய எம்.ஜி.ராமச்சந்திரனிடமும் பிறந்து, பாமரப் பெரும்பான்மையினருள் ஊடுருவிற்று. எனவே, இது ஒரு சமூகப்புரட்சித் தொடர் இயக்கம்.

‘அடேய் பூசாரி! முதலில் உன் ஜாதகத்தைக் கணித்துக்கொள்!’ என்ற கருணாநிதியின் ‘பராசக்தி’ வசனத்தில், ‘பார்ப்பானை ஐயர் என்ற காலமும் போச்சே!” என்ற பாரதியின் தீர்க்கதரிசனம் அபாரமான விடம்பன வடிவம் பெறுகிறது. பெற்று, அடிமட்டப் பாமர உள்ளங்களில்கூட பாய்ந்து அதிரடி தருகிறது! இப்படி மேலும் உதாரணங்களைத் தர இடமுண்டு. இது, கருணாநிதியின் அரசியலுக்கும் புறம்பாக நாம் காணக்கூடிய எழுத்தியல் விபரமாகும். ‘யார் அம்பாளா பேசறது?’ என்று கேட்கும் பூசாரியிடம், ‘அம்பாள் எந்தக் காலத்தில் பேசினாள்! அறிவு கெட்டவனே!’ என்று கேட்கிறார் கருணாநிதி தமது ‘பராசக்தி’யில். இந்த வெகுஜன தளத்து வெளியீடு நேரடியாக பெரியாரின் ‘கடவுள் இல்லை’, ஜே. கிருஷ்ணமூர்த்தியின் ‘அச்சம் இல்லை, எனவே கடவுளும் இல்லை,’ என்ற பார்வையைப் பிரதிபலிக்கிறது.

## 62. எழுத்தாளர் ஜெயகாந்தன்:

தக்கதோர் தலைமையை வேண்டித் தமிழ்நாடு வெகுகாலம் தவம் கிடந்தது. பல இடர்களுக்கும் இருளுக்கும் இடையே அப்படியொரு தலைமை தற்காலத்தில் சுடர் விடுகிறது. அனுபவமும் ஆற்றலும் உறுதியும் உள்ள ஒரு தலைவராக வரலாறு, கலைஞர் மு.கருணாநிதி அவர்களை உருவாக்கித் தந்திருக்கிறது. தமிழர் தலைவர் கலைஞரின் கடந்த கால அரசியல், சமூக, கலையுலக வாழ்க்கை மிகவும் கரடுமுரடானது. கசப்பும், இனிப்பும் கலந்தது. அவர் மொழியில் சொல்வதென்றால், தென்றலைத் தீண்டாதது. தீயைத் தாண்டியது. இன்று அவர் இந்திய அரசியல் அரங்கில் புறக்கணிக்க முடியாத ஒரு புரட்சிகரத் தலைவராய் விளங்குகிறார்.

## 63. எழுத்தாளர் கல்கி:

பாரதியார் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்யச் சொன்னார். திரைப்படம் மூலம் தமிழ் முழக்கம் செய்தவர் மு.கருணாநிதி. இலக்கியச் செறிவு மிக்க வசனம் அவருடையது. (மனோகரா – பட விமர்சனம்)

### 64. எழுத்தாளர் சுஜாதா

கலைஞர் கருணாநிதியின் சொற்பொழிவுகளை நான் மாணவப் பருவத்தில் திருச்சியிலும், ஸ்ரீரங்கத்திலும் கேட்டிருக்கிறேன். அழுத்தமான குரல், வசீகரமான தோற்றம், ஆணித்தரமான வாதத்திறமை இவையனைத்தும் இளைஞர்களை மிகவும் ஈர்த்தன. கலைஞரின் பேச்சில் தூயதமிழும் ஓசை நயமும் இருக்கும்.

திராவிட இயக்கத்தின் பகுத்தறிவுக் கொள்கைகள், இறைமறுப்புக் கொள்கைகள் பலவற்றில் எங்களுக்கு உடன்பாடில்லை எனினும், அந்த இயக்கத் தலைவர்களின் நாவன்மையும் தமிழறிவும் எங்களை அவர்கள் சொல்வதைக் கட்டாயமாகக் கவனிக்கத் தூண்டின. சினிமா என்னும் வலுவான சாதனத்தை அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்தியது தமிழ்நாட்டில் நடந்த தனிப்பட்ட விஷயம்.

### 65. எழுத்தாளர் பாலகுமாரன்

சுயம்புவாய் எழுந்திருந்த புற்று லிங்கத்தின்மீது பாதுகாப்பாய்க் குவளையைக் கவிழ்த்து வைத்ததால் அந்த ஊருக்குத் 'திருக்குவளை' என்று பெயர் வந்ததாம். தமிழ்ச் சுயம்பு காயம்படாமல் இருப்பதற்குக் காலம் காலமாய்த் தொழப்படுவதற்குக் குவளையைப் பாதுகாப்பாய் வைத்திருக்கிறார்கள். அந்தத் திருக்குவளைக்குத்தான் 'கலைஞர் கருணாநிதி' என்று பெயர். தமிழ்ச் சுயம்புவுக்கும், இந்தத் திருக்குவளைக்கும் அழிவே இல்லை. சந்திர,சூரியர் உள்ள வரை இவை இரண்டும் தம் பெயர் சொல்லிக் கொண்டிருக்கும்.

## திரை ஆளுமைகள்

### 66. புரட்சித் தலைவர் டாக்டர். எம்.ஜி.ஆர்

வாழ்கையிலே அடைய வேண்டிய வெற்றிகளுக்காக நடத்திய போராட்டங்களில் இருவரும் ஒரேமாதிரிதான் அனுபவங்களைப் பெற்றிருக்கிறோம். அவர் அரசியலோடு கலையை இணைத்துக் கொண்டார். நான் கலையோடு அரசியலை இணைத்துக் கொண்டேன். கலைஞர், அரசியலில் இருந்து கொண்டு கலைத்துறைக்கு வந்து கலைத்துறையிலிருந்த என் போன்றோரை அரசியலில் இணைத்துக் கொண்டார்.

இருபத்தைந்து ஆண்டுகளாக இவரிடம் நான் பழகியதில் அறிந்த சிறப்பு – வேறு யாரிடமும் இல்லை என்று சொல்லத்தக்க அளவில் உள்ள சிறப்பு – இலட்சிய வெறி. இலட்சியத்தை நிறைவேற்றுவதில் வெறி. அதை செயல்படுத்துவதில் வெறி. இந்த சிறப்புக் குணங்கள்தான் இவருடைய பிறவிச் சிறப்புகள் ஆகும்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு புதியதாக திரைப்படத்திற்கு உரையாடல் எழுத வந்திருக்கிறார். 'அபிமன்யு' படத்தில் இவர் எழுதிய உரையாடல்கள் இவர் பெயரிலே வெளியிடப்படவில்லை. ஆனாலும்






இவருடைய கொள்கையை அதிலே புகுத்தி அந்தச் சிறப்பை வேறு ஒருவர் பெற்றாலும் பரவாயில்லை என்று கருதித் தான் விரும்பும் கொள்கைகள் படத்தில் வந்தால் போதும் என்று அதிலே புகுத்தினார். அந்தக் காலத்தில் கொள்கைக்காக உரையாடல் எழுதினால் யாருடைய பகையாவது வருமோ என்ற கவலையே இல்லாமல் எழுதினார். அது முதல் படம் தான் – இன்னொருவர் தயவை எதிர்பார்க்கும் நேரம் தான் வாழ்க்கையில் சாதாரண நிலை தான். ஆனாலும் கொள்கை... கொள்கை... கொள்கை!

## 67. நடிகர் திலகம் சிவாஜி கணேசன்:

திரையுலகில் கலைஞர் ஏற்படுத்திய தாக்கம் என்று பார்த்தால் முதலிடம் பெறுவது சிவாஜி என்ற நடிகனைத் தன் பேனாவுக்குள் மையாக ஊற்றி வைத்துக் கொண்டதே. திரையுலகில் சமுதாய மறுமலர்ச்சி, தமிழின் உயர்வு, தமிழனின் பெருமை அத்தனையும் மொத்தமாக வெளிப்படுத்தப்பட்டதே கலைஞர் மூலமாகத்தான். கலைஞர் என்ற சுயம்பு, தமிழுக்காக வடிக்கப்பட்ட சிற்பம், சிலை.

நான் திரையுலகில் போடாத வேஷமில்லை. காணாத புகழில்லை. அவற்றுக்கு ஆரம்பம் கலைஞர் என்ற பேனா வடித்த பெருமைக்குரிய எழுத்துக்கள். என் மீது அவருக்கு எத்தனை நம்பிக்கையிருந்தால் என் மீது தன் எழுத்துச்சுமையை ஏற்றி வைத்து காலத்தால் அழியாத வசன காவியங்களைப் படைத்திருப்பார். அவர் பேனாவும், எம் நாவும் சத்தியமாக, நிச்சயமாக ஒட்டிப் பிறந்தவை. கலையுலகில் பிரியாத, பிரிக்க முடியாத, அழியாத, அழிக்க முடியாத சாசனமாக வாழ்பவை.

## 68. இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.ஆர்.

நானும் அவரும் உயிருக்குயிராக இரண்டறக்கலந்து வாழ்ந்து வந்தவர்கள். இன்றும் அதை மறக்கத் தெரியாதவர்கள். அவர் எழுதிய நாடகங்களை எஸ்.எஸ்.ஆர். நாடக மன்றத்தின் சார்பில் பட்டிதொட்டி எங்கும் நடத்தியவன் நான். 'மணிமகுடம்' நாடகம் ஆயிரக்கணக்கில் அடங்கும். இந்த நாடகம் இல்லாமல் எந்த மாநாடும் நடந்ததில்லை. இராமநாதபுரம் மாநாட்டில் மாநாட்டை விட இந்த நாடகத்துக்கு வசூல் அதிகம். அதே





மணிமகுடம் சினிமாவுக்காக கலைஞரால் மெருகேற்றப்பட்டு மீண்டும் எழுதப்பட்டது. கலைஞரின் செந்தமிழ் வசனம் பேசி நடிக்கப் பெற்ற வாய்ப்பை என் வாழ்க்கையில் பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன். எந்த துறையில் அவர் சிறப்பு பெற்றிருந்தாலும் அவர் நமது கலைஞர் தானே.

## 69. கவியரசு கண்ணதாசன்

எனக்குமோர் காதல் உண்டு
 இதயத்தின் உள்ளே தூங்கும்
வனக்கிளி அவளை இன்னும்
 மறக்கவே முடியவில்லை!
நினைக்கையில் இனிக்கும் அந்த
 நெய்வாசக் குழலி யன்று
எனக்கொரு கவிதை யானாள்
 இதுதான் நான்கண்ட இன்பம்!
காதலி பிரிந்தா ளென்று
 கலங்கினேன் தனியே நின்று;
வேதனை யறிந்தாள் போல
 வேறொரு நகையாள் வந்தாள்
மாதவள் உயரம் எந்தன்
 மார்பினைத் தொடும்; என்றாலும்
கோதையின் இதழ்கள் எந்தன்
 குளிர்முகம் முழுவதும் தோயும்!
கன்னியின் பேரைக் கேட்டேன்;
 'கருணையின் நிதி'யம் என்றாள்!
மன்னிய உறவைக் கேட்டேன்;
 'மந்திரி குமாரி' என்றாள்!
பன்னி நான் கேட்டபோது



‘பராசக்தி’ வடிவ மென்றாள்!
சென்னைதான் ஊரா என்றேன்
‘திருவாரூர்’ நகர மென்றாள்!
தந்திரம் அறிவாள்;மெல்லச்
சாகசம் புரிவாள்;மின்னும்
அந்திவான் மின்னல் போல
அடிக்கடி சிரிப்பாள்; நானும்
பந்தயம் போட்டுப் பார்த்துப்
பலமுறைத் தோற்றேன்; என்ன
மந்திரம் போட்டா ளோஎன்
மனத்தையே சிறையாய்க் கொண்டாள்!

## 70. நடிகர் ஜெமினி கணேசன்

கலைஞரின் ‘மந்திரி குமாரி’ ஒரு மக்கள் திலகத்தை உருவாக்கியது. ‘பராசக்தி’ ஒரு நடிகர் திலகத்தை உருவாக்கியது. ‘குறவஞ்சி’ படத்தில் வசன காவியங்களை சிவாஜியும் என் மனைவி சாவித்திரியும் மொழிந்தார்கள். ‘எல்லோரும் இன்னாட்டு மன்னர்’ சித்திரத்தில் கலைஞரின் வசனங்களை நான் பேசினேன். குறட்டை விட்டுக் கொண்டிருந்த தமிழர்க்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தியவை அவரது வசனங்கள்.

## 71. இயக்குநர் கிருஷ்ணன் (பஞ்சு)

கலைஞர் திரைப்படக் குடும்பத்தில் ஒருவர். பராசக்தி படத்துக்கு வசனம் எழுத நான் தான் அவரிடம் போய் கேட்டேன். கொள்கையைப் பரப்பும் வகையில் வசனங்களை எழுதுவேன் என்றார். பச்சைக்கொடி காட்டினோம், கலைஞர் புகுந்து விளையாடி விட்டார். பராசக்தி திரையுலக சரித்திரத்தில் முத்திரை பதித்தது. கலைஞரின் சரித்திரத்தில் நாங்களும் இருக்கிறோம் என்பதில் எங்களுக்கு என்றும் பெருமை.

## 72. நடிகர் ரவிச்சந்திரன்

தமிழுக்கு அழகு கூட்டி, அடுக்குச் சொற்களை மையமாகக் கொண்டு கலைஞர் எழுதிய வசனங்களுக்கு ஓர் தனிச்சுவை உண்டு. பகுத்தறிவைக் கிள்ளித் தூண்டும் சக்தி அவைகளுக்கு உண்டு. அந்தக் காலத்தில் பொதுவாக பாடல்கள் மெதுவாக இருக்கும். ஆனால் அப்போதே, ‘பராசக்தி’ படத்தில் ‘ஓ ரசிக்கும் சீமானே’ என்ற ஃபாஸ்ட் மூவிங் பாடலை அவர் எழுதியது இன்றும் எனக்கு வியப்பு தான். ‘காகித ஓடம்‘ பாடலில் தான் எத்தனை பொருள்!

## 73. வசனகர்த்தா ஆரூர் தாஸ்

திரை அரங்குகளில் அக்காலத்தில் விற்கப்படும் பாட்டுப்புத்தகங்களுடன் சேர்ந்து முதன்முதலாக கலைஞர் வசனம் எழுதிய புத்தகம் விற்கப்பட்டது. ஒரு திரைப்படத்தின் முக்கிய மூலதனம் என்ற நிலையை நிரூபித்தும்

காட்டினார். கொடுக்கப்படும் காசுக்காக அல்ல.கொண்ட கொள்கைக்காக துணிச்சலுடன் சமுதாயச் சாடல்களையும், அரசியல் சிலேடைகளையும் நளினமான நையாண்டிகளையும் தனது எழுத்தில் கையாண்டு, பழைமைத் தீவு நோக்கி நகர்ந்து கொண்டிருந்த படத்துறையின் பாய்மரக் கலத்திற்குப் புதியதொரு ‘சுக்கான்’ பொருத்திப் புரட்சி செய்தார்.

## 74. இயக்குநர் கே.பாலச்சந்தர்:

யார் நடித்திருக்கிறார்கள், யார் இயக்கி இருக்கிறார்கள் என்றெல்லாம் பேசப்பட்டது போய் யார் வசனம் எழுதியிருக்கிறார்கள் என்று கேட்க வைத்துத் திரைப்பட வசனத்திற்கு ஒரு மாபெரும் இலக்கிய அந்தஸ்தைப் பெற்றுத் தந்தவர் – அறிஞர் அண்ணா. அதற்குப் பிறகு கலைஞர் அவர்கள்தான். முன்னர் பாடல் புத்தகங்கள் மட்டும்தான் விற்பார்கள். கலைஞர் திரைக்கு எழுத ஆரம்பித்த பிறகுதான் வசனங்களைப் புத்தகமாகப் போட்டு விற்க ஆரம்பித்தார்கள்.



எப்படி சிவாஜி அவர்கள் நடிப்பிலே கவர்ச்சியை உண்டாக்கி ஒரு மிகப் பெரிய காலக்கட்டத்தையும் ஒரு தலைமுறையையும் திரைவானுக்கு உருவாக்கித் தந்தார்களோ அப்படிப்பட்ட சிவாஜியையே நாட்டிற்குக் காட்டியவர் கலைஞர் என்றால் யாரும் மறுக்க முடியுமோ? என்னைப் போன்று ஆயிரக் கணக்கான இளைஞர்களுக்கு அன்று நாடக உணர்வை திரைப்பட உணர்வையும் அழகுத் தமிழ் மூலம் ஊட்டியவரல்லவா இந்தக் கலைஞர். இவருடைய திரைப்பட வசனங்களை மனப்பாடம் செய்து ஒப்பிப்பது அன்றிருந்த ஆயிரமாயிரம் இளைஞர்களுக்குப் பொழுது போக்காயிற்று. இவருடைய திரைப்படங்கள் அன்று பல பிஞ்சு உள்ளங்களுக்குத் தமிழ்ப்பாடங்கள் ஆயின.

ஆயிரக்கணக்கான இளம் உள்ளங்களை ஈர்த்து அழகான தமிழ்மூலம் ஆயிரமாயிரம் கருத்துக்களை ஆணி அடித்தாற்போல் மக்களிடையே பரவச் செய்து அவர் சார்ந்திருந்த இயக்கத்தின் கருத்துக்களை, கருத்துக்களின் மூலம் அந்த இயக்கத்தை வளர்த்து, மக்களிடையே பெரும் விழிப்புணர்ச்சியைத் தோற்றுவிப்பதற்குத் திரைப்படத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தி எந்த அளவிற்குக் கலைஞர் வெற்றி பெற்றிருக்கிறார் என்பது தமிழக திரைச்சரித்திரத்திலே இடம் பெற்றுவிட்ட ஒரு மாபெரும் உண்மை. இவருடைய தீந்தமிழ் வசனங்கள் எத்துணை இளைஞர்களுக்குச் சரியான தமிழையும், தவறில்லாத தமிழ் உச்சரிப்பையும் கற்றுத் தந்திருக்கிறது என்பதும் நாமறிந்த உண்மை.

## 75. நடிகை வைஜெயந்திமாலா பாலி

தமிழ்த் திரையுலகில் திருப்புமுனையை ஏற்படுத்தியவர் கலைஞர். திரைஉலகில் பெண் அடிமைத்தனத்தையும் விதி வலியது என்ற பிரச்சாரம் செய்து கொண்டிருந்த காலக்கட்டத்தில் பராசக்தி மூலமாக தீப்பொறி பறக்கும் வசனத்தால் மக்கள் மத்தியில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி திரையுலகின் போக்கை திசை மாற்றினார்.

## 76. நடிகை பானுமதி

கலைஞரின் கருத்தோவியங்களான மலைக்கள்ளன், ரங்கோன் ராதா ஆகிய படங்களில் அவர் எழுதிய வசனத்தைப் பேசி நடித்துள்ளேன் என்பதை நினைத்து எப்போதும் மகிழ்ச்சி அடைபவள் நான்.

## 77. நடிகை பத்மினி

நடிப்புக் கலைக்கு சிவாஜி சார் ஒரு பல்கலைக்கழகம் என்றால், கலைஞர் அவர்கள் எழுதும் கலைக்குப் பல்கலைக்கழகம். நான் கதாநாயகியாக 'மணமகள்' படத்தில் நடிக்கும்போது மிகவும் பயமாக இருந்தது. ஏனென்றால் எனக்கு நடனம் ஆடத்தான் தெரியும். வசனம் பேசி நடிக்கத் தெரியாது. அப்போது கலைஞர் தான், 'பயப்படாதேம்மா' என்று சொல்லி தைரியம் கொடுத்தார். அவர் சொல்லிக் கொடுத்தது போலவே நடித்தேன். அனைவரும் பாராட்டினார்கள். அதற்குப் பிறகு மிக விரைவாகவே நூறு படங்களில் நடித்து முடித்தேன். நல்ல நடிகை என்று பெயரும் புகழும் எனக்குக் கிடைத்தது.

## 78. நடிகை கே.ஆர்.விஜயா

நான் படிப்பறியேன், பள்ளிக்கூடம் நானறியேன். அந்தச் சூழ்நிலையில் நாடக உலகிலும், திரையிலும் தமிழ் பேசி நடிக்க நான் செவிவழித் தமிழைக் கற்றுக்கொள்ள வழிகாட்டி நூலாக உதவியது கலைஞரின் வசனங்கள் தான். பட்டி தொட்டி எல்லாம் ஒலி பெருக்கி மூலம் சொல்லித் தரப்பட்ட தமிழ்தான் பராசக்தி, மனோகரா போன்ற கலைஞரின் திரைப்பட வசனங்கள். நிராதரவாக வந்து, நிரந்தரமாகத் திரையுலகில் வாழத் தமிழ் கற்றுத் தந்த பள்ளிக்கூடம் தான் கலைஞர்.

## 79. நடிகை எம்.என்.ராஜம்

'மணிமகுடம்' நாடகம் அரங்கேற்றம் செய்யப்பட்டபோது நடித்த முதல் கதாநாயகி நான் தான். 'ரங்கோன் ராதா' படத்தில் பானுமதி அக்காவுக்கு தங்கையாக நடித்தேன். இந்தப் படத்தில் கலைஞரின் வசனங்கள் படம் பார்ப்பவரின் இதயங்களைக் கொக்கி போட்டு இழுப்பதுபோல இருக்கும். கலைஞரின் வசனத்தில் முதல் இரண்டு வரியை மனப்பாடம் பண்ணிவிட்டால் அடுத்த வரிகள் எல்லாம் நீரோட்டம்போல கடகடவென்று நிற்காமல் வந்து விழுந்து விடும். ஆயிரம் அடி பிலிமும் 1 ரன் அவுட் ஆகும் வரை பேசி இருக்கிறேன். அந்த அளவுக்கு எனக்கு கலைஞரின் வசனத்தைப் பேசுவதில் மன ஈடுபாடு உண்டு. மிகச் சுலபமாக அவரது வசனங்கள் பேசக் கூடியவை. கலைஞர் முழுப்பட வசனத்தையும் முதலிலேயே மொத்தமாக எழுதிக் கொடுத்து விடுவார். இதனால் எப்படி எல்லாம் நடிக்க வேண்டும் என்று கற்பனை செய்ய வசதியாக இருக்கும். பாடலை ரசிகர்கள் மனப்பாடம் செய்வதைப்போல ஒரு படத்தின் வசனத்தை மனப்பாடம் செய்து வைத்துக்கொண்டு பேசியது கலைஞரின் எழுத்துகளைத்தான். இந்தச் சிறப்பு கலைஞர் ஒருவருக்குத்தான். திரையுலகுக்கு கிடைத்த ஒப்பற்ற மேதை கலைஞர்.





## 80. நடிகை விஜயகுமாரி

நான் திரைப்படத் துறைக்கு வந்து சுமார் இருநூறு படங்களுக்கு மேல் நடித்திருப்பேன். ஆனால் கண்ணகியாக நடித்ததே என் பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன். இந்தப் பெருமை எனக்குக் கிடைக்கக் காரணமாக அமைந்தது கலைஞரின் எழுத்தே.

## 81. ஆச்சி மனோரமா

அன்றைய சாதாரண நாடக நடிகை மனோரமாவை திரையுலகம் அறிந்த நடிகையாக உருமாற்றியது கலைஞரின் எழுத்து தான். ‘மணிமகுடம்‘ நாடகத்தில் கலைஞரின் வசனங்களை நான் வீராவேசமாகப் பேசி நடித்துப் பேசி பெற்ற கைதட்டல்களும் பாராட்டுதல்களும் தான் கவிஞர் கண்ணதாசனின் ‘மாலையிட்ட மங்கை’ படத்தில் நடிக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. நான் சென்னைக்கு வரக் காரணமானதும் கலைஞரின் எழுத்து. திரையுலகில் காலடி எடுத்து வைக்க காரணமானதும் கலைஞரின் எழுத்து.

## 82. பாடகி பி.சுசீலா

கலைஞரின் மறக்கமுடியுமா? படத்தை மறக்க முடியுமா? ‘காகித ஓடம் கடலலை மீது..’ என்னும் பாடலை நான் பாடி கிடைத்த புகழை மறக்க முடியுமா? இன்னும் மேடைகளில் பாடும் போது மக்கள் விரும்பிக் கேட்கும் சாகாவரம் பெற்ற அந்தப் பாடலை மறக்க முடியுமா?

## 83. நடிகர் வி.கே.ராமசாமி

பொதுவாக கலைஞர் என்று சொன்னால் அது நடிகர் நடிகைகளைத் தான் குறிக்கும். ஆனால் கருணாநிதி அவர்களுக்குக் ‘கலைஞர்’ என்ற பட்டம் கொடுத்த பிறகு அது கலைஞரை மட்டுமே குறிப்பதாக அமைந்து விட்டது.

## 84. வசனகர்த்தா ஏ.எல்.நாராயணன்

பேனாவுக்குச் சலங்கை கட்டி, எழுத்திலும் அடவு அபிநயம் சேர, பரதம் ஆடச் செய்யும் அற்புதம் கலைஞரின் வசனத்தில் இருந்தது.







## 85. இயக்குநர் அமிர்தம்

கலைஞரின் வசனத்தை மேலோட்டமாகப் பார்த்தால் நடிகர் நடிகைகளுக்கு மனப்பாடம் செய்வது கடினம் போல் தெரியும். ஆனால் ஒரு முறை படித்தாலே அந்த வசனங்கள் சுலபத்தில் மனப்பாடம் ஆகிவிடும். இதற்கு என்ன காரணம் தெரியுமா? அவர் வசனங்களை எழுதும் போது, தானே பேசிப் பார்த்துக் கொண்டே தான் எழுதுவார். இப்படி எழுதுவதால் வசனம் பேசுவதில் உள்ள நெருடல் சிக்கல்கள் இல்லாமல் போய்விடுகிறது.

## 86. இயக்குநர் எஸ்.பி.முத்துராமன்

இந்த நூற்றாண்டில் கலைஞரின் பாதிப்பில்லாத கலைஞன் இருக்க முடியாது.

## 87. இசையமைப்பாளர் எம்.எஸ்.விஸ்வநாதன்

கலைஞர் என்றால் தமிழ். 'தமிழ்த்தாய் வாழ்த்துக்கு' என்னை இசையமைக்க வைத்த தமிழ் அவர். 1946 ஆம் ஆண்டு கோவை ஜுபிடர் பிக்சர்ஸில் என்னைப் பார்த்த கலைஞர், ' நீ பெரிய இசைக்கலைஞனாக வருவாய்' என்று அன்றே கணித்தார். தமிழ்ப் படவுலகில் புரட்சியையும் மாற்றத்தையும் உருவாக்கியவர் கலைஞர்.

## 88. கவிஞர் வாலி

உன்னால் தான்
படக்கொட்டகைகள் தமிழ்ப்
பாட சாலைகளாக மாறின.
ஐம்பது வாரம்
நூறு வாரம்
ஓடிய படங்களுக்கெல்லாம்..
உன்
அழகுத் தமிழ் உரையாடல்கள் தாம்

அஸ்திவாரம்!

நாங்கலெல்லாம்...

பாடல்களை

வசனங்களாக எழுதுகையில் நீ

வசனங்களை

பாடல்களாகப் புனைந்தவன்!

## 89. இயக்குநர் பாரதிராஜா

சரித்திர புராணங்களை மட்டுமே திரையில் சொல்லி வந்த அந்தக் காலத்தில், இயல்பு விஷயங்களை இலக்கியமாகச் சொல்லி முதன் முதலில் தமிழ் சினிமாவில் சரித்திரம் படைத்த நாயகன் கலைஞர். இந்த அறிவுக் கலைஞனின் அழகுத் தமிழ் வார்த்தைகளை உச்சரிக்க இன்று வரை ஏங்காத நடிகர்களே இல்லை. அவர் எழுத்து, தமிழ் சினிமாவின் திருப்புமுனை. பராசக்தியின் பல வசனங்களை நான் பேசி நடித்ததுண்டு. சிவாஜியைப் போல நடிக்க வேண்டும், கலைஞரைப் போல எழுத வேண்டும் என்று புறப்பட்டு வந்தவன் நான். நாம் இதுவரை மூன்று தமிழ் படித்திருக்கிறோம். நம் பின்னோர் நான்கு தமிழ் படிப்பார்கள். அது கலைஞரின் தமிழ்.

## 90. இயக்குநர் மகேந்திரன்

இரவு என்பதைத் தனது உழைப்பிற்கென நீட்டிக்கப்பட்ட பகல் பொழுதாக்கிக் கொண்டு தமிழுக்கும் தமிழருக்கும் தொண்டாற்றிடும் பாட்டாளியே கலைஞர். இந்த மண்ணில் கலைஞர் என்றால் அவர் யார் என்று யாவரும் அறிந்திருக்கும் ஒரே கலைஞர் இவர் மட்டும் தான்.

## 91. இசைஞானி இளையராஜா:

தானே எழுத்தாகி

தானே சொல்லாகி

பொருளாகி

தானே யாப்புமாகி

தானே அணியுமாகி

மொழியாய்

மொழிவளமாய்

கவிதையாய்

தன்னைத் தானே

எழுதிக் கொண்ட

அழகான கவிதை

கலைஞர்



## 92. நடிகர் ரஜினிகாந்த்

ஐம்பது ஆண்டுகள் ஒரு இயக்கத்தைக் கட்டிக் காத்ததே கலைஞரின் பெரிய சாதனை. பேரறிஞர் அண்ணா அவர்கள் விட்டுச் சென்ற இயக்கத்தை வளர்த்தவர் கலைஞர். அதற்கு என்ன மூலதனம்? எது ஆணிவேர்? அது தான் அவரது எழுத்து. அதுதான் அவருடைய பேனா!

யாராக இருந்தாலும் கலைஞர் இல்லாமல் அரசியல் செய்ய முடியாது. அத்தகைய ஒரு நிலையை ஏற்படுத்தியவர் கலைஞர். அரசியல் மேடையில் தன்னந்தனியாக நின்று வெற்றி கண்டவர். ‘அரசியலுக்கு வருகிறவர் என்னோடு வா, அல்லது என்னை எதிர்கொள்’ என்ற நிலையை உருவாக்கியவர் கலைஞர்.

கம்பரைப் பற்றி பேசினால் இராமாயணம் பேசவேண்டும். திருவள்ளுவரைப் பற்றி பேசினால் திருக்குறளை பேசியாக வேண்டும். கலைஞரைப் பற்றி பேசினால் பராசக்தியையும் மனோகராவையும் பேச வேண்டும்.

‘மனோகரா’ படத்தில் மனோகரன் இரும்புச் சங்கிலியை உடைத்து வெளியே வரும் காட்சி வரும். கலைஞரின் வசனத்தை கண்ணாம்பா பேச அந்த வசன வார்த்தைகள் வந்து விழும் போது அந்த இரும்புச் சங்கில் தானாக உடைந்து போய்விட்டது. அந்த சக்தி கலைஞரின் வசனங்களுக்கு உண்டு.அந்த சக்தி கலைஞரின் வசனத்துக்கு உண்டு. எழுது கோலை செங்கோலாக மாற்றிய பெருமை அவருக்குத் தான் உண்டு. அவரை மிகத் தாமதமாகத் தான் நான் புரிந்து கொண்டேன்.


கலைஞர் இல்லாத தமிழ்நாட்டை என்னால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

## 93. நடிகர் கமலஹாசன்:

நான் நடிக்க வந்த காலத்தில் கலைஞரின் வசனத்தை அழகாகப் பேசிக் காட்டுவது தான் நடிப்புக்கான கேட் பாஸ். ‘உனக்கு நீச்சல் தெரியுமா?’ என்று யாராவது கேட்டால், குளத்தில் நீச்சல் அடித்துக் காட்டுவோமே அதைப் போல கலைஞர் வசனத்தை சிவாஜி தொனியில் பேசிக் காட்ட வேண்டும். நானும் அப்படித்தான் மூன்றரை வயதுப் பையனாக இருக்கும் போதே செய்து காட்டி சினிமாவுக்குள் வந்தேன்.

## 94. துக்ளக் சோ

வசனத்தில் முடிசூடா சக்கரவர்த்தியாகத் திகழ்ந்தவர் கலைஞர். அவருடைய வார்த்தை விளையாட்டுகள், அவருடைய உவமை நயங்கள், அவருடைய இயல்பான நகைச்சுவை, அவரிடமிருந்து எப்போதும் பிரியாத கிண்டல், குத்தல், அவருக்கு கை கொடுக்கும் தர்க்க சாத்திர வன்மை, புராணங்களை நம்பாவிட்டாலும் அவற்றை விமர்சனம் செய்வதற்காகவாவது அவற்றைப் படித்திருந்த அவரது ஆர்வம், அரசியல் அனுபவங்களினால் தீட்டப்பட்டு கூர்மையாகியிருந்த அவருடைய வாதத் திறமை ஆகியவற்றால் கலைஞரின் வசனங்களுக்கு ஒரு அலாதியான



ஈர்க்கும் தன்மை கிட்டியது. வசனம் எழுதுவதில் மட்டுமல்ல, திரைக்கதை அமைப்பிலும் கலைஞர் திறமை வாய்ந்தவர். டைரக்டர் பீம்சிங் என்னிடம் இதைச் சொன்னார்.

பாடல்களை எத்தனை முறை வேண்டுமானாலும் கேட்கலாம். சுவை குன்றாது. காரணம் அதில் அடங்கியிருக்கும் சங்கீதம். பேச்சைத் திரும்பத் திரும்பக் கேட்க முடியாது. அலுப்புத் தட்டிவிடும். இதற்கு விதிவிலக்கு கலைஞர் கருணாநிதியின் வசனங்கள். காரணமும் அதில் இசையின் நயமும் உண்டு.

நடிப்புக்கு சிவாஜி, கவிதைக்கு கண்ணதாசன், வசனத்திற்கு கலைஞர் கருணாநிதி.

## 95. கதாசிரியர் ஆர்.செல்வராஜ்

கலைஞர் திரைப்பட எழுத்துத் துறையின் இன்றைய பீஷ்மர். நாங்கள் பூமியில் வாழ்வதற்கு நடைபழகிக் கொண்டிருக்கும் போதே, கலைஞர் எழுத்துக்களால் கடை விரித்து விட்டார்.அவருடைய பராசக்தியும் மனோகராவும் எனக்கு வேதப்புத்தகம் ஆகிவிட்டது. சினிமாவுக்கு வா என அவரது படங்கள் தான் என்னை அழைத்தன.

## 96. இயக்குநர் முக்தா சீனிவாசன்

கலைஞர் அவர்கள் டைரக்ஷன் துறைக்கு வந்திருந்தால் நமக்கெல்லாம் வேலை இருந்திருக்காது.

## 97. நடிகர் சிவகுமார்

கலைஞரின் முகம் பதிவதற்கு முன்பே அவரது எழுத்துக்கள் என் மனதில் பதிய ஆரம்பித்துவிட்டன. பராசக்தி வசனப் புத்தகத்தை பத்து வயதில் மனப்பாடம் செய்தவன் நான். 'சேரன் செங்குட்டுவன்' நாடகத்தில் அவர் எழுதிய வசனத்தை அவர் முன்னிலையில் பேசி பாராட்டைப் பெற்றேன். வலிமை மிக்க எழுத்துக்கு சொந்தக்காரர். மிகச் சிறந்த கலைஞானி அவர்.

## 98. இயக்குநர் மணிரத்னம்

ஐம்பது வருடங்கள் – தமிழ் – திரை தமிழ் – சமஸ்கிருதம் கடிக்காத தமிழ் – சுயமரியாதைத் தமிழ் – திராவிடத் தமிழ்!

ஒரே காரணகர்த்தா விற்கு நன்றிகள்! திரைப்படத் தலைப்பு முதற்கொண்டு எல்லாவற்றிலும் தமிழைப் பயன்படுத்துகிறேன் என்றால் காரணம் கலைஞர்.

## 99. நடிகர் சத்யராஜ்

'பராசக்தி' படத்தை நான் 13 வயதில் பார்த்தேன். நான் படத்தைப் பார்த்த காலத்தில் அந்தப் படத்திற்குப் பயங்கர கிரேஸ். அந்தக் காலக்கட்டத்தில் பராசக்தி படத்தைப் பலமுறை பார்த்திருக்கிறேன். படத்தில் நடித்துள்ள அனைவரின் வசனத்தையும் இப்போது கேட்டால்கூட சிறு தவறுகூட இல்லாமல் என்னால் பேச முடியும்.

நான் சினிமாவிற்கு நடிக்க வந்தபோது சிவகுமார் அண்ணன் என்னிடம் சொன்னார். "தமிழில் வட்டாரத் தமிழ் என்று ஒன்று இருக்கிறது. நீ பேசுவது கொங்கு தமிழ். சினிமாவில் ஓரளவிற்குத்தான் வட்டார தமிழ் பேசலாமே தவிர மற்ற நேரங்களில் சுத்தமான தமிழ்தான் பேசவேண்டும். இதற்கு ஒரே வழி கலைஞரின் வசனங்களைப் படிக்க வேண்டும்" என்று கூறி அப்போது "கலைஞரின் வசனங்கள்" என்ற சிறிய புத்தகத்தை என்னிடம் கொடுத்து படிக்கச் சொன்னார். அதைப் படித்து நான் பேசக் கற்றுக் கொண்டதால் தான் இன்றைக்கு நான் நடிகனாக இருக்கிறேன். நான் நடிகனாக ஆனதற்கு கலைஞர் என்ற ஆசிரியர் தான் காரணம்.

## 100. இசைப்புயல் ஏ.ஆர்.ரஹ்மான்:

இந்த மண்ணில் சாதி, மத அடையாளங்களை எல்லாம் கடந்து நாம் அனைவரும் உணர்வால், 'தமிழர்' என்று உணர வைத்தது திராவிட இயக்கம். இதில் கலைஞரின் பங்கு மகத்தானது. அவர் செம்மொழி மாநாட்டுக்காக எழுதிய பாடலுக்கு இசை கோக்க என்னைத் தேர்ந்தெடுத்தது, என் வாழ்வில் கிடைத்த மகிழ்ச்சிகளில் ஒன்று!

★★★



# சாதனைகள் 100 (மட்டும்)

## தமிழுக்கு

1. நூற்றாண்டுக் கனவான செம்மொழித் தகுதியை தமிழுக்கு பெற்றுத் தந்தது.
2. 'மெட்ராஸ்' என்ற பெயரை 'சென்னை' என ஆக்கியது.
3. தலைநகர் சென்னையில் வள்ளுவர் கோட்டம் அமைத்தது.
4. கடல் நகர் குமரியில் 133 அடியில் வள்ளுவருக்கு சிலை வைத்தது.
5. திரும்பிய பக்கம் எல்லாம் திருக்குறளைத் தீட்டியது.
6. அரசு அலுவலகங்களில் தமிழ் வாழ்க என எழுத வைத்தது.
7. சிலம்பின் பெருமையைக் காட்டும் பூம்புகார் கோட்டம் அமைத்தது.
8. தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் மூலம் அனைத்துப் பாடங்களையும் தமிழில் மொழிபெயர்த்து பலநூறு பாடப்புத்தகங்களை வெளியிட்டது!
9. தமிழ் நெட் மாநாட்டை 1999 ஆம் ஆண்டு நடத்தி தமிழைக் கணினி மொழி ஆக்கியது.
10. உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டை நடத்தியது!



## உருவாக்கிய நிறுவனங்கள்

11. தமிழ்நாடு உணவுக் கழகம்
12. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்
13. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்
14. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்
15. தமிழ்நாடு சர்க்கரைக் கழகம்
16. தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகம்
17. தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு
18. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம்
19. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம்
20. ஆதிதிராவிடர் வீட்டு வசதிக் கழகம்
21. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்
22. மாநில மனித உரிமைகள் ஆணையம்
23. கைத்தறி நிதிக்கழகம்
24. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்
25 தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கு கழகம்
26. சிப்காட் எனப்படும் தொழில் மேம்பாட்டு நிறுவனம்.
27. தமிழ்நாடு மின்னணுவியல் கழகம்






## கல்வித் துறைக்கு

*28. பள்ளி, கல்லூரிகளை அதிகப்படுத்தினார்.*

*29. மாவட்டத்துக்கு ஒரு மருத்துவக் கல்லூரி திட்டத்தை அறிவித்தார்.*

*30. கிராமப்புற மாணவர்களுக்கும், குடும்பத்தில் முதல் பட்டதாரிகளுக்கும் சலுகைகள்.*

*31. அனைத்து மாணவர்களுக்கும் இலவச பஸ் பாஸ்.*

*32. தமிழ் வழிப்படித்தவர்களுக்கு முன்னுரிமை.*

*33. கோவையில் வேளாண் பல்கலைக் கழகம்*

*34. சென்னையில் கால்நடைப் பல்கலைக் கழகம்*

*35. டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக் கழகம்*

*36. நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம்!*

*37. சேலம் பெரியார் பல்கலைக் கழகம்!*

*38. கோவை, திருச்சி,மதுரை, நெல்லையில் அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக் கழகங்கள்!*

*39. ஐடிக்கு என தலைமைச்செயலகத்தில் தனித்துறையை 1998 இல் உருவாக்கினார்.*

*40. பள்ளிக் கல்வியில் தகவல் தொழில் நுட்பத்தை இணைத்தார்.*

*41. தமிழ் மென்பொருளை உருவாக்கிப் பரப்ப முனைந்தார்.*

*42. 340 கோடியில் டைடல் பார்க்கை 2000ஆம் ஆண்டில் கட்டினார்.*

*43. தமிழ்நெட் 1999 மாநாடு நடத்தினார்.*

*44. யுனிகோட் கன்சோர்டியத்தில் இணைந்த முதல் இந்திய மாநிலம் தமிழகம்.*

## சமூகநீதி

45. அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்
46. ஆதிதிராவிடர் நலத்துறையையும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையையும் தனித்தனியே உருவாக்கம்.
47. பட்டியலின மக்களுக்கு 18 சதவிகித இடஒதுக்கீடு
48. பழங்குடியினருக்கு 1 சதவிகித இடஒதுக்கீடு
49. அருந்ததியினருக்கு 3 சதவிகித உள் ஒதுக்கீடு
50. மிகவும் பிற்படுத்தப்பட்டவருக்கு 20 சதவிகித தனி இடஒதுக்கீடு
51. ஆதிதிராவிடர் வீட்டுவசதிக்கழகம்
52. மாநில ஆதிதிராவிடர் நலக்குழு
53. இஸ்லாமிய சமூகத்தினருக்கு 3.5% இட ஒதுக்கீடு
54. சிறுபான்மையினர் நல ஆணையம், நலக்குழு, இயக்ககம், சட்டம் அமைப்பு.
55. கொங்கு வெள்ளாளக் கவுண்டர்களை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலுக்கு கொண்டு வந்தது திமுக!
56. கோவில் அறங்காவலர் குழுவில் ஆதிதிராவிடர், பெண்கள் இடம் பெறுதல்.
57. இந்து சமய அறநிலையத் துறைக்கு தனி அமைச்சரையும், தனியாக மானியக் கோரிக்கை விவாதமும் நடத்த உத்தரவிட்டவர்.
58. தனது ஆட்சிக் காலத்தில் 11,998 கோவில்களுக்கு குடமுழுக்கு நடத்தியவர்.
59. அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் பல்லாயிரக்கணக்கான கோவில்களைக் கொண்டு வந்தார்.
60. அறநிலையப் பாதுகாப்புக் குழுவை அமைத்தார்.
61. கிராமப்புற பூசாரிகள் நல வாரியம் அமைத்தார் முதல்வர் கலைஞர்.



## அரசு ஊழியர்க்கு

62. அரசு அலுவலர்கள் நடத்தை பற்றிய ரகசியக் குறிப்பேடு நீக்கல்

63. அரசு ஊழியர் குடும்பப் பாதுகாப்பு நிதி .

64. அரசு ஊழியர்கள் பணிக்காலத்தில் இறந்தால் அவரது வாரிசுக்கு கருணை அடிப்படையில் பணி.

65. மத்திய அரசு ஊழியர்களுக்கு பஞ்சப்படி உயர்த்தும் போதெல்லாம் மாநில அரசு ஊழியர்க்கும் வழங்குதல்.

66. அரசுப்பணியில் சேருவதற்கான வயது வரம்பை உயர்த்தப்பட்டது.

67. 10 ஆயிரம் சாலைப் பணியாளர்கள் நியமனம்.

68. 7 ஆயிரம் மக்கள் நலப்பணியாளர்கள் நியமனம்.

69. 2 இலட்சம் சத்துணவுப் பணியாளர்களுக்கு காலமுறை ஊதியம்.



## விவசாயிகளுக்கு

70. இலவச மின்சாரம்

71. விவசாயத் தொழிலாளர்களுக்கு குடியிருப்பு மனைச் சட்டம்

72. 1974 ஆம் ஆண்டே ஆதார விலைக்கும் கூடுதலான விலையை தமிழக விவசாயிகளுக்குக் கொடுத்தார்.

73. இந்தியாவிலேயே முதன்முதலாக விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை கொடுத்த மாநிலம் தமிழ்நாடு.




*74. 1 இலட்சத்து 89 ஆயிரத்து, 719 ஏக்கர் நிலத்தை – 1 இலட்சத்து 50 ஆயிரத்து 159 பேருக்கு வழங்கினார்.*

*75. கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்தார்.*

*76. உழவர் சந்தைகளை உருவாக்கினார்.*

*77. ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்.*

*78. காவிரி ஆணையம் அமைப்பு*

*79. காவிரி கண்காணிப்பு ஆணையம் அமைப்பு*

## தியாகிகளுக்கு மரியாதை

*80. பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மனுக்கு கோட்டை*

*81. பாரதியின் இல்லம் அரசு இல்லம் ஆனது*

*82. காமராசர் மணிமண்டபம்*

*83. இராஜாஜி நினைவாலயம்*

*84. தில்லையாடி வள்ளியம்மாள் மணிமண்டபம்*

*85. வீரவாஞ்சியின் உறவினருக்கு நிதி*

*86. வ.உ.சி. இழுத்த செக்கு நினைவு சின்னம் ஆனது*

*87. தியாகிகள் மணிமண்டபம்*

*88. சுதந்திரப் பொன்விழா நினைவுச் சின்னம்*

*89. பூலித்தேவன் நினைவு மண்டபம்*






*90.* தியாகி விஸ்வநாத தாஸ் வாழ்ந்த இல்லம் புதுப்பிப்பு

*91.* மாவீரன் சுந்தரலிங்கம் வாரிசுகளுக்கு வீடு

*92.* நேதாஜிக்கு சிலை

*93.* கக்கனுக்கு சிலை

*94.* சிப்பாய் கலகத்துக்கு நினைவுத்தூண்

## சமூகநலத் திட்டங்கள்

*95.* சமத்துவபுரம்

*96.* விதவைகள், பெண்கள் மறுவாழ்வுத் திட்டங்கள்

*97.* மாற்றுத்திறனாளிகள் மறுமலர்ச்சி

*98.* திருநங்கையர் மேம்பாடு

*99.* மகளிர் சுய உதவிக் குழுக்கள்

*100.* அரசுப்பணிகளில், அரசியல் பதவிகளில் பெண்களுக்கான இடஒதுக்கீடு.

★★★

# கனல் தெறிக்கும் கவிதை வரிகள்

தொகுப்பு: ப.திருமாவேலன்

1. வாருங்கள் எல்லோரும் இந்திப்
போருக்குச் சென்றிடுவோம். வந்திருக்கும்
இந்திப் பேயை விரட்டித் திருப்பிடுவோம்.

2. ஓடி வந்த இந்திப் பெண்ணே கேள்! நீ
தேடி வந்த கோழையுள்ள நாடிதல்லவே!

3. வீரத் தமிழ் கொஞ்சும் நாட்டிலே – நாங்கள்
சாரமில்லாச் சொற்கள் ஏற்றமாட்டோம் ஏட்டிலே!

4. இந்நாட்டான் இங்குப் பிறந்து வளர்ந்தான்.
எந்நாட்டையும் புறங்காணும் புகழுடையான்.

5. கிழக்கினில் கிளம்பிய காலைக் கதிரவன்
வெடுக்கென வீழ்ந்தான் கடலில் என்றால்
வையம் கலங்காதோ? வாடி வதங்காதோ?

6. வருணத்தை நிலைநாட்ட
வகையின்றிக் கரணங்கள் போட்டாலும்
மரணத்தின் உச்சியிலே மானங் காக்க
மறத்தமிழா போராடு!

7. வீழ்ந்திட நேரினும் நின் செயல்பாடி
வீழ்ந்திடுவோம்.





8. பாராட்டிப் போற்றி வந்த பழைமை லோகம்,
ஈரோட்டுப் பூகம்பத்தால் இடியுது பார்.

9. ஈ.வெ.ரா என்ற வார்த்தை இந்நாட்டு ஆரியத்தின்
அடிப்பீடம் ஆட்டுகின்ற சூறாவளியாம்.
அவர்
வெண்தாடி அசைந்தால் போதும்
கண் ஜாடை தெரிந்தால் போதும்
கறுப்புடை தரித்தோர் உண்டு
நறுக்கியே திரும்பும் வாள்கள்!

10. உறுதியாய்க் கூறுகின்றார், குருதிதான் பணயமென்று!
கருதியே சொல் தமிழா! களங்கண்டு நாணாதா செவ்வானம்?

11. புலிநிகர் இளைஞர் புறப்பட்டார்!
எலிநிகர் தோழர் எதிர்ப்பட்டால்?

12. ஆண்ட இனத்தால் மீண்டும் முற்றுகை
மாண்டிடும் புழுவே மகுடம் கழற்று!

13. இமய வரம்பினிலே வீரம் சிரிக்கும் இங்கு
வீணை நரம்பினிலே இசை துடிக்கும்.
அதுவும் மானம் மானமென்றே ஒலிக்கும்!

14. வேலுக்கு வழிசொல்ல வகையற்ற
கோழையே – என் வீரப்
பாலுக்கு வழி சொல்வாய்!

15. கருத்தெரியப் பொய் சொன்ன கயவனெங்கே?
வாளிங்கே? அவன் நாக்கெங்கே?

16. நீ சாவு முனை அடைந்திட்டால்
உன் மனையாள் காவு கொடுக்க
வேண்டுமோ காதல்தனை?



17. இத்தனை புராணத்தையும்
இந்நாட்டுப் பண்டிதர்கள்
முத்தமிழில் தீட்டித் தந்தார்
முதுகெலும்பு வளைந்ததாலே!

18. ஆபாசத்தை அழகு தட்டில் ஊற்றிப்
பாயாச மென்றுரைத்தால் பருகுவாரோ பண்டிதர்?

19. வேகத்திலே காற்றடித்தால் மேகந் தன் உருமாறும் – பண
மோகத்திலே பாய்ந்து விட்டால் கொள்கை மாறும்.

20. கட்டிய நாய்களல்ல நாம்
எட்டிய மட்டும் பாய்வதற்கு!
தட்டிய மாத்திரத்தில் தருக்கர் கொள்கை உருள வேண்டும்.
விருப்பமுள்ளவராம் வெறும் பதவியில் பல பேர்.
அவர் வேண்டாம்.
நெருப்பின் பொறிகளே! நீங்கள் தான் தேவை!

21. சேரர் வாழ்ந்த சிறப்பிடம் எங்கே?
வீரர் பாண்டியர் அரசேன் கவிழ்ந்தது?
சோழர் உலவிய சோர்விலா நாட்டில்
கோழைக் கொள்கை குவிந்த தெவ்விதம்?



22. புலிவாழ்வின் உச்சியிலே
புதுமைதனைப் பொறித்திடுவோம்.

23. பூக்காட்டில் புகுந்து வரும்
தென்றல்ல நாங்கள்!
புயல் என அறிவீர்!

24. முல்லைசூழ் இந்நாட்டுப் படையிலொடு வீரர் குறைந்திட்டால்
நல்ல உடையிலொரு கிழிசல் வந்தது போலன்றோ?

25. என் மகனே! நீயும் தோளில்
பலம் உள்ளவரையில் பகையைச் சாடு!

பரணி பாடு! இது உன்
தாய்த் திருநாடு! உடனே ஓடு!

26. அழகு சிப்பிகளால் முத்தளித்து
ஆடும் அலைகளால் உப்பளித்து
உயர்வளிக்கும் பெருங்கடல் நீர் – வாய்
கொப்பளிப்பதற்கும் பயனில்லை என்பதற்காக வெறுப்பாருண்டோ?

27. போருக்கு நாள் பார்க்க – வேண்டியது தான் பாக்கி

28. என்.எஸ்.கே.
இனிப்போடு காட்சி தருகின்ற இசைப்புலவன்!
சிரிப்பு, தழைக்கின்ற செந்தமிழன்!
தமிழேறு கலையுலகில் தனிவேந்தன்!
முனை முறிந்து போகும் வண்ணம் பணம் தந்த பாவாணன்!
நீரோடை நிலங்கிழிக்கும் நெடிய பெருந்தமிழ் நாட்டில்
சீரோடு வாழ்ந்திருந்த கலையரசே!

29. காலைக் கதிரவன் போல் கை சிவக்கக் கொடை வழங்கும்
காவலர்கள் வாழ்ந்திருந்த தமிழ்நாடு!
ஓலை கொண்டொருவன் போர் என்று வந்துவிட்டால்
மாலை சூடுகின்ற வேளையென்று பாராமல்
தோளைத் தொத்துகின்ற பெண்கிளியைப் புறம் விடுத்து
வாளைக் கூரேற்றி வான் நோக்கி நிமிர்கின்ற வீர மறவர்களின் தாய்வீடு!

30. நடக்கின்றாள் ஔவையம்மை!
நாமணக்கும் தமிழம்மை!
அறிவம்மை!
அழகம்மை!
வில்லுருவம் முதுகில் பெற்ற இள நங்காய்!
தமிழ்நாட்டு முத்தெல்லாம் தீர்ந்ததென்று பல் கழற்றிப்
பிறநாட்டு வாணிபத்தைச் செய்தவளே!

31. என்புகளைத் தெப்பமாக்கி நரி மிதக்கும் போர்க்களத்தில்
தலையுருட்டிப் பந்தாடும் பறவையினம்!

அத்தலையில் ஒரு தலையாய் என் மகன் தலையும்
இருந்தாலன்றோ இறைவனளித்த தேறலுக்கும் பெருமையுண்டு.

32. புவிப் பெண்ணாள் கழுத்தினிலே
புரளுகின்ற முத்துவடம் தென்னாடு.

33. போர் வாள்கள் உறங்குகின்ற உறைபோல மீசையுண்டு!
புவிமெச்ச வாழவேண்டும் தமிழ்நிலம் என்பதிலும் தணியாத ஆசை உண்டு!
புல்லேந்திப் படையெடுத்த கூட்டத்தைக்
கண்டுவிட்டால் குரலில் சிங்கத்தின் ஓசை உண்டு!

34. மண்ணெல்லாம் வீரம் துள்ளும் மாதர்
கண்ணெல்லாம் கற்பு சொல்லும்;
விண்ணிலே ஏறுகின்ற
கொடி நிழல் பகையை வெல்லும்; நாட்டுப்
பண்ணெல்லாம் மானம் – காட்டும்.

35. இன்னுயிர் பெரிதல்லவே இங்கு வாழ் மக்களுக்கு,
மன்னுயிர் காப்பதுவே மாத்தமிழர் இலக்கணமாம்.

36. அணிமணிகள் எவை வேண்டும் எனக்கு?
அரண்மனையில் எதுவேண்டும்?
ஆனையென்ன, சேனையென்ன? அனைத்தையும் எடுத்துக் கொள்...
அண்ணனுக்குத் தம்பியென்ற அன்பை மட்டும் கொடுத்துவிடு..


37. கனல் கொட்டும் பெருமூச்சு
கட்டபொம்மன் உயிர்மூச்சு – முழக்
கயிற்றினிலே ஆறியதால்
கயத்தாறு தலம் என்போம்.

38. உறை மீறி வெளிவந்த கத்தி போல
உயிர்மீது ஆசையின்றி பலர் போர் புரிந்தார்.

39. இவர் போலக்
கவிதை வளத்தைப் பெற்றேனில்லை

கவிதை பாடக் கற்றேனில்லை
தலையறுத்த வீரர் கதை பாடுவதால்
தலையகற்றிப் பாடுகின்றேன் நானும் – அவர்
தொடை தட்டித் துரோகிகளை வீழ்த்தியதால்
தொடை தட்டும் என் பாட்டும்!
தொடை தட்டித் துரோகிகளை வீழ்த்தியதால்
தொடை தட்டும் என் பாட்டும்! – என் கவிதை
யாப்பின்றிப் போனாலும் போகட்டும் – நம் நாடு
மொழிமானம் உணர்வெல்லாம்
காப்பின்றிப் போதல் கூடாதெனும் கொள்கை கொண்டோன்!

40. ஆடி அடங்கிடும் மெய்யென்பார்
பாடி அடங்கிடும் வாய் என்பார்
தேடி அடங்கிடும் கண் என்பார்
வாடி அடங்கிடும் மூக்கென்பார்
நாடி அடங்கிடும் செவியென்பார்
இந்த ஐம்புலன் அடக்குதல் நன்றென்பார்.
அஃதெங்கனம் முடியும்?
பைம்புள் பாட்டை மறுக்குமோ செவியும்?
பைங்கிளித் தழுவலை மறுக்குமோ மெய்யும்?
பழந்தமிழ் பேச மறுக்குமோ வாயும்?
பலாச்சுளை நிலவை மறுக்குமோ கண்ணும்?
பனிமலர் நறுமணம் மறுக்குமோ மூக்கும்?



41. மூக்கினிலே மூச்சுப் போகும் வரையினிலே
முத்தமிழுக்குத் தொண்டு செய்வீர்!
போனபின்னும் புகழாலே தமிழ் காப்பீர்!

42. இலக்கணச் சிறகு
முளைக்காமல் தவிக்கின்ற கவிக்குஞ்சு நான்.

43. ஏழைக்குதவுதல் இங்கே சொர்க்கம்
எளிமை பழக்குதல் இனிய சொர்க்கம்
இனியவை கூறல் இங்கே சொர்க்கம்
இறந்தும் வாழ்தலே இறவாச் சொர்க்கம்

44. வீரமில்லாக் காதலினால் விரக்தியுண்டு,
வாழ்வில் துணிவே இல்லை...
காதலில்லா வீரத்தில் கடுமையுண்டு,
வாழ்வில் கனிவே இல்லை....

45. காதலும் வீரமும் கட்டிப் பிறந்த
இரட்டைக் குழந்தை
இதற்குக் குடும்பக்கட்டுப்பாடில்லை, பெற்றிடுவீர் தாரளமாக!

46. அடலேறு மொழித் தமிழே இன்பக்
கடலேறு மலைத் தமிழே – சோலை
மடலேறு சுவைத் தமிழே – நீ என்
உடலேறி உயிரேறி வாழ்விக்கின்றாய்.

47. களம் காண்பான் வீரன் என்றால் நெற்
களம் காண்பான் உழவன் மகன்!
போர் மீது செல்லுதலே வீரன் வேலை வைக்கோற்
போர் மீது உறங்குதலே உழவன் வேலை! – பகைவர்
முடி பறித்தல் வீரன் நோக்கம் – நாற்று
முடி பறித்தல் நடவின் நோக்கம்
உழவனுக்கும் வீரனுக்கும் ஒற்றுமைகள் பல உண்டு.
வேற்றுமையோ ஒன்றே ஒன்று;
உழவன் வாழ வைப்பான்.
வீரன் சாக வைப்பான்.

48. கடலென்றால் வைணவர்க்குத் திருமால்
பள்ளி கொண்ட நினைவே தோன்றும்.
உடலெங்கும் நீறுபூசுஞ் சைவர்க்குச்
சிவன் நஞ்சுண்ட கதை தான் தோன்றும்.
படை கொண்டு அழிக்கவொண்ணாப் பூம்புகாரைக் கடல்
தடையின்றி அழித்துவிட்ட வரலாறெ நமக்குத் தோன்றும்.

49. எண்ணெயென இரத்தத்தைப் பெய்து தந்து
தண்ணிலவாம் தமிழன்னையைக் காக்கின்ற தீரர்களே.

50. ஒருமைப்பாடு காண இந்தியாவும் நம்
உரிமைப்பாடு காணத் தமிழகமும்
உயர்தனிக் கொள்கையெனக் கொண்டு விட்டோம்.
பயன்பல பெருக்குவதற்குத் தொண்டு செய்வோம்.

51. மாக்கவி - அரி
மாக்கவி
தலைக்கவியவர் - புதுமைக்குத்
தலைக்கவியவர் - நாட்டு விடு
தலைக்கவியவர்.
தலைப்பாகை
முறுக்கிவிட்ட குத்துமீசை
தலை
பா
கை
முறுக்கிவிட்ட குத்துமீசை
கை முறுக்கி - விட்ட குத்து
மீசை நடுநடுங்க எதிரிகளை ஓட வைக்கும்
பார்வைப் பகவலனாம் பாரதியார்!



52. பாரதிதாசன்
இவனொரு சுருட்டுக் கவிஞன் புகைச்
சுருட்டுக் கவிஞன் - இவன்
புரட்டுக் கவிஞனாவான்;
மூடப்பழக்கமெல்லாம் தலைகீழா
புரட்டும் கவிஞனாவான்.
கருத்துக் கவிஞன்; சற்று கருத்த கவிஞன்.
காலக் கவிஞன்; முக்காலக் கவிஞன்.

53. பூவிதழின் மென்மையிலும் மென்மையான
புனித உள்ளம் - அன்பு உள்ளம்
அரவணைக்கும் அன்னை உள்ளம்! - அவர்
மலர் இதழ்கள் தமிழ் பேசும்
மா, பலா, வாழையெனும் முக்கனிகள் தோற்றுவிடும்.
விழிமலர்கள் வேலாகும் வாளாகும்.

தீங்கொன்று தமிழ்த்தாய்க்கு வருகுதென்றால்...
அவர் தான் அண்ணா!

54. மூன்றெழுத்திலே ஒரு சிறப்புண்டு
முத்தமிழ் மணமுண்டு
மூவேந்தர் முக்கொடி முக்கனியென
மும்முரசார்த்தவர் தமிழர் – அவர் வாழ்ந்த
தமிழ் ‘**வாழ்வு**’க்கு மூன்றெழுத்து – அந்த
வாழ்வுக்கு அடிப்படையாம் ‘**அன்பு**’க்கு மூன்றெழுத்து...
அன்புக்குத் துணை நிற்கும் ‘**அறிவு**’க்கு மூன்றெழுத்து...
அறிவார்ந்தோர் இடையிலெழும் ‘**காதலு**’க்கு மூன்றெழுத்து..
காதலர்கள் போற்றி நின்ற கடும் ‘**வீரம்**’ மூன்றெழுத்து...
வீரம் விளைக்கின்ற ‘**களம்**’ மூன்றெழுத்து
களம் சென்று காணுகின்ற ‘**வெற்றி**’ மூன்றெழுத்து
அந்த வெற்றிக்கு நமையெல்லாம் ஊக்குவிக்கும்
அமைதிமிகு ‘**அண்ணா**’ மூன்றெழுத்து...



55. எழுதுகிறார் அண்ணா என்றால்;
ஏடெல்லாம் வீடல்லாம் தமிழ்
நாடெல்லாம் புதுமை மணக்குதங்கே!

56. யாரேனும் கேட்டதுண்டா?
பாரேனும் பகர்ந்ததுண்டா?
பதினெட்டு ஆண்டுக்குள் ஓர் இயக்கம்
பதுங்கிப் பாயும் வேங்கையெனப் பாராள வந்த கதை?

57. தலைவரென்பார், தத்துவ மேதை என்பார்,
நடிகர் என்பார், நாடக வேந்தர் என்பார்,
சொல்லாற்றல் சுவைமிக்க எழுத்தாற்றல் பெற்றார் என்பார்,
மனிதரென்பார், மாணிக்கமென்பார், மாநிலத்து அமைச்சரென்பார்,
அன்னையென்பார், அருமொழிக் காவலர் என்பார்,
அரசியல்வாதி என்பார் – அத்தனையும்
தனித்தனியே சொல்வதற்கு நேரமற்றோர் – நெஞ்சத்து அன்பாலே
‘**அண்ணா**’ என்ற ஒரு சொல்லால்
அழைக்கட்டும் என்றே – அவர் அன்னை
பெயரும் தந்தார்.

58. எதையும் தாங்கும் இதயம் வேண்டுமென்றாய்,
இதையும் தாங்க ஏதண்ணா எமக்கிதயம்?

59. இயற்கையின் சதி எமக்குத் தெரியும் அண்ணா – நீ
இருக்குமிடந்தேடி யான் வரும் வரையில்
இரவலாக உன் இதயத்தைத் தந்திடண்ணா...
நான் வரும்போது கையோடு கொணர்ந்து அஃதை
உன் கால் மலரில் வைப்பேன் அண்ணா....

60. கடுஞ்சொல்லைக் குறைத்துக் கொண்ட கருணாநிதி என்று
வரவேற்புக்கவித தந்த நாரண துரைக்கண்ணன் சொன்னார்.
அல்ல அல்ல, கடிதோச்சி மெல்ல எறியக் கற்றுக் கொண்டேன் அவ்வளவே!

61. தலைவர்க்கு, கவிஞர்க்கும், பிற தகைமைசால் மேதைக்கும்
தமக்குப் பின் வருகின்ற பரம்பரையே தகுதியாகும்.

62. பகுத்தறிவு மனிதன் வாழவில்லை – அவன்
வாழ்க்கையை நடத்துகின்றான்.

63. வாழ்வெனும் பாதையை வளப்படுத்த
வன்முறையால் ஆகாதெனல் எம் கொள்கை.
தாழ்வு உயர்வெனும் பேதம் நீங்கத்
தண்ணொளி சேர் அமைதி தேவை.



64. புரட்சியெல்லாம் மனப்புரட்சி
கிளர்ச்சியெல்லாம் உளக்கிளர்ச்சி
எழுச்சியெல்லாம் எழுத்தில் பேச்சில்
எண்ணமெல்லாம் சமதர்மம் செயல்படுத்த

65. ஆறிலும் சாவு நூறிலும் சாவு
ஆனது ஆகட்டுமென்று
அறப்போர் புரிவோன் அரிமா வீரன்;
ஆறிலும் சாவு நூறிலும் சாவு
ஆனது ஆகட்டுனென்று
அயராதின்பம் அனைத்தும் துய்ப்போன்
வீரனே அல்லன், விலங்கினும் கீழோன்!

66. தன் வீடு – தன் மனைவி – தன் பிள்ளை – தன் சுற்றம்
என்றிருப்போன் நடத்துவதும் வாழ்வன்று
எம் நாடு – எம் உரிமை – எம் மொழியாம் – அனைத்தும் காக்க
என்னாமே இயன்றதென்னாம் செய்திடுவோம் என்போன் தான் பொதுமனிதன்.

67. பதவிதனைப் பதம் பரித்தால்
'ப'கரம் நீங்கி – 'தவி! தவி' என்று சொல்லும்!
தவிக்கின்றோம் அதனாலே பதவி என்றால்!

68. இலக்குமி தான் செல்வத்தின் தெய்வம் என்பார்
இலக்குமிகள் ஒருகோடி வறுமையிலே உழல்கின்றார்.

69. தேடி அணைத்தால் ஓடி விலகும்.
கோடி கொடுத்தால் வாடி வதங்கும்.
மாடிகள் கண்டு மயங்காது
மூடி மறைத்தால் தயங்காது
நாணயமுள்ளவனை நத்திக் கிடக்கும்
ஆணவமுள்ளவனை எட்டி உதைக்கும்
தியாகியின் காலடியில் மலர்கள் கொட்டும்.
தீரனின் சேவடி தொழுது வணங்கும்.
அதுதான் புகழ்



70. இருபதும் பதினெட்டும் கூட்டிச் செல்லல் மனக்கணக்கு.
இருபது, பதினெட்டைக் கூட்டிச் செல்லல் காதல் கணக்கு.
இரண்டுக்கு மேல் இப்போது வேண்டாம் குடும்பக் கணக்கு.
இதில் குசேலனுடன் போட்டியிடல் கொடுமைக் கணக்கு.

71. மான் போட்ட கணக்குகளை வேங்கை அழித்துவிடும்.
ஏன் போட்டாய் தப்புக் கணக்கென்று
வேங்கையினை வேடன் வீழ்த்திடுவான்
இதுதான் உலகு

72. நீதிக்கு எதிரானவற்றையெல்லாம்
நேர் நின்று எதிர்த்ததாலே நேரு வானார்... இந்திய
நீள் எல்லைக் கோடு தன்னைப் பெரும்பகைவர்



கடந்த போது என்ன
நேருமோ என்றேங்கி இருந்த மக்கள்
நெஞ்சின் துயர் துடைத்து எதுவும்
நேராது நான் இருக்கிறேன் என்று சொல்லி நேருவானார்.

73. சந்தனமே!
தென் பொதிகை தவழ்ந்து வரும் இளம்காற்றே!
நந்தாச் சுடர் விளக்கே!
நறுமணத்துப் புதுமலரே!
கண்ணியத்தைக் கடமையினைக் கட்டுப்பாடெனும்
பண்பைக் கண்போலக் காத்திடற்குக்
கற்பித்த பெருந்தகையே!
சிங்கத் தமிழர்களின் சிந்தையெலாம் பறிகொண்டு
வங்கக் கடலோரம் வாய்மூடிக் கண்மூடி
மோனத் தவமிருக்கும் முத்தமிழே!
குடிசையெல்லாம் மேலுயர்ந்து
கோபுரமாய் விளங்கிடவும்
மடமையிருள், கொல்வறுமை
மடிந்தே மருகிடவும்
எல்லோரும் நலனெல்லாம்
எய்து மகிழ்ந்திடவும்
நல்லதோராட்சியினைத்
தோற்றுவித்த நாயகமே!
எண்ணக் குறிப்பறிந்தே
ஈடேற்றும் தம்பியரின் அண்ணாவே!
எனையிங்கே ஆளாக்கிக்
காத்திட்ட ஆருயிரே!

74. இனம் வாழத் தினம் அயராப் பணிபுரிவோம்
சினம் கொள்ளல் தீதன்று, தமிழர்க்குக் கேடு வந்தால்!
சிங்கத்தின் கூட்டமன்றோ; சிறுநரிகள் ஊளைக்கா தலைவணக்கம்?
பொங்குற்ற புலிகள் முன்னே புல்லியர்கள் ஆர்ப்பாட்டம்?
எங்குற்றான் என் தமிழன்?
இங்குள்ள இழிவுகளை எதிர்ப்பதற்குத் துணிவின்றிச்
செங்குத்துத் தூணைப் போல் நிற்கின்றானா?

அங்கத்தில் துடிப்பின்றிக் கிடக்கின்றானா?
அய்யோ பாவம் அவனுக்குச்
சங்கத்தில் பாட்டெழுதி அரங்கேற்றுங்கள்!

75. அண்ணனை ஒரு சீமான் என்பேன்;
அவர் நண்பர்களையே செல்வமாகப் பெற்றிருந்தார்!
அண்ணனை ஒரு துறவி என்பேன்;
அவர் வாயெல்லாம் காவி தரித்திருந்தார்!
அண்ணனை ஒரு தெய்வம் என்பேன்;
அவருக்குத் துரோகிகளும் தூபதீபம் காட்டுகின்றார்!
அண்ணனை ஒரு கண்ணன் என்பேன்;
அவரைப் பூதகியும் தூக்கிப் பால் கொடுக்கின்றாள்!

76. ஆட்சிக்கு இந்தி மொழியாம்
ஆண்டவன் பூசைக்கு வடமொழியாம்
ஒரு தமிழன் மிச்சமாக உயிரோடிருக்கும் வரை
ஒப்பமாட்டான்! ஒதிய மிலார் – முருங்கைக் கொம்புகள்
தப்பமாட்டா இரும்புத் தூண்களை மோத வந்தால்!

77. கரிசல் உண்டு மண்ணிலே
களைகள் உண்டு கழனியில்
பதர்கள் உண்டு நெல்லிலே
துரோகி உண்டு தமிழருள்
தொலைவில் இல்லை அருகிலே!



78. அஞ்ஞான இருளில் மனிதனை மனிதன்
தின்று வாழ்ந்தான்; இன்றோ
விஞ்ஞான ஒளியில் மனிதனை மனிதன்
கொன்று வாழ்கின்றான்...!

79. நான் நம்பவில்லை சிவனார் நெற்றிக்கண் திறந்த கதை!
இருந்தாலும் இங்கிருக்கும்
இழிவான சமுதாயத் தீமைகளை
எரித்துப் போட்டுச் சாம்பலாக்க

நடக்க வேண்டும் அந்தக் கதையென விரும்புகிறேன்...
நாம் திறப்போம் நெற்றிக் கண்ணை!

80. சர்வாதிகாரம்;
ஒரு வாழை மரம்
அதன் கன்றே அதனைச் சாய்க்கும்!

81. இன்செயலில் வீரம் தேக்கி
வன்செயல்கள் அறவே போக்கி
முன்பிருந்த தமிழர்களின் உணர்வைப் பெறுக
மான உணர்வைப் பெருக...
தன்மான உணர்வைப் பெருக...

82. மறைந்திருந்து மானமிகு வாலியை வீழ்த்திய
மாண்புமிகு இராமச்சந்திரனை; மாவீரன் என்று போற்ற
மகாகவி கம்பனே தயங்கினான் என்றால்
மாண்டாலும் வெற்றி வாலிக்குத் தானே!
ஆண்டாலும் அவன் தம்பி சுக்ரீவன் துரோகி தானே!

83. அறுவடைக்குப் பின் வீட்டுக்கு வந்த நெல்லை
அரிசியாக்கி உலையிலிட்டுச் சோறு படைத்தல்
அரசியல் என்றால்;
அந்நெல் விளையும் கழனிக்கு நீர் பாய்ச்சிப்
பண்படுத்தி, உரமிட்டு
அருகில் வளர்களைகளையும் அகற்றுவதே
சமுதாயப் பணி என்பேன்!

84. ஒன்றே குலம் ஒருவனே தேவன் இதனை
ஒப்புவதே உண்மை ஆத்திகமாம்!
ஒருவனை ஒருவன்
ஏமாற்றா திருப்பதே நாத்திகமாம்!
நன்றே சொல்வேன் நமக்குக் கடவுள்
நலிந்தோர் சிரிப்பில் தான்!



85. உடன்பிறப்பே!
செயல்படவிட்டோர்
சிரித்து மகிழ்ந்து நின்றாலும்
அந்த சின்னத்தம்பி
என் முதுகிலே குத்தவில்லை
நெஞ்சிலே தான் குத்துகிறான்;
அதனால் நிம்மதி எனக்கு!

86. சங்கத் தரு
தங்கத் தமிழ்
வங்கக் கடல்
பொங்கும் – இளம்
சிங்கக் குரல்
எங்கும் எழ
ஒன்றே குலம்
என்றே சொல்லி
வாழ்ந்த இனம்



87. ஆண்டவன் படைப்பில்
அனைவரும் சமம் எனில்
அவன், உயர்சாதிக்கு மட்டும்
தங்கத்தால் மூளை செய்து
தலைக்குள் வைத்தானா?
மற்ற சாதிக்கெல்லாம்
மண்டைக்குள் இருப்பதென்ன
களிமண்ணா? சுண்ணாம்பா?

88. ஏகலைவன் வித்தை கற்க
எந்தச் சாத்திரமும் அனுமதிக்கவில்லை! அவன்
வில்லில் விசயனையும் வெல்வான் என்று – கட்டை
விரலைக் காணிக்கையாகப் பெற்ற தென்ன நியாயம்?
தவம் செய்தான் சம்பூகச் சூத்திரன்
தகுதி அவனுக்கேது எனச் சீறி – அவன்
தலை வெட்டிச் சாய்த்த கதை
இராம பிரான் வரலாறன்றோ?

கட்டை விரலோ, தலையோ
காணிக்கையாக – இந்நாளில் எவனும் கேட்டால்
பட்டை உரியும் – சுடுகாட்டில் அவன்
கட்டை வேகும்.

89. செங்கோல் பறிக்கப்படினும்
சிறிதும் கவலையில்லை – என் கை
எழுதுகோலை எவரும்
பறிக்க முடியாது.

90. சில நாடுகள் இருக்கின்றன!
அங்கே
ஜனநாயகக் குழந்தை
ஜனிப்பதே இல்லை!
தப்பித் தவறிப் பிறந்து தவழ்ந்தால்
தலையை நறுக்கி ‘சூப்பு’ செய்வார்!

91. வில்லில் கணையாய் இருப்போம் என்றும்
வேலின் முனையாய் வாழ்வோம் என்றும்
சொல்லில் உறுதி காக்கும் கூட்டம்
கல்லில் எழுத்தாய் மின்னிடும்போது
கவலை எனக்கு எதற்கு?
கழகம் தான் நமக்குக் கிழக்கு?

92. பெரியாரின் பிள்ளைகள் நாம்
பேரறிஞர் தம்பிகள் நாம் – என்றும்
பிரியாத இருவண்ணக் கொடியே நாம்.

93. கொற்றக் குடையா? கொள்கையா?
எதுவேண்டும் எனில்; கொள்கையை
விற்றுப் பிழைக்க வேறு நபர் பார் என்போம்!
ஆட்சி வரும் போகும்! நிலையன்று!
அய்யா அண்ணா வகுத்த கொள்கை;
போகாது! வாழும் நிலையாக

94. அண்ணா! உன் வழியில் அயராமல் நடப்பதெல்லாம்
கண்ணால் ஒருமுறை நீ பார்த்துவிட்டால்
எம் கவலையெல்லாம் பறந்து போகும்!
தண்ணார் முழுநிலவே
தட்டாமல் நீ வந்துவிடு!

95. அடலேறுத் தமிழ் இனத்தின் கால் மிதித்தால்
நம் கால்கள் தமிழ்ப் பகையின்
தலை மிதிக்கும் எச்சரிக்கை!

96. போர் என்றால் நான் முந்தி நீ முந்தி
எனும் கூட்டம் நம் கூட்டம் அக்கப்
போர் பேர்வழிகள் கூட்டமல்ல! – வைக்கம்
போர் வீரர் வழி வந்தவர் நாம்!


97. ஒரு வயிற்றில் பிறப்பதற்கு அவ்வயிற்றில் இடமில்லை அதனாலே
ஒரு கோடித் தாய் வயிற்றில் பிறந்திட்ட உடன்பிறப்புத் தமிழர்களே!

98. சாமிதனை முதன்முதலில் தொழுதிடுவோம் – ராம
சாமிதனை முதன்முதலில் தொழுதிடுவோம், பெரியார்
ராமசாமிதனை முதன் முதலில் தொழுதிடுவோம்!
திருவரங்கப் பெருமாள் போல் படுத்திருந்த தமிழ் உணர்வைத்
திசையெட்டும் சிலிர்த்தெழுந்து முழங்கச் செய்து
தீரமிகு பணிகள் பல ஆற்றியவர் பெரியார் அன்றோ?
வங்கத்துத் தாகூர் போல நிமிர்கின்ற பார்வை உண்டு
செங்குன்றத் தோற்றம் உடலில் உண்டு – வெண்
சங்கொத்த கண்களிலே விழியிரண்டும் கருவண்டு – அதில்
சாகும் வரை ஒளி உண்டு!
பம்பரமும் ஓய்வுபெறும் சுற்றியபின் இவரோ
படுகிழமாய்ப் போன பின்னும் பம்பரமாய்ச் சுற்றி வந்தார்;
எரிமலையாச் சுடுதழலாய்
இயற்கைக் கூத்தாய்
எதிர்ப்புகளை நடுங்க வைக்கும் இடிஒலியாய்
இன உணர்வுத் தீப்பந்தப் பேரொளியாய்
இழுவுகளைத் தீர்த்துக் கட்டும் கொடுவாளாய்

இறைவனுக்கே மறுப்புச் சொன்ன இங்கர்சாலாய்
எப்போதும் பேசுகின்ற ஏதேன்சுநகர் சாக்ரடீசாய்
ஏன் என்று கேட்பதிலே வைரநெஞ்சு வால்டேராய்
எம் தந்தை பெரியாரும் வாழ்ந்திட்டார்.


99. கோளிலி என்பது என்னை விதைத்த ஊர் – திருக்
குவளையூர் என்றும் தீந்தமிழ் பேசும்!
நாற்றுப் பயிராய் அவ்வூர் வளர்ந்து – தென்றல்
காற்றுத் தமிழைத் திருஆரூர் பயின்றேன்!
ஈரோட்டுப் பள்ளியில் இனமானக் கல்வி அறிவுத்
தேரோட்டிக் காஞ்சியில் இலட்சியக் கல்வி!
இந்தித் திணிப்பை என்றும் எதிர்க்க
முந்திக் கிளம்பிய தமிழர் படையில்
இளைஞர் அணியை அன்றே கண்டு
இரண்டறக் கலந்தேன் இயக்க நடப்பில்!
அன்று முதல் இன்று வரை
அய்யா பெரியார் அணைப்பு!
ஆரத் தழுவிடும்
அண்ணாவின் ஈர இதய நனைப்பு!
அன்பு உடன்பிறப்பே! எனக்கு
உனையன்றி வேறென்ன நினைப்பு!


100. மறுபிறப்பு என்பதில் எனக்கு நம்பிக்கையில்லை!
ஆனால்,
தமிழினத்தின் மானத்திற்கு –
வீரத்திற்கு மறுபிறப்பு வேண்டுமென
மன்றாடுகிறேன்!












# கலைஞரின்


















# படைப்புலகம்








# எழுத்துலகம்

## சமூகப் புதினங்கள்

1. வெள்ளிக்கிழமை (இரண்டாம் பதிப்பு) 1968
2. சுருளிமலை (ஐந்தாம் பதிப்பு) 1968
3. வான்கோழி 1978
4. புதையல் 1975
5. ஒரே இரத்தம் 1980
6. ஒரு மரம் பூத்தது
7. அரும்பு (குறும் புதினம்) 1978
   அரும்பு (குறும் புதினம்) 1983
8. பெரிய இடத்துப் பெண் (குறும் புதினம்)
9. சாரப்பள்ளம் சாமுண்டி (குறும் புதினம்)
10. நடுத்தெரு நாராயணன் (குறும் புதினம்) 1953




## வரலாற்றுப் புதினங்கள்

1. பலிபீடம் நோக்கி 1947
2. ரோமாபுரிப் பாண்டியன் 1974
3. பொன்னர் – சங்கர் அண்ணன்மார் வரலாறு 1988
4. பாயும் புலி பண்டாரக வன்னியன் 1991
5. தென்பாண்டிச் சிங்கம் 1983
6. தாய்




## உரை ஓவியங்கள்


1. குறளோவியம் (குறுநூல்) 1956
2. குறளோவியம் (முதல் பதிப்பு) 1985
3. தேனலைகள் மூன்றாம் பதிப்பு 1982
4. சங்கத் தமிழ் (கவிதை நடை விளக்கம்) (முதல் பதிப்பு) 1987
5. திருக்குறள் கலைஞர் உரை (முதல் பதிப்பு) 1996
6. தொல்காப்பியப்பூங்கா 2003

## கட்டுரை நூல்கள்

1. உணர்ச்சி மாலை 1951
2. பெருமூச்சு 1952

3. விடுதலைக்கிளர்ச்சி (இரண்டாம் பதிப்பு) 1952
4. களத்தில் கருணாநிதி 1952
5. பேசும் கலை வளர்ப்போம் 1981
6. பூந்தோட்டமும் இனமுழக்கமும் 1986
7. யாரால்? யாரால்? யாரால்? (முதல் பதிப்பு) 1981
8. மலரும் நினைவுகள் 1996
9. இலங்கைத் தமிழா, இது கேளாய்! 1981
10. திராவிடசம்பத்து 1951
11. தலைதாழாச் சிங்கம் தந்தை பெரியார் 1985
12. உரிமையின் குரலும் – உண்மையின் தெளிவும்
13. இருளும் ஒளியும்
14. சரித்திரத் திருப்பம்
15. உண்மைகளின் வெளிச்சத்தில் 1983
16. மயிலிறகு 1993
17. அகிம்சா மூர்த்திகள் 1953
18. அல்லி தர்பார் 1953
19. இன முழக்கம்
20. உணர்ச்சி மாலை
21. கருணாநிதியின் வர்ணனைகள் 1952
22. சுழல் விளக்கு 1952
23. துடிக்கும் இளமை
24. நாடும் நாடகமும் 1953
25. விடுதலைக் கிளர்ச்சி 1952






## கடிதங்கள்

1. கலைஞர் கடிதம் தொகுதி 1 1986
2. கலைஞர் கடிதம் தொகுதி 2 1986
3. கலைஞர் கடிதம் தொகுதி 3 1986
4. கலைஞர் கடிதம் தொகுதி 4 1986
5. கலைஞர் கடிதம் தொகுதி 5 1986
6. கலைஞர் கடிதம் தொகுதி 6 1986
7. கலைஞர் கடிதம் தொகுதி 7 1986
8. கலைஞர் கடிதம் தொகுதி 8 1986
9. கலைஞர் கடிதம் தொகுதி 9 1986
10. கலைஞர் கடிதம் தொகுதி 10 1986
11. கலைஞர் கடிதம் தொகுதி 11 1996
12. கலைஞர் கடிதம் தொகுதி 12 1996
13. கலைஞர் கடிதங்கள் 1968 முதல் 2016 வரை, 54 தொகுதிகள் (2022)


## சிறுகதைகள்




1. சங்கிலிச் சாமியார் 1945
2. கிழவன் கனவு 1948
3. பிள்ளையோ பிள்ளை 1948
4. தப்பிவிட்டார்கள் 1952
5. தாய்மை 1956
6. கண்ணடக்கம் 1957
7. நாடும் நாடகமும் 1953, 1968
8. முடியாத தொடர்கதை 1982
9. கலைஞர் கருணாநிதியின் சிறுகதைகள் 1977, 1982
10. கலைஞர் கருணாநிதியின் சிறுகதைகள் (நான்காம் பதிப்பு) 1991
11. 16 கதையினிலே 1995
12. நளாயினி
13. பழக்கூடை 1979
14. வாழ முடியாதவர்கள்
15. Flame and other stories – Translation
16. ஒருமரம் பூத்தது, சிறுகதைகள், 1979




## கவிதைகள்




1. கவிதையல்ல 1945
2. கலைஞரின் கவிதைகள் 1977
3. வாழ்வெனும் பாதையில், கவியரங்கக் கதை
4. கவியரங்கில் கலைஞர் 1971
5. கலைஞரின் திரை இசைப்பாடல்கள் 1989
   தொகுப்பு: சிலோன் விஜயேந்திரன்
6. அண்ணா கவியரங்கம் 1968
7. Pearls (translation) 1970
8. முத்தாரம்
   (சிறையில் எழுதிய கவி வசனங்கள் தொகுப்பு)

## வரலாறு, தன் வரலாறு

1. இனியவை இருபது (முதல் பதிப்பு) 1973
2. இந்தியாவில் ஒரு தீவு 1978
3. ஆறுமாதக் கடுங்காவல் 1985
4. நெஞ்சுக்கு நீதி (முதல் பாகம்) முதல் பதிப்பு 1975
5. நெஞ்சுக்கு நீதி (இரண்டாம் பாகம்) முதல் பதிப்பு 1987

6. நெஞ்சுக்கு நீதி (மூன்றாம் பாகம் முதல் பதிப்பு) 1997
7. நெஞ்சுக்கு நீதி (நான்காம் பாகம்) முதல் பதிப்பு 2003
8. நெஞ்சுக்கு நீதி (ஐந்தாம் பாகம்) முதல் பதிப்பு ஜூன் 2013
9. நெஞ்சுக்கு நீதி (ஆறாம் பாகம்) முதல் பதிப்பு அக்டோபர் 2013
10. கையில் அள்ளிய கடல் (பேட்டிகளின் தொகுப்பு) 1998


## பொன்மொழிகள் - சிந்தனைக் கருத்துக்கள்


1. சிறையில் பூத்த சின்ன சின்ன மலர்கள் ( முதல் பதிப்பு) 1978
2. வைரமணிகள் (இரண்டாம் பதிப்பு) 1982
3. கலைஞரின் சிந்தனைச் சிதறல்கள் 1996
4. கலைஞரின் நவமணிகள் 1984
5. சிந்தனை ஆழி 1953
6. கருணாநிதியின் கருத்துரைகள் (முதல் தொகுப்பு) 1967
7. கலைஞரின் கருத்துரைகள் 1971
8. கலைஞரின் உவமைக் களஞ்சியம் 1978
9. கலைஞரின் சொல்நயம் 1984
10. கலைஞரின் சின்ன சின்ன மலர்கள் (முதல் பதிப்பு) 1994
11. கலைஞரின் முத்தமிழ் – சிந்தனைத்துளிகள்
12. கலைஞர் உரையில் கண்டெடுத்த முத்துக்கள்
13. கலைஞரின் உவமை நயங்கள் 1972

# நாடக உலகம் (எழுதியும் நடிக்கவும் பெற்றவை)

1. சாந்தா (அ) பழனியப்பன் (நான்காம் பதிப்பு) 1943
   (நச்சுக்கோப்பை) 1985
2. மகான் பெற்ற மகன் (அம்மையப்பன்) 1953
3. மணிமகுடம் (இரண்டாம் பதிப்பு) 1956
4. தூக்கு மேடை 1951
   இரத்தக்கண்ணீர் (தூக்குமேடைக்கு இன்னொரு பெயர்) 1953
5. உதயசூரியன் (இரண்டாவது பதிப்பு) 1959
6. ஒரே முத்தம் (இரண்டாவது பதிப்பு) 1964
7. திருவாளர் தேசியம்பிள்ளை (இரண்டாவது பதிப்பு) 1967
8. சிலப்பதிகார நாடகக் காப்பியம் 1967
9. பரதாயணம் 1978
10. புனித இராஜ்யம் 1979
11. நான்மணிமாலை (குறு நாடகங்கள்)
12. காகிதப்பூ 1966

13. பரப்பிரம்மம் 1953
14. நானே அறிவாளி 1971
15. அனார்கலி 1967
16. சாக்ரடீஸ் 1967
17. உன்னைத்தான் தம்பி
18. சேரன் செங்குட்டுவன் 1978




## கலைஞரின் சட்டமன்ற உரைகள்

1. கலைஞரின் சட்டமன்ற உரைகள் 1
2. கலைஞரின் சட்டமன்ற உரைகள் 2
3. கலைஞரின் சட்டமன்ற உரைகள் 3
4. கலைஞரின் சட்டமன்ற உரைகள் 4
5. கலைஞரின் சட்டமன்ற உரைகள் 5
6. கலைஞரின் சட்டமன்ற உரைகள் 6
7. கலைஞரின் சட்டமன்ற உரைகள் 7
8. கலைஞரின் சட்டமன்ற உரைகள் 8
9. கலைஞரின் சட்டமன்ற உரைகள் 9
10. கலைஞரின் சட்டமன்ற உரைகள் 10
11. கலைஞரின் சட்டமன்ற உரைகள் 11
12. கலைஞரின் சட்டமன்ற உரைகள் 12



# திரை உலகம்

## திரைக்கதை வசனம் எழுதிய திரைப்படங்கள்

*ராஜகுமாரி (வசனம்) (1946)*
*அபிமன்யு (வசனம்) (1948).*
*மருதநாட்டு இளவரசி (கதை, வசனம்) (1950).*
*மந்திரி குமாரி (கதை, வசனம், பாடல்) (1950).*
*தேவகி (கதை, வசனம்) (1951)*
*மணமகள் (திரைக்கதை, வசனம்) (1951)*
*பராசக்தி (திரைக்கதை, வசனம், பாடல்) (1952)*
*பணம் (திரைக்கதை, வசனம்) (1952)*
*நாம் (கதை, வசனம்) (1953)*
*திரும்பிப்பார் (கதை, வசனம்) (1953)*
*மனோகரா (திரைக்கதை, வசனம்) (1954)*
*மலைக்கள்ளன் (திரைக்கதை, வசனம்) (1954)*
*அம்மையப்பன் (கதை, வசனம்) (1954)*
*ராஜா ராணி (கதை, வசனம்) (1956)*
*ரங்கோன் ராதா (திரைக்கதை, வசனம், பாடல்) (1956)*
*புதையல் (கதை, வசனம்) (1957)*
*புதுமைப்பித்தன் (கதை, வசனம்) (1957)*






*குறவஞ்சி (கதை, வசனம், பாடல்) (1960)*
*எல்லோரும் இந்நாட்டு மன்னர் (வசனம்) (1960)*
*அரசிளங்குமரி (கதை, வசனம்) (1961)*
*தாயில்லாப் பிள்ளை (திரைக்கதை, வசனம்) (1961)*
*இருவர் உள்ளம் (திரைக்கதை, வசனம்) (1963)*
*காஞ்சித் தலைவன் (கதை, வசனம், பாடல்) (1963)*
*பூம்புகார் (திரைக்கதை, வசனம், பாடல்) (1964)*
*பூமாலை (கதை, வசனம், பாடல்) (1965)*
*அவன் பித்தனா? (திரைக்கதை, வசனம், பாடல்) (1966)*
*மறக்க முடியுமா? (திரைக்கதை, வசனம், பாடல்) (1966)*
*மணிமகுடம் (கதை, வசனம்) (1966)*
*தங்கத்தம்பி (கதை, வசனம்) (1967)*
*வாலிப விருந்து (கதை, வசனம்) (1967)*
*எங்கள் தங்கம் (கதை) (1970)*
*பிள்ளையோ பிள்ளை (கதை, வசனம்) (1972)*
*அணையா விளக்கு (கதை) 1975)*
*வண்டிக்காரன் மகன் (திரைக்கதை, வசனம்) (1978)*
*நெஞ்சுக்கு நீதி (கதை, வசனம், பாடல்) (1979)*
*ஆடு பாம்பே (கதை, வசனம்) (1979)*










*குலக்கொழுந்து (கதை, வசனம்) (1981)*
*மாடி வீட்டு ஏழை (திரைக்கதை, வசனம்) (1981)*
*தூக்குமேடை (கதை, வசனம், பாடல்) (1982)*
*காகித ஓடம் (திரைக்கதை, வசனம்) (1986)*
*பாலைவன ரோஜாக்கள் (திரைக்கதை, வசனம்) (1986)*
*நீதிக்குத் தண்டனை (1987)*
*ஒரே ரத்தம் (கதை, வசனம், பாடல்) (1987)*
*மக்கள் ஆணையிட்டால் (திரைக்கதை, வசனம், பாடல், (1988)*
*பாசப்பறவைகள் (திரைக்கதை, வசனம்) (1988)*
*பாடாத தேனீக்கள் (திரைக்கதை, வசனம், பாடல்) (1988)*
*தென்றல் சுடும் (திரைக்கதை, வசனம்) (1989)*
*பொறுத்தது போதும் (திரைக்கதை, வசனம்) (1989)*
*நியாயத் தராசு (திரைக்கதை, வசனம்) (1989)*
*பாசமழை (கதை, வசனம்) (1989)*
*காவலுக்குக் கெட்டிக்காரன் (திரைக்கதை, வசனம்) (1990)*
*மதுரை மீனாட்சி (திரைக்கதை, வசனம், பாடல்) (1993)*
*புதிய பராசக்தி (திரைக்கதை, வசனம்) (1996)*
*மண்ணின் மைந்தன் (திரைக்கதை, வசனம்) (2005)*
*பாசக்கிளிகள் (திரைக்கதை, வசனம்) (2006)*
*உளியின் ஓசை (திரைக்கதை, வசனம்) (2008)*
*பெண்சிங்கம் (திரைக்கதை, வசனம்) (2010)*
*இளைஞன் (திரைக்கதை, வசனம்) (2011)*
*பொன்னர் சங்கர் (திரைக்கதை, வசனம்) (2011)*


## திரை இசைப் பாடல்கள் இடம்பெற்ற படங்கள்:

*மந்திரி குமாரி (1950)*
*பராசக்தி (1952)*





நாம் (1953)
அம்மையப்பன் (1954)
ராஜா ராணி (1956)
ரங்கோன் ராதா (1956)
குறவஞ்சி (1960)
காஞ்சித்தலைவன் (1963)
பூம்புகார் (1964)
பூமாலை (1965)
மறக்க முடியுமா (1966)
அவன் பித்தனா? (1966)
நெஞ்சுக்கு நீதி (1979)
தூக்கு மேடை (1982)
வீரன் வேலுத்தம்பி (1987)
ஒரே ரத்தம் (1987)
மக்கள் ஆணையிட்டால் (1988)
பாடாத தேனீக்கள் (1988)
இது எங்கள் நீதி (1988)
மதுரை மீனாட்சி (1993)




## தொலைக்காட்சித் தொடர்கள்:

1. தென்பாண்டிச் சிங்கம்
2. மதத்தில் புரட்சி செய்த மகான் இராமானுஜர் (கலைஞர் 92 வயதில் வசனம் எழுதி கலைஞர் தொலைக்காட்சியில் வெளியானத் தொடர்)
3. மதத்தில் புரட்சி செய்த மகான் இராமானுஜர் (திருப்பதி தேவஸ்தானத்தார் நேரடியாக வந்து அனுமதி பெற்று தெலுங்கில் மொழிபெயர்க்கப்பட்டு ஒளிபரப்பானது.)

★★★

# பொருளாதாரத்துக்கு ஊக்க உணவு அளித்த கலைஞர்

– **ஜெ.ஜெயரஞ்சன்**
*தமிழ்நாடு திட்டக் குழு துணைத்தலைவர்*

**ச**மூக நீதி என்பது சுயமரியாதையை மீட்டெடுக்க முன்வைக்கப்பட்ட ஒரு செயல்திட்டம். சமுதாயக் கட்டமைப்பு சமமற்றதாக உருவாகி ஒரு படிநிலையையும் ஏற்றத்தாழ்வையும் நிலைநிறுத்தி மிகப்பெரும்பாலானவர்கள் பிற்படுத்தப்பட்டும் தாழ்த்தப்பட்டும் இருந்து வந்த சூழலில் எழுந்த உரிமைப் போராட்டமே சமூக நீதியாக பரிணமித்தது. அந்தக் கோட்பாட்டின் ஒரு வடிவம் தான் இடஒதுக்கீடு.

ஆனால், சமூகநீதி என்பதை இடஒதுக்கீடாக மட்டுமே சுருக்கி பார்க்கும் போக்கு பரவலாக உள்ளது. சமூக நீதியை முன்னெடுத்த திராவிட இயக்கம் இட ஒதுக்கீட்டுக்காக உரத்தக் குரல் எழுப்பியதன் விளைவாக இது நிகழ்ந்திருக்கலாம். இதே திராவிட இயக்கம் இந்தி எதிர்ப்பையும் முன்னெடுத்தது.

இந்தி எதிர்ப்பையும் ஒரு சமூக நீதி போராட்டமாக கருதலாம். இட ஒதுக்கீடு ஏற்கனவே இருந்து வரும் சமூக அநீதியை சரி செய்யும் முயற்சி என்றால், இந்தி எதிர்ப்பு என்பது மொழி ரீதியாக ஏற்பட இருந்த சமமற்ற நிலையை தவிர்க்க எழுந்த போராட்டம் ஆகும்.

அதுவும் ஒரு சுயமரியாதை போராட்டம்தான். சுயமரியாதையை ஏற்படுத்த இவை மட்டும் போதுமானவை அல்ல. மனிதனை மனிதன் எங்கெல்லாம் எதன் வழியாகவெல்லாம் இழிவாகவும் வேறுபடுத்தியும் நடத்துகிறானோ அங்கெல்லாம் சுய மரியாதை திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு சமூக நீதி பிறக்க வேண்டும்.

சமூக சீர்திருத்த இயக்கமாக இருந்து ஓர் அரசியல் கட்சியாக உருவாகி 20 ஆண்டுகளில் தமிழக ஆட்சி அதிகாரத்தை பிடித்த திமுக, 1967க்கு பின் பல திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தியது. அண்ணாவின் மறைவுக்கு பின் முதல்வரான கலைஞர், இதனை பல தளங்களிலும் மிக நுட்பமாக செயல்படுத்தினார்.

போக்குவரத்து, மின் வசதி, கல்வி, இடஒதுக்கீடு, மகளிர் நலன், ஒடுக்கப்பட்டோர் மற்றும் புறக்கணிக்கப்பட்டோர் நலன், நிலச்சீர்திருத்தம் என பல துறைகளில் இந்த சுயமரியாதை திட்டம் செயல்படுத்தப்பட்டது. இதனை நுட்பமாக உற்று நோக்க நாம் ஒரு துறையை எடுத்துக் கொள்வோம்.

**உணவும் சமூக அநீதியும்:**

தமிழகத்தில் 50–60 ஆண்டுகளுக்கு முன்பு வரை மக்கள் தொகையில் பெரும் பகுதியினர் ஊரகப்பகுதிகளில் வாழ்ந்தனர். பெரும்பான்மையானோர் வேளாண்





தொழிலில் ஈடுபட்டு வந்தனர். பெரும்பாலானோர்களிடம் நிலம் இல்லை. நிலம் வைத்திருந்தோரை அண்டித்தான், இந்த நிலமற்றவர்கள் பிழைத்தனர். நிலம், மேல் சாதிக்காரர்களிடம் குவிந்திருந்தது. பிற்படுத்தப்பட்டோரும் தாழ்த்தப்பட்டோரும் இவர்களிடம் வேலை செய்துதான் வயிற்றைக் கழுவினர்.

சாதிய அடுக்குமுறையும் நில உடைமையும் இணைந்து செயல்பட்டதால் பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் பெரும் எண்ணிக்கையிலானவர்கள், தங்கள் உணவுத் தேவைக்காக அன்றாட அவமானங்களை சுமந்து வாழ்ந்தனர். வேறு வேலை கிடைப்பதும் அரிது. வறுமையும் வாட்ட, இழி நிலைகளுக்கிடையேதான் அவர்கள் வாழ்க்கை நடந்தது.

வேளாண் உற்பத்திக்கு தேவையான, மனித உழைப்பை பெற தங்கள் முழு கட்டுப்பாட்டில் நில உடைமையாளர்கள் அவர்களை வைத்திருந்தனர். அவர்கள் மனது வைத்தால்தான் நிலமற்றவர்களின் வீடுகளில் அடுப்பெரியும் என்பதுதான் நெடுங்காலம் நிலவிய நிலை. அதுமட்டுமல்ல, உழைப்பவர்களுக்கு அளிக்கப்பட்ட கூலி (அது தானியமாக இருந்தாலும் – பணமாக இருந்தாலும்) அவர்களின் உணவுக்கு எவ்வளவு தேவையோ அதே அளவில்தான் நெடுங்காலம் தொடர்ந்ததை ஆய்வுகள் துல்லியமாக படம் பிடித்துள்ளன.

இத்தகைய சூழலில் நிலமற்றோர் நில உடைமையாளர்களை எந்த அளவுக்கு சார்ந்து இருப்பார்கள்? அன்றாட உணவே நில உடைமையாளர்களை நம்பித்தான் என்றால் சாதிய படிநிலையும் நில உடைமையும் நில உடைமையாளர்களின் அதிகாரமும் எவ்வளவு வலுவுடன் கட்டமைக்கப்பட்டிருக்கும்? இந்த அமைப்பில் உழைக்கும் மக்களின் சுயமரியாதை என்னவாக இருந்திருக்கும்?

உழைக்கும் மக்கள் இந்த அவமானங்களில் இருந்தும் ஒடுக்கு முறைகளில் இருந்தும் வாய்ப்பு கிடைத்தபோதெல்லாம் தப்பிக்க பெருமுயற்சி செய்துள்ளனர். அப்படி நிகழ்ந்ததுதான் பெரும் எண்ணிக்கையிலான உழைக்கும் மக்களின் வெளிநாடுகளுக்கான இடப்பெயர்ச்சி, இலங்கைக்கும், மலேசியாவுக்கும், மொரிஷியசுக்கும் தோட்டங்களில் வேலை செய்ய ஓடினார்கள்.

ஓடியதால் என்ன விடிவு கிடைத்திருக்கும்? ஒடுக்கப்பட்டவர்களில் பலர் மதம் மாறியும் பார்த்தனர். பெரும் அளவிலான விடுதலை ஒன்றும் கிடைக்கவில்லை. உணவின் மீதான நில உடைமையாளர்களின் பிடி தொடர்ந்து கொண்டே இருந்தது. இந்த பிடி தளர்ந்தால் மட்டுமே அந்த நிலப்பிரபுத்துவ அமைப்பு ஆட்டம் காணும். உழைக்கும் மக்களுக்கு சமூக நீதி கிடைத்து அவர்கள் சுயமரியாதை பெறுவர்.

தமிழக அளவில் இதனை சாத்தியமாக்கியவர் கலைஞர். இரண்டாம் உலகப்போர் காலத்தில் உணவு தானிய பற்றாக்குறை ஏற்பட்ட போது நகர்ப்புறங்களில் ரேஷன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் பின்னர், நகர்ப்புறங்களில் மட்டும் சிறிய அளவில் பொது விநியோகம் என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டது. இந்நிலை 1970களின் தொடக்கம் வரை தொடர்ந்தது.

1967 தேர்தலை சந்தித்த திமுக ரூபாய்க்கு மூன்றுபடி என்ற திட்டத்தை முன்வைத்தது. ஆட்சிக்கு வந்தபின் அதற்கான நிதி, தானியம், கட்டமைப்பு போன்ற எதுவும் இல்லை என்பதை அரசு உணர்ந்தது. சிறிய அளவில் செயல்பட்ட அரிசி திட்டமும் சென்னை கோவை நகரங்களில் மட்டுமே நிகழ்ந்தது.

ஊரகப்பகுதிகளில் பொது விநியோகம் என்ற ஒன்றே இல்லை. பஞ்சமோ வறட்சியோ கிராமப்புறங்கள் கண்டுகொள்ளப்பட்டது இல்லை. உணவுப் பற்றாக்குறை நகரங்களுக்கானது என்றே அதுவரை கருதப்பட்டது. பசுமைப் புரட்சி தோன்றிய





தருவாயில் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்ட கோதுமையையும் அரிசியையும் விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்து விநியோகிக்க இந்திய உணவுக் கழகம் 1965 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

சேமித்து வைக்கப்பட்ட உணவுத் தானியத்தை மாநிலங்களுக்கு விநியோகிக்க எந்தக் கொள்கையையும் ஒன்றிய அரசு கொண்டிருக்கவில்லை. மாறாக தன் விருப்பம் போல் அதனை மாநிலங்களுக்கு அளித்து வந்தது. இதன் விளைவாக தானிய விநியோகம் ஒரு அரசியல் ஆயுதமாக ஒன்றிய அரசிடம் வந்து சேர்ந்தது.

பிறநாடுகளின் கையை எதிர்பார்த்தால் உணவு ஓர் அரசியல் ஆயுதம் ஆகிவிடும் என்பதை உணர்ந்த ஒன்றிய அரசு பசுமை புரட்சிக்கு வித்திட்டது. ஆனால், அதே ஒன்றிய அரசு உணவு தானிய விநியோகத்தை ஓர் ஆயுதமாக வெகுகாலம் பயன்படுத்தியது.

**நுகர்பொருள் வாணிபக் கழகம்:**

1969 ஆம் ஆண்டில் தமிழகத்தில் உணவு பற்றாக்குறை ஏற்பட, முதல்வராக கலைஞர் முதல் முறையாக டெல்லி சென்ற போது அவரது முக்கிய வேண்டுகோள், அரிசி வேண்டும் என்பதே. அப்போதைய உணவு அமைச்சராக இருந்த ஜெகஜீவன் ராம், கலைஞர் மீது இருந்த அன்பினால், முதல் தவணையாக 20,000 டன்னும் இரண்டாம் தவணையாக 10,000 டன்னும் அளித்தார்.

அதன்பின்னர், எப்போது உணவு தேவைப்பட்டாலும் ஒன்றிய அரசிடம் பிச்சை எடுப்பது போன்ற சூழல் நிகழ்ந்து கொண்டே வந்தது. குறிப்பாக, 1971 தேர்தலில் திமுக பெரும் வெற்றி பெற்று கலைஞர் மீண்டும் முதல்வர் ஆனதும் ஒன்றிய அரசு கையில் எடுத்த ஆயுதம் உணவுதான்.

எப்போது தமிழகம் உணவு வேண்டும் என்று கோரிக்கை வைத்தாலும் ஒன்றிய அரசு செவிகளை மூடிக் கொள்ளும். இந்த அரசியலை சமாளிக்கும் வண்ணம், கலைஞர் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தினை 1972 ஆம் ஆண்டு உருவாக்கினார்.

அதே சமயத்தில் இத்தகைய அமைப்புகள் கர்நாடகம், ஆந்திரம் போன்ற மாநிலங்களிலும் தோன்றின. ஆனால், தமிழகத்தில் வாணிபக் கழகத்துக்கு வேறு உருவம் கொடுத்தார் கலைஞர். இந்திய உணவுக் கழகம் எப்படி கட்டமைக்கப்பட்டு இருந்ததோ அதே வகையில் நுகர்பொருள் வாணிபக் கழகம் உருவானது.

நெல்லை கொள்முதல் செய்வதற்கு நேரடி கொள்முதல் நிலையங்கள், அதனை சேமித்து வைக்க கிடங்குகள், நெல்லை அரிசி ஆக்க நவீன ஆலைகள் என அனைத்து கண்ணிகளும் கவனத்தில் கொள்ளப்பட்டன. ஓரிரு ஆண்டுகளிலேயே இந்திய உணவுக் கழகம் செயல்பட்ட அளவுக்கு தமிழக நுகர்பொருள் வாணிபக் கழகமும் செயல்படத் தொடங்கியது.

வாணிபக் கழகம் தொடங்கப்பட்ட போது, தொடங்கப்பட்ட கர்நாடக, ஆந்திர அமைப்புகளின் வளர்ச்சியை விட தமிழக அமைப்பின் வளர்ச்சி இரண்டு ஆண்டுகளில் 10 மடங்கு கூடுதலாக இருந்தது. ஆனால், இதோடு மட்டும் அரசின் முயற்சி நின்றுவிடவில்லை.

கொள்முதல் செய்து சேமித்து வைக்கப்பட்ட தானியங்கள் தேவைப்படுவோரின் தட்டுகளுக்கு சென்றடைந்தால்தான் நோக்கம் நிறைவேறும். இதற்காக வாணிபக் கழகம் விற்பனை நிலையங்களை திறக்குமாறு பணிக்கப்பட்டது.

1974 ஆம் ஆண்டு கலைஞர், பொது விநியோக முறையில் பெரும் மாற்றத்தை உருவாக்கினார். அதுவரையில் நகர்ப்புறங்கள் மட்டுமே கவனத்தில் கொள்ளப்பட்ட நிலையை மாற்றி மாநிலத்தின் ஊரகப்பகுதிகளுக்கும் பொது விநியோகத்தை விரிவுப்படுத்தினார். இதனை செயல்படுத்த சில்லறை விநியோகக் கடைகளைத் திறந்தது மட்டுமின்றி ஊரகம், நகர்ப்புறம் என்று அனைத்து பகுதிகளிலும் இருந்த குடும்பங்கள் கணக்கெடுக்கப்பட்டு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டன. இந்த கொள்கை முடிவுதான் அரிசியின் அரசியலை சமூக நீதி செயல்பாடாக மாற்றி அமைத்தது.

அரிசிக்கு நில உடைமையாளர்களை நம்பி இருந்த நிலையை தகர்க்க வைக்கப்பட்ட முதல் புள்ளி இதுதான். ஊரகத்தில் இருப்போருக்கும் பொது விநியோகம் சென்றடைய வேண்டும் என்ற எண்ணம் சுயமரியாதையை சிந்திக்காதவர்களிடம் ஏற்பட வாய்ப்பே இல்லை.

ஒரு வலுவான பொது விநியோக முறையை நிறுவிட பஞ்சமும் பற்றாக்குறையும் நிலவிய போதெல்லாம் தேவையான அளவுக்கு தானியத்தை கொள்முதல் செய்வதற்கான பல கட்டுப்பாடுகளை அரசு விதித்தது. பல சமயங்களில் வாணிபக் கழகம் மட்டுமே ஏகபோக கொள்முதல் போன்ற கொள்கை முடிவுகளும் நெல் வர்த்தகத்திற்கு பல சமயங்களில் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளும் அரசுக்கு கடும் அவப்பெயரை பெற்றுத் தந்தன. இதற்கிடையேதான் பொது விநியோக முறையின் அடித்தளம் 1972 – 1976 க்கு இடையே கட்டமைக்கப்பட்டது.

சில்லறை வர்த்தக கடைகள் தொடர்ந்து அதிகரித்தன. ஒன்றிய அரசு போதுமான அளவிற்கு தானியத்தை ஒதுக்கீடு செய்யாத போதெல்லாம் வெளிச்சந்தையில் பிற மாநிலங்களில் வாங்கி விநியோகிப்பது தொடர்ந்தது. நெடுநாட்கள் வரை வாணிபக் கழகம் லாபம் பார்க்காமல் அடக்க விலைக்கே பொருட்களை விநியோகித்து வந்தது. அரிசி ஊரகப்பகுதிகளுக்கு சென்று சேர்ந்ததே தவிர அது மானியத்துடன் வழங்கப்படவில்லை. இலாபம் இன்றி அடக்க விலைக்கே விற்பனை செய்யப்பட்டன.

அந்த சமயத்தில் வேளாண்மைத் தொழிலை நம்பிய பெரும்பாலான ஊரகத்தொழிலாளர்கள் வாழ்ந்து வந்தனர். மாற்று வேலைவாய்ப்புகளும் சொற்ப அளவிலேயே கிடைத்தன. ஆண்டின் பாதி நாட்களுக்கு கூட வேலைவாய்ப்பு இருந்திருக்கவில்லை. தானியங்களை கூலியாக அளிப்பதும் குறைந்து போய் இருந்தது. பணக்கூலி மட்டமும் குறைவாகவே இருந்தது.

பொது விநியோகத்திட்டத்தின் கீழ் உணவு தானியங்கள் வழங்கப்பட்ட போதும் அவற்றை ஒன்று சேர வாங்கும் பணத்திறன் பலரிடம் இல்லை. எனவே, அப்போதிருந்த விவாதங்களில் ரேசன் பொருட்களை தவணை முறையில் வழங்கும் திட்டமும் ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டன. இப்படியாக, பொது விநியோக அமைப்புமுறை கட்டமைப்புகள் அனைத்தும் உருவாக்கப்பட்டும் கூட தேவைப்படுவோர் அனைவருக்கும் சென்றடையவில்லை. அல்லது எல்லா காலத்திலும் தடையின்றி கிடைக்கவில்லை.



தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் சில்லறை விநியோகக்கடைகளின் எண்ணிக்கை 1972–1973 ஆம் ஆண்டு 36ல் இருந்து 2012 ஆம் ஆண்டு 33,222 கடைகளாக உயர்ந்துள்ளன. கடைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் முயற்சி தொடர்ந்து நடைபெறுகிறது.

உணவுப் பொருளுக்கு பெரிய அளவில் மானியம் வழங்கினால் தேவைப்படுவோர் அனைவரும் பயன்பெறுவர் என்று முடிவெடுத்து மீண்டும் பொது விநியோகத்தை சமூக நீதியாக கையிலெடுத்தவர் கலைஞர்.

2006 ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் அரிசி கிலோ ரூ.2க்கு வழங்கப்படும் என்று கலைஞர் அறிவித்து வெற்றி பெற்ற பின் அதனை செயல்படுத்தினார். குடும்ப அட்டை வைத்திருந்த அனைவருக்கும் 20 கிலோ அரிசி இந்த விலையில் வழங்கப்பட்டது. 2008 ஆம் ஆண்டு முதல் விலை ஒரு ரூபாயாக குறைக்கப்பட்டது. ரூபாய் 20க்கு 20 கிலோ அரிசி மாதா மாதம் கிடைக்கும் என்ற நிலைதான் உணவு அரசியலை முற்றிலுமாக மாற்றி அமைத்தது. அச்சமயத்தில் வேளாண் அல்லாத ஊரக வேலைவாய்ப்புகள் பெருகிவிட்டன. கூலி மட்டமும் உயர்ந்து விட்டது. அது வரையில் பொது விநியோகத்தில் வழங்கப்பட்ட பொருட்களை வாங்கும் திறன் இல்லாதோர் அவற்றை வாங்கத் தொடங்கினர்.

அரிசியின் விலையை குறைத்து வழங்க தொடங்கியதன் விளைவாக பொது விநியோகத்தை பயன்படுத்துவோரின் எண்ணிக்கை ஊரகப்பகுதியில் 2011–2012 ஆம் ஆண்டுகளில் 90 விழுக்காடு ஆக உயர்ந்தது. இந்தியா முழுமைக்கான புள்ளி விபரத்தை நோக்கினால் 2004–2005 ஆம் ஆண்டில் 24 விழுக்காடு ஊரக குடும்பங்கள் மட்டுமே பொது விநியோகத்தில் அரிசியை பெற்றனர் (கோதுமை வாங்கியோரின் அளவு வெறும் 11 விழுக்காடு மட்டுமே).

இப்படியாக விலை குறைந்த அரிசி திட்டத்தினால் வறியவர்களில் பெரும்பான்மையினர் பயன் பெற்றனர். இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இது போன்று அடித்தட்டு மக்கள் பொது விநியோகத்திட்டத்தினால் பயன்பெறவில்லை என்பதும் தேசிய மாதிரி ஆய்வு நிறுவன புள்ளி விபரங்களில் இருந்து தெரிய வருகிறது.

அனைவருக்குமான பொது விநியோகம் கிட்டத்தட்ட இலவசமாக வழங்கப்பட்ட அரிசி என உணவுப் பாதுகாப்பு, கலைஞர் ஆட்சியில் புதிய பரிணாமத்தை எட்டியது. நில உடைமையாளர்களை சார்ந்திருந்த ஊரக மக்களின் நிலை அடியோடு மாறிப்போனது. நில உடைமையாளர்கள் தங்கள் அதிகாரத்தை முற்றிலும் இழந்தனர். ஒரு சமூக அநீதியும் அதன் வழித்தோன்றலான இழி நிலையும் மாறின.

உணவு கிட்டாமை என்ற தளை அறுந்ததால் மக்கள் புதிய பாதையில் பயணிக்கத் தொடங்கினர். இந்த மாற்றத்தின் காரண கர்த்தா கலைஞர். நில உடைமையாளர்களின் கைகளில் இருந்து வந்த உணவு என்ற பேராயுதத்தை பறித்து அதிகார மாற்றத்தை விளைவித்ததும், சாமானியர்களின் சுயமரியாதையை மீட்டதும் சமூக நீதி எனும் நெடும்பயணத்தில் ஒரு குறிப்பிடத்தக்க படிநிலை அல்லவா!

★★★

# எல்லோரையும் காத்த கலைஞரின் கொடை

**- என்.ராம்**

முன்னாள் முதன்மை ஆசிரியர்

தி இந்து ஆங்கில நாளிதழ்

**ச**மீபத்தில் வேறு ஒரு சூழலில் நான் இப்படி எழுதினேன்: "ஆண்டாண்டு காலமாக முத்துவேல் கருணாநிதி (1924–2018) இந்திய அரசியலில் எல்லோரையும்விட மூத்த ராஜதந்திரியாக, முக்கியத்துவம் வாய்ந்த ஆளுமையாக இருந்தார். அவரது பன்முகத் தன்மையால் அரசியலில் மீள் எழும் தன்மையால், சட்டமியற்றும் புத்தி கூர்மையால், நிருவாகத்திறனால், வாழ்நாள் முழுவதும் ஈடுபட்டு வந்த இலக்கியப் பண்பாட்டுச் செயல்பாடுகளால் மிகு உணர்ச்சியைக் கையாளும் நுண்ணறிவால், சமூகத்திலும் கல்வியிலும் பின்தங்கியோர் குறித்த உணர்திறனால், போராட்டக் குணத்தால் தொல்புகழ் கொண்டவர் அவர்." அந்த மனிதரின் மீதோ அவர் எவற்றுக்காகப் பாடுபட்டாரோ அவற்றின் மீதோ கருத்தியல் ரீதியாக, தனிப்பட்ட முறையில் அல்லது முற்றிலும் அகநிலை காரணங்களினால் தீர்மானமாக எதிராக வெறுப்பும் எதிர்ப்பும் அற்ற யார் ஒருவரும் எனது மதிப்பீட்டை அற்பமாக மறுக்க பெரிதும் எதுவும் இருக்காது என்று நான் நம்புகிறேன்.

இந்திய விடுதலைக்கு ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பு கருணாநிதியின் அரசியல் பணி ஆரம்பமானது. அது எண்பது ஆண்டுகளுக்கு நீடித்தது. சுதந்திர இந்தியாவில் அவர் தலைமையேற்று நடத்தியதைப் போல நீண்ட காலத்திற்கு எவரும் தமது கட்சியை நடத்தியது இல்லை.

1969 பிப்ரவரியில் சி.என்.அண்ணாதுரையின் மரணத்தைத் தொடர்ந்து அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரானார். அதன் அடையாளமானார். 2018 ஆகஸ்ட் மாதம் அவர் மரணமடையும் வரையில் உடல் தளர்வடைந்த போதும் நலிவுற்றபோதும் அவரே தலைவராக நீடித்தார். எப்போதும் அவர் அமைப்பு சார்ந்தவராகவே இருந்தார்.

தொண்டர்களால் கட்டமைக்கப்பட்ட ஒரு கட்சியை ஒரு சமூக இயக்கத்தின் ஒரு பகுதியாக உருவாக்க அவர் ஓய்வின்றி உழைத்தார். மாநில மற்றும் தேசிய அரசியலில் திராவிட முன்னேற்றக் கழகம் எழுபது ஆண்டுகளுக்கு மேலாக ஓர் உயிர்ப்புள்ள உறுதியான தாக்கத்தை ஏற்படுத்தும் இயக்கமாக தன்னை வைத்துகொண்டிருக்கிறது. கலந்து ஆலோசித்து முடிவெடுக்கும் தன்மை (கூட்டுத் தலைமையுடன் இதை குழப்பிக்கொள்ளக் கூடாது) கொண்ட தலைமையும், நன்கு கட்டமைக்கப்பட்ட கட்சி அடித்தளமும், அதனால் விளையும் கட்சிப் பணி நெறிமுறைகளுமே இதற்குக் காரணங்கள்.

கட்சியை வலுவிழக்கச் செய்யும் வகையில் ஒரு பெரும் பிளவும் மூன்று அதிக முக்கியத்துவம் அற்ற உடைதலும் விலகலும் நடந்தேறிய நிலையிலும் இது சாத்தியமானது என்பது, தி.மு.க. தலைவரின் அரசியலில் மீண்டெழும் மனம், சமன் குலையாத தனி மனித மனோபாவம் ஆகியவற்றின் அளவீடுதான்.





ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக நீடித்துள்ள இந்த யுகத்தில் இந்தியாவிலேயே அதிக வளர்ச்சி கண்ட சிறந்த செயல்பாடு கொண்ட மாநிலங்களில் ஒன்றாகத் தமிழகம் எழுந்தது. அத்தியாவசிய தேவைகளை அளித்தல், பொது விநியோகத் திட்டம், மக்கள் நல்வாழ்வு, சமூக நலன், உள்கட்டமைப்பு தொழில் வளர்ச்சி போன்ற துறைகளில் மாநிலங்களின் தரவரிசை பட்டியல்கள் அவ்வப்போது வெளியாகும்போது தமிழகம் அவற்றில் மேல்நிலை வகித்து வந்தது.

பள்ளிக் குழந்தைகளுக்கான எம்.ஜி.ஆரின் சிறப்பு வாய்ந்த மதிய உணவு திட்டத்தால் முதல்வர் எம்.ஜி.ஆர் நினைவில் நிற்பதுபோல, வளர்ச்சி மற்றும் சமூக நலத் துறைகளில் உழவர் சந்தை, ஏழைகளுக்கான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், சமத்துவபுரம், மாநிலத்தில் தகவல் தொழில்நுட்ப பிரிவில் முன்னேற்றம் போன்ற புதுமையான திட்டங்கள் கருணாநிதியின் கொடைகளில் முக்கிய இடம் வகித்தன.

இந்திய அரசியல்வாதிகளில் தனித்துவம் பெற்றவராக தனது அறுபது ஆண்டு கால சட்டமன்ற பணியில், அவர் போட்டியிட்ட ஒவ்வொரு தேர்தலிலும் வெற்றி பெற்று வந்தார் கருணாநிதி. எல்லாவற்றிற்கும் மேலாக தமிழக சட்டமன்ற நடவடிக்கைகளின் மீது மரியாதையும் அவற்றில் ஆழ்ந்த ஈடுபாடும் கொண்டிருந்தார் அவர்.




மன்றத்தில் அரசியல் விவாதக் கலையில் ஆர்வம் பொங்கவும், சவாலாகவும், விட்டுக்கொடுத்தும், விடாப்பிடியாகவும் இயங்கி மேன்மை பெற்றிருந்தார். பேச்சாற்றல் மிளிரும் அவரது பேச்சுப் பாணி, மேதைமை, இலக்கிய ஒப்புமைகள், வரலாற்று உணர்வு முரண்நகை, இதமளிக்கும் அறிவார்ந்த நகைத்திறன் ஆகிய அவரது சகல திறமைகளும் கட்சிக்கும், திராவிட இயக்கத்துக்கும் முக்கியச் சொத்தாக விளங்கின.

அரசமைப்புச் சட்டத்தின் கீழ் தனக்கான உரிமைகளைப் பெற போராடிய மாநிலத்திற்கும் அவை பயன் நல்கின. கலாசார ரீதியாக, இலக்கிய ரீதியாக, பத்திரிகையாளனாக பல ஆண்டுகால அவரது பங்களிப்பு என்பது ஆச்சரியமளிப்பதாகும். அவர் காலத்திய இந்திய அரசியல்வாதிகளில் ஒரு தனித்த இரகத்தைச் சார்ந்தவராக அவரது திறமைகள் அவரை வெளிப்படையாகக் காட்டுகின்றன.

ஒரு தருணத்தை நழுவவிடாமல் கைப்பற்றுவது, கூட்டணி அரசியலில் மற்றவர்களுடன் இணைந்து பணியாற்றுவது, அவரது தொலைநோக்கு ஆகியவற்றின் காரணமாக நீண்ட நெடிய காலம் வரை தேசிய விவகாரங்களில் தமிழ்நாடு ஜனநாயக முறையில் முற்போக்கு சிந்தனையுடன் பங்காற்ற முடிந்தது.

கருணாநிதியின் வாழ்வையும் ஆற்றிய பணியையும் ஒரு சமநிலை காக்க மேற்கொண்ட கடும் உழைப்பு என்றே கண்டுகொள்ளலாம்.

அரசாட்சி செய்வதற்கும் சமூக மாற்றத்திற்கும் அர்ப்பணித்துக் கொண்ட ஓர் இயக்கத்திற்கு தமைமையேற்றதற்கும் இடையே உள்ள உள்ளார்ந்த முரண்பாடுகளுடன் அவர் போராட வேண்டியிருந்தது. கருணாநிதி போராடினார். மற்றவர்களுக்காக அந்த வலிமையும் வாதையையும் சகித்துக்கொண்டார்.



இந்த இரு உலகங்களையும் பிணைத்ததற்கான விலையையும் அவர் ஏற்க வேண்டியதாயிற்று. விட்டுக் கொடுத்தல் என்ற புதிய வழியின் மூலம் இந்திய அரசியலை புதிதாக வரையறை செய்வதிலும் அறிவார்ந்து எடுத்துச் செல்வதிலும் கலைஞர், ஒரு வழியில் என்றில்லாமல் பல்வேறு வழிகளிலும் வெற்றி கண்டார். இந்த விட்டுக் கொடுத்து வெற்றி எய்தும் புதிய வழியில்தான் முற்போக்கு இலட்சியங்களை மெல்ல மெல்ல சாதிக்க முடிந்தது.

இப்படிக் கூறுவது ஒரு பெரும் உரிமை கோரும் செயல்தான். இக்கருத்துடன் ஒருவர் உடன்பட்டாலும், படாவிட்டாலும் அல்லது ஒரு பகுதியை மட்டும் ஏற்றாலும் ஒன்றை மட்டும் மறுத்துப் பேச முடியாது; நவீன கால அரசியலில் கருணாநிதி ஒரு தனி இரகம்.

அவரை வடிவமைத்த அவரது திறமைகளுக்கும் படைப்பாற்றலுக்கும் முழுமையாக வழிவகுத்து பயன்படுத்திக் கொண்டது சமூக நீதி இயக்கம். அதன் இலட்சியங்களைச் சாதிக்க துணிவும் வீரமும் துணைகொண்டு முழுமூச்சோடு தீவிரமாகப் போராடி முன்னேறியவர் அவர். தனது நீண்ட நெடிய வாழ்க்கைக்கு வளமிகு அர்த்தம் அளித்தவர்.

அவரது மரணத்திற்கு முப்பது ஆண்டுகளுக்கு முன்பு தனது கல்லறை வாசகமாக அவரே வழங்கிய எளிய சொற்றொடரின் உண்மையான முக்கியத்துவம் இதுதான்.

அந்த வாசகம் இதுதான்

‘ஓய்வு எடுக்காமல் உழைத்தவன் இதோ ஓய்வெடுத்துக்கொண்டு இருக்கிறான்’

# தமிழ்நாட்டை வளர்த்த பெருமை அவரையே சேரும்!

**- பத்திரிகையாளர் ஏ.எஸ்.பன்னீர்செல்வம்**

மொழி, அதிகாரம், சுயமரியாதை, கலை, இலக்கிய வடிவங்கள், திரைப்படங்கள் ஆகியவை அரசியலுடன் தொடர்பைக் கொண்டிருக்கும் ஒரு மாநிலத்தில் கலைஞரின் வாழ்க்கை நவீன தமிழ்நாட்டின் இயற்கையான உருவகமாகவே மாறியுள்ளது. அவருடைய பன்முகத் தன்மை கொண்ட ஆளுமையின் மூலம் திராவிட இயக்கத்தின் இயல்பான பரிணாமத்தை அறியமுடிகிறது. புரட்சிக்காகக் குண்டுகள், துப்பாக்கிகளைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக தனது அரசியல் நிலைப்பாட்டுக்காக பேனாவையும் நாவையும் பயன்படுத்தினார்.

மகாத்மா காந்தியைப் போலவே தந்தை பெரியாரும் தேர்தல் அமைப்புகளில் பங்கேற்று ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முனையவில்லை. ஆனால் பேரறிஞர் அண்ணாவும் கலைஞரும் ஜவஹர்லால் நேருவைப் போல தேர்தலில் பங்கெடுத்து ஆட்சி அதிகாரத்திற்கு வந்தார்கள்.

சமூக மாற்றம் காண உறுதிபூண்ட ஓர் இயக்கத்தை நடத்திச் செல்வதற்கும் ஓர் அரசாங்கத்தை நடத்துவதற்கும் இடையிலான உள்ளார்ந்த முரண்பாடுகளுடன் போரிட பேரறிஞர் அண்ணா நீண்ட காலம் வாழவில்லை. ஆனால், கலைஞர் இந்த இரண்டு உலகிலும் நீண்ட காலம் இருந்திருக்கிறார்.

புரட்சிகரமான ஒற்றை நடவடிக்கையின் அடிப்படையில் இவர் மாற்றங்களை முன்னெடுக்கவில்லை. தொடர்ச்சியாகவும் சிறிது சிறிதாகவும் இவர் கொண்டு வந்த மாற்றங்கள் பிறகு ஒருபோதும் மாற முடியாதவையாக நிலை பெற்றுவிட்டன.

கலைஞரின் ஆட்சி நிர்வாகத்தின் முக்கிய அடையாளமாக விளங்கிய சமூகநலத் திட்டங்களுக்கான உந்துதல் 1947–1949 வரையிலான அவரது வாழ்க்கை அனுபவத்திலிருந்தே கிடைத்தது என்று கலைஞரின் ஆட்சி காலத்தில் வருவாய்த் துறைச் செயலாளராக இருந்தவரும், பொருளாதார ஆலோசகராக இருந்தவருமான எஸ்.குகன் பலமுறை சொல்லி இருக்கிறார்.

‘கலைஞரின் 1970–1976 காலக்கட்டத்தில் தமிழ்நாட்டிற்கான வளர்ச்சிக் குறியீடுகள் குறிப்பிடும் படியாக அதிகரித்தன. மாநிலத்தின் பொருள் உற்பத்தி





நிலை (எஸ்டிபி) விலை அடிப்படையில் 17 விழுக்காடு வளர்ச்சி பெற்றிருந்தது. தனிநபர் வருமானம் 30 விழுக்காடு உயர்ந்தது.

1971ஆம் ஆண்டு எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் விழுக்காடு 39.5ஆக இருந்தது. இது 1981ஆம் ஆண்டு 54.4ஆக உயர்ந்தது. 1971ஆம் ஆண்டு 125 ஆக இருந்த இறந்த குழந்தை மரணக் கணக்கு 1977ஆம் ஆண்டு 103ஆகக் குறைந்தது.

தொழில் துறையிலும் உள்கட்டமைப்பிலும் கவனம் குவிந்திருந்தது. இந்தக் காலக் கட்டத்தில் தொழில் துறை வளர்ச்சியில் குஜராத், மகாராஷ்டிராவுக்கு அடுத்து தமிழ்நாடு இருந்தது' என்கிறார் எஸ்.நாராயணன்.

வறுமையை ஒழித்து, கிராமப்புற துயர் துடைப்பது என்ற தடத்திலும், தமிழ்நாட்டை ஒரு தொழில் பூங்காவாக மாற்றுவது என்ற தடத்திலும் முதலமைச்சர் கலைஞரின் பயணம் தொடர்ந்தது.குறியீட்டு அளவைகளின் வரிசையில் நகர கிராம இடைவெளியை குறைப்பதில் அவர் கவனமாக இருந்தார்.



தமிழ்நாட்டை நகரமயமாக்குவதில் பல்வேறு அரசுகள் கவனம் செலுத்தவில்லை என்று அவர் கண்டுணர்ந்தார். கோவில்களைப் பாதுகாப்பதிலும் மற்ற வழிபாட்டு இடங்களைப் பேணுவதிலும் தனது நாத்திகப் பார்வை குறுக்கிடாது என்று விளக்கமளித்தார். கலைஞர் முன்னெடுத்த நிருவாக சீர்திருத்தம் பெருமளவு பயனளித்தது. மாநிலத்தின் நிருவாகத் திறமை மேம்பாடு அடைந்தது.

1971ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட சிப்காட் எனப்படும் தொழில் முன்னேற்றக் கழகம் மிகமுக்கியமான முன்னெடுப்பு ஆகும். இதுவே தமிழ்நாட்டின் தொழில் முன்னேற்றத்துக்கு பெரும் உத்வேகத்தை அளித்தது. மாநிலம் முழுவதும் தொழில் பேட்டைகள் உருவாக சிப்காட் தான் காரணம். நிலவள வங்கிகள் உருவாகவும் அதுவே துணையாக நின்றது.

1991இல் இந்தியப் பொருளாதாரம் திறப்பு கண்டபோது இந்த வங்கிகள் பெரிதும் பயன்பட்டன. நாட்டில் வேறெங்கும் இல்லாத அளவுக்கு தமிழ்நாட்டில் தொழில் தொகுதிகளை உருவாக்குவதில் அவர் தான் காரணமாக இருந்தார்.

ஓர் ஆய்வு ஏடு, உத்தரபிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகிய இரண்டு இந்திய மாநிலங்களின் பொருளாதார நகர்வுப் பாதையை ஒப்பீடு செய்துள்ளது. ‘டோனி பிளேர் இன்ஸ்டிடியூட் ஃபார் குளோபல் சேஞ்ச்’ என்ற நிறுவனத்தின் அரசு விநியோகம் ஆகியவற்றிற்கான மையம் அந்த ஆய்வேட்டை பிரசுரித்துள்ளது.

அதன் தலைப்பு, ‘தமிழ்நாட்டின் அனைத்து சமூகம் சார் வளர்ச்சி: ஆட்சியும் தலைமையின் பங்களிப்பும்’ என்பதாகும். 1960–1961 என்ற கால அளவில் வளர்ச்சி சார்ந்த பல நடவடிக்கைகளைப் பொறுத்த அளவில் இந்த இரண்டு மாநிலங்களும் பெரிதாக ஒன்றும் வேறுபட்டிருக்கவில்லை என்று எடுத்துரைக்கிறது தரவுகள் அடிப்படையிலான அந்த ஆய்வேடு.



1960இல் தமிழ்நாட்டில் கிராமப்புற வறுமை 70 சதவிகிதத்திற்கு சற்று குறைந்த நிலையில்தான் இருந்தது; அது உத்தரபிரதேசத்தின் வறுமை விகிதமான 48 சதவிகிதத்தை விட பெரிதும் கூடுதலானது என்று விவரிக்கிறது அந்த ஆய்வேடு. ஆனால் 50 ஆண்டு கால திராவிட கட்சிகளின் ஆட்சிக்குப் பிறகு நிலைமை ஒரேடியாக மாறியிருக்கிறது.

இந்த ஆய்வைப் பொறுத்தவரையில் 2005ஆம் வருடத்திற்குள் தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் உத்தரபிரதேசத்தின் தனிநபர் வருமானத்தைக் காட்டிலும் 128 சதவிகிதம் உயர்ந்திருந்தது.


அதாவது 1960இல் இருந்த இடைவெளியை விட இரு மடங்குக்கு மேல் அதிகமாக இருந்தது. 2009–20010இல் தமிழ்நாட்டின் கிராமப்புற வறுமை சதவிகிதம் உத்தரபிரதேசத்தின் சதவிகிதத்தில் ஏறக்குறைய பாதியாக சரிந்துவிட்டது.

தமிழ்நாட்டின் சதவிகிதம் 21.2 என்ற அளவில் இருந்தபோது உத்தரபிரதேசத்தின் சதவிகிதம் 39.4ஆக இருந்தது. தமிழ்நாட்டின் நகர்புற வறுமை சதவிகிதம் உத்தரபிரதேசத்தின் சதவிகிதத்தை விட பாதிக்கு குறைவு. (தமிழ்நாடு 12.8 சதவிகிதம்; உத்தரபிரதேசம் 31.7 சதவிகிதமும் பெற்றிருந்தன.)

இந்த ஒவ்வொரு வளர்ச்சியையும் தொடர்புபடுத்தி பார்க்கிறபோது கலைஞர் கருணாநிதிக்குத் தான் இந்தப் பெருமை போய்ச் சேரும்.

அவர் தமிழர் நலன்களின் மீதான அக்கறையின் அடிப்படையிலும், தமிழ்நாட்டின் உரிமைகளின் அடிப்படையிலும் தனது அரசியல் தெரிவுகளை முடிவு செய்த மாபெரும் தலைவர்.

★★★


கலைஞர் நூற்றாண்டு நிறைவு மலர்

கலைஞர்

100

1924 - 2024

# கலைஞர் நூற்றாண்டு விழாக் குழுக்கள்

# இதழாளர் கலைஞர்



## 1. இதழாளர் – கலைஞர்

### குழுவின் விவரங்கள்

| | | |
|---|---|---|
| தலைவர் | : | **திரு மு. பெ. சாமிநாதன்**<br>மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் |
| இணைத் தலைவர்கள் | : | **திரு செஞ்சி கே.எஸ்.மஸ்தான்**<br>மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர்<br><br>**திரு த. மனோ தங்கராஜ்**<br>மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் |
| உறுப்பினர்-செயலர் | : | **திரு த. மோகன், இ.ஆ.ப.,**<br>இயக்குநர்,<br>செய்தி மற்றும் மக்கள் தொடர்பு |
| உறுப்பினர்கள் | : | திரு இந்து ராம்<br>திரு நக்கீரன் கோபால்<br>திரு கே. வைத்தியநாதன்<br>திரு விஜய் சங்கர்<br>திரு பாபு ஜெயக்குமார்<br>திரு அருண்ராம்<br>திரு கோவி. லெனின்<br>திரு மு. குணசேகரன்<br>திரு செந்தில்வேலன் (வேல் வீச்சு) |




இதழாளர் கலைஞர்
இதழாளர் கலைஞர்
இதழாளர் கலைஞர்



# பத்திரிகையை வாழ்க்கையாக்கிக் கொண்டவர்!


**கோ**யம்புத்தூர் மாவட்டம், வ.உ.சி மைதானத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முதலமைச்சர் அவர்களால் அமைக்கப்பட்ட 12 குழுக்களில் ஒன்றான இதழாளர் கலைஞர் குழுவின் சார்பில் மாபெரும் நூற்றாண்டு விழாவாக கொண்டாடப்பட்டது.

இதழாளர் – கலைஞர் குழுவின் சார்பில் இதழாளர் – கலைஞர் சிறப்பு புகைப்படக் கண்காட்சி அரங்கத்தினை மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. சு.முத்துசாமி அவர்கள் தலைமையில், இதழாளர் – கலைஞர் நூற்றாண்டு விழாக் குழுத் தலைவர்/ மாண்புமிகு தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள், இதழாளர் – கலைஞர் நூற்றாண்டு









விழாக் குழு இணைத் தலைவர் / மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.செஞ்சி. கே.எஸ்.மஸ்தான் அவர்கள், இதழாளர் – கலைஞர் நூற்றாண்டு விழாக் குழு இணைத் தலைவர் / மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.த.மனோ தங்கராஜ் அவர்கள், ஆகியோர் முன்னிலையில் பாரதிய வித்யா பவன் மற்றும் குமரகுரு கல்வி நிறுவனங்கள் தலைவர் டாக்டர் பி.கே.கிருஷ்ணராஜ் வாணவராயர் அவர்கள் திறந்து வைத்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை தமிழ்நாடு அரசின் சார்பில் சிறப்பாக கொண்டாட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 12 சிறப்புக் குழுக்கள் அமைத்து, ஒவ்வொரு குழுவின் சார்பில் ஒவ்வொரு பகுதியிலும் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தவேண்டும் என்றும் உத்தரவிட்டிருந்தார்கள்.

அந்த 12 குழுக்களில் இதழாளர் கலைஞர் குழுவின் சார்பில், இந்நிகழ்ச்சி நடத்தப்பட்டது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், பத்திரிகையாளராக தன்னுடைய வாழ்க்கையை துவங்கி, பள்ளிப் பருவத்தில் மாணவ நேசன்









என்ற கையெழுத்துப் பிரதியை துவக்கி, முரசொலி வரை இதழாளராகவே வாழ்ந்து திகழ்ந்தார்.

குடியரசு பத்திரிகையின் துணை ஆசிரியராகவும் பணியாற்றினார். கால்பதித்த அத்தனை துறைகளிலும் பல்வேறு சாதனைகளை படைத்தவராக திகழ்பவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

இதழாளராக வாழ்க்கையை தொடங்கிய அவருக்கு, இதழாளர் குழு சார்பில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் அவருடைய வாழ்க்கை வரலாற்றை விளக்கும் வகையிலான புகைப்படக்கண்காட்சியாக நடத்தப்பட்டது.

மேலும், இதனைத் தொடர்ந்து, ஹிந்துஸ்தான் கலையரங்கத்தில் கருத்தரங்கம் ஒன்றும் நடைபெற்றது. அதன்முன்னோட்டமாக இந்நிகழ்ச்சி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலுடன் தொடங்கப்பட்டுள்ளது.

ஜனநாயகத்தின் நான்காவது தூண்களில் ஒன்றான பத்திரிகையை காப்பாற்றுவதில் எவ்வாறு செயல்படவேண்டும் என்பதை


















மற்றவர்களுக்கு வழிகாட்டக்கூடிய வகையில் செயல்பட்டவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆவார்.

இப்புகைப்படக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்ட, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புகைப்படங்கள் எல்லாம் உங்களுக்கு வெறும் படங்களாக தெரியும். இந்த புகைப்படங்களைப் பார்த்த போது மிகவும் வியப்பாக இருந்தது.


அவர் ஒரு சாதாரண மனிதர் அல்ல. அசாதாரண மனிதர். கால் பதித்த அத்தனை துறைகளிலும் முத்திரை பதித்தவர். கலைஞர் அவர்களை அரசியல் வட்டத்திற்குள் மட்டும் வைத்து பார்க்ககூடாது.

அவரது பொதுவாழ்க்கையை நாம் அறிந்துகொண்டால், தமிழ்நாட்டில் 100 ஆண்டுகால பொது வாழ்க்கையை நாம் தெரிந்துகொண்டதாக கொள்ளலாம். ஏனெனில் அவர்கள் அரசியல் மட்டுமல்லாமல், பல துறைகளிலும் தடம்பதித்தவர். ஒவ்வொரு துறையின் பரிணாம வளர்ச்சியையும் தெரிந்துகொள்ளவேண்டுமானால் அவருடைய வரலாற்றைப் படித்தால் போதும்.

அகில இந்திய அரசியலிலும் ஈடுபாடு கொண்டவர். இன்றைய தலைமுறையினரும் இப்புகைப்படக்கண்காட்சியினைப் பார்த்து பயன்பெறவேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உயர்ந்த நோக்கத்தை இதழாளர் கலைஞர் குழு நிறைவேற்றி சாத்தியமாக்கி இருக்கிறதென்றால் அது மிகையல்ல.

★★★

# எழுத்தாளர் – கலைஞர்



## 2. எழுத்தாளர் – கலைஞர்

**குழுவின் விவரங்கள்**

| | | |
|---|---|---|
| தலைவர் | : | **திரு கே.ஆர். பெரியகருப்பன்**<br>மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் |
| இணைத் தலைவர்கள் | : | **திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி**<br>மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்<br><br>**திருமதி என். கயல்விழி செல்வராஜ்**<br>மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் |
| உறுப்பினர்-செயலர் | : | **திருமதி வே. அமுதவள்ளி, இ.ஆ.ப.,**<br>இயக்குநர் மற்றும் குழும இயக்குநர்,<br>ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் |
| உறுப்பினர்கள் | : | திரு ஆர். பூரணலிங்கம் . இ.ஆ.ப. (ஓய்வு)<br>திரு ஆர். பாலகிருஷ்ணன் , இ.ஆ.ப. (ஓய்வு)<br>திரு ஏ.எஸ். பன்னீர்செல்வன்<br>திரு கலாப்பிரியா<br>திரு எஸ். ராமகிருஷ்ணன்<br>திரு திருமாவேலன்<br>திரு இமையம்<br>திரு அறிவுமதி<br>திரு வி.எம்.எஸ். சுபகுணராஜன்<br>கவிஞர் சல்மா<br>திரு தமிழ்மகன்<br>திரு பொதிய வெற்பன் |




எழுத்தாளர்
கலைஞர்





# முத்தமிழறிஞருக்காக உருவான முத்தமிழ்த்தேர்!

முத்தமிழறிஞர், உலகத்தமிழர்களின் ஒப்பற்றத் தலைவர் மாண்புமிகு முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர். கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு எழுத்தாளர் கலைஞர் குழுவின் சார்பில் அமைக்கப்பட்ட முத்தமிழ்த்தேர் அலங்கார ஊர்தியினை (04.11.2023) அன்று கன்னியாகுமரி, காந்திமண்டபம் அருகில் உள்ள முக்கோணப்பூங்காவில் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள், மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில்மகேஸ் பொய்யாமொழி அவர்கள், மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு. த.மனோ தங்கராஜ் அவர்கள், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் ஆகியோர் முரசு கொட்டி துவக்கி வைத்தார்கள்.

இந்த வாகனமானது ''எழுத்தே எனது மூச்சு, எழுதுவதே எனது தினப்பழக்கம்'' என்று முழங்கிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பயன்படுத்திய பேனா வடிவில் அமைக்கப்பட்டிருந்தது. இதன் வெளிப்புறத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பன்முகத்தன்மையினை விளக்கும் புகைப்படங்கள் இடம் பெற்றிருந்தன. மேலும், கலைஞர் அவர்களின் சிறப்புகளை விளக்கும் குறும்படமும் தொடர்ந்து திரையிடும் வகையில் ஒளித்திரையும் (LED WALL) அமைக்கப்பட்டிருந்தது.









பேனா வடிவிலான இந்த வாகனத்தின் பின்புறம் இயந்திரத்தினால் திறந்து மூடும் வகையில் உருவாக்கப்பட்டிருந்தது. இந்த அலங்கார ஊர்தியினை பொதுமக்கள், பள்ளி மாணவ, மாணவியர்கள் உள்ளிட்ட அனைவரும் சென்று பார்வையிடும் வகையிலும் தமிழ்நாடு முழுவதும் மக்கள் பார்க்கும் வகையிலும் பயணத் திட்டம் வகுக்கப்பட்டிருந்தது.

மேலும், வாகனத்தின் உள்ளே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கோபாலபுரம் இல்ல உள் அமைப்பு தத்ரூபமாகவும் உள்ளே அஞ்சுகம் அம்மாள் அவர்களின் உருவச்சிலையும் அதன் அருகில் முத்தமிழறிஞர் அவர்கள் இருக்கையில் அமர்ந்திருப்பது போன்ற உருவச்சிலையும், அவர் பயன்படுத்திய நூலகத்தின் மாதிரி வடிவமைப்பும் உருவாக்கப்பட்டிருந்தது. இதன் அருகில் நின்று பொதுமக்கள் Selfi எடுத்துக்கொள்ளும் வசதியும் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

மேலும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் எழுத்துக்களுக்கு வடிவம் கொடுக்கும் அவரது படைப்புகளும், அவரது பன்முகத் தோற்றத்தினை விளக்கும் ஒலி – ஒளி அமைப்பும் உருவாக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. கலைஞர் அவர்களின் எழுத்துக்களால் உயிர்பெற்ற கவிதை, கட்டுரை, புதினங்கள், காப்பியங்கள் போன்றவற்றை கைப்பேசி









வாயிலாக இன்றைய இளம் தலைமுறையினர் அறிந்து கொள்ளும் வகையில் QR Code Scan செய்து அறிந்து கொள்ளும் வசதியும் இருந்தது.

இந்த வாகனத்தின் பாதுகாப்பிற்காக நான்கு புறமும், உள்பகுதியிலும் சிசிடிவி கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டுள்ளது. மேலும், ஒட்டுநர் அறையில் வாகனத்தினை இயக்கும் போது நான்கு பக்கங்களும் தெரியும் வகையில் திரை அமைக்கப்பட்டுள்ளது.

இந்த அலங்கார ஊர்தியானது கன்னியாகுமரியில் முக்கோணப்பூங்கா பகுதியில் பள்ளி கல்லூரி மாணவ மாணவியர்கள், சுற்றுலாப்பயணிகள், பொதுமக்கள் உள்ளிட்டோர் பார்வையிடும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டு, தொடர்ந்து திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர் ஆகிய மாவட்டங்கள் வழியாக 30 மாவட்டங்களுக்கு பயணம் மேற்கொண்டு இறுதியாக சென்னை வந்தடைந்தது. சென்னையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டு மகிழ்ந்து எழுத்தாளர் கலைஞர் குழுவினர் அனைவருக்கும் பாராட்டுக்களையும், வாழ்த்துகளையும் தெரிவித்தார்.

★★★

# கலைஞர் – கலைஞர்



## 3. கலைஞர் – கலைஞர்

### குழுவின் விவரங்கள்

| | | |
|---|---|---|
| தலைவர் | : | **திரு உதயநிதி ஸ்டாலின்**<br>மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் |
| இணைத் தலைவர்கள் | : | **திரு. ஆர். காந்தி**<br>மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்<br><br>**திரு. மா. சுப்பிரமணியன்**<br>மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் |
| உறுப்பினர்-செயலர் | : | **முனைவர் எம்.எஸ். சண்முகம், இ.ஆ.ப.,**<br>முதலமைச்சரின் செயலாளர்-3 |
| உறுப்பினர்கள் | : | திரு பா. விஜய்<br>திரு சத்யராஜ்<br>திரு நாசர்<br>திரு கரு. பழனியப்பன்<br>திரு ரா முரளி<br>திரு வாகை சந்திரசேகர்<br>திருமதி விஜயா தாயன்பன்<br>திரு ராஜூ முருகன்<br>திருமதி ரோகிணி<br>திரு யுகபாரதி<br>திரு பொன்வண்ணன்<br>திரு அருண் மோ |






# பேனாவால் போரிட்டவர் கலைஞர்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, கலைஞர் – கலைஞர் குழு சார்பில் `இசையாய் கலைஞர்' என்ற நிகழ்ச்சி சென்னை கலைவாணர் அரங்கில் நேற்று மாலை நடைபெற்றது. இதில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு பேசினார். அமைச்சர் உரை:

“கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, ‘கலைஞர் – கலைஞர்’ விழாக்குழுவின் சார்பில், நடைபெறுகின்ற ‘இசையாய் கலைஞர்’ நிகழ்ச்சியில் வரவேற்புரை வழங்குவதில் ‘கலைஞர் – கலைஞர்’ குழுவின் தலைவர் என்கிற வகையில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு கழக அரசு ஒருபுறமும் – தி.மு.கழகம் இன்னொருபுறமும் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றன.

கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு ஓராண்டு முழுவதும் மக்களுக்கு பயனுள்ள வகையில் நிகழ்ச்சிகளை நடத்திட வேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கட்டளையின்படி கடந்த ஜூன் மாதம் தொடங்கி ஏராளமான மக்கள் நலன் சார்ந்த நிகழ்ச்சிகளை நடத்தி இருக்கின்றோம்.

முக்கியமாக, அரசு சார்பில், 250 கோடி ரூபாய் செலவில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பெயரில் மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம் திறக்கப்பட்டுள்ளது. அதேபோல, 250 கோடி ரூபாய் மதிப்பில் சென்னை கிண்டியில் கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை திறக்கப்பட்டுள்ளது.

இவற்றுக்கெல்லாம் முத்தாய்ப்பாக கலைஞர் நூற்றாண்டில் ‘கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்’ எனும் மகத்தான திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அண்மையில்

திறக்கப்பட்ட கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்துக்கும் ‘கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையம்’ என்றே பெயரிடப்பட்டுள்ளது.

இதுமட்டுமல்ல, இதழாளர் கலைஞர், எழுத்தாளர் கலைஞர், கலைஞர் கலைஞர், சமூகநீதிக் காவலர் கலைஞர், பண்பாட்டுப் பாசறை கலைஞர், ஏழைப்பங்காளர் கலைஞர், சட்டமன்ற நாயகர் கலைஞர், பகுத்தறிவு சீர்திருத்தச் செம்மல் கலைஞர், நவீன தமிழ்நாட்டின் சிற்பி கலைஞர், நிறுவனங்களின் நாயகர் கலைஞர், தொலைநோக்குச் சிந்தனையாளர் கலைஞர், தமிழ்த்தாயின் தவப்புதல்வன் கலைஞர் என 10க்கும் மேற்பட்ட குழுக்கள் உருவாக்கப்பட்டு அந்த குழுக்களின் சார்பில், ஏராளமான நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

அதேபோல, தி.மு.கழகத்தின் சார்பில், கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு ஒவ்வொரு அணிக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சிகளை நடத்த நம் முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள். எங்களுடைய இளைஞர் அணிக்கு, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும், சட்டமன்ற தொகுதிக்கு ஒன்று எனும் விதத்தில் கலைஞர் பெயரில் கலைஞர் நூலகம் அமைத்தல் – கலைஞர் நூற்றாண்டு மாரத்தான் போட்டிகள் – கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டிகளை நடத்துமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கட்டளையிட்டிருந்தார்கள்.

நாங்கள் ஏற்கெனவே இந்த மூன்று மாதங்களில், இளைஞர் அணி சார்பில், 15 கலைஞர் நூலகங்களை தமிழ்நாட்டில் உள்ள 15 சட்டமன்றத் தொகுதிகளில் திறந்திருக்கிறோம். அதற்கு இளைஞர் அணி தம்பிமார்களுக்கு இந்த நேரத்தில் என் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்திய ஒன்றியத்திலேயே வேறு யாருக்கும் இல்லாத வகையில், கலைஞர் அவர்களுக்கு ஏராளமான முகங்கள் உண்டு. பத்திரிகையாளர் – எழுத்தாளர் – அரசியல் மேதை – திரைக்கதை வசனகர்த்தா என ஏராளமான முகங்கள் உண்டு.

அதில் மிகமுக்கியமான ஒரு முகம்தான், அவருக்கு இசைமீது உள்ள ஆர்வம். இசை மீதும் – இசைக்கலைஞர்கள் மீதும் கலைஞர் அவர்களுக்கு தனிப்பிரியம் உண்டு. எனவேதான் ‘இசையாய் கலைஞர்’ என்ற இந்த நிகழ்ச்சியை நடத்துவது என்று எங்களின் கலைஞர் – கலைஞர் குழு சார்பில் முடிவெடுத்து சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிறோம்.

மனித உணர்வுகளில் இயல்பாய் கலந்திருப்பது கலை. ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் அவனையும் அறியாமல் ஒரு கலையுணர்வு இருக்கும் என்று சொல்வார்கள்.

அதே மாதிரிதான், தமிழ்நாட்டில் பிறந்த ஒவ்வொரு தமிழனின் நினைவிலும் நமது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கண்டிப்பாக நிறைந்திருப்பார்கள். இந்த நிகழ்ச்சிக்கு கொடுக்கப்பட்டிருக்கிற தலைப்பு என்னை மிகவும் கவர்ந்திருக்கிறது.’ ‘இசையாய் கலைஞர்’ என்பது மிகமிக பொருத்தமான தலைப்பு.

அதேபோல, இயக்குநர் சகோதரர் கரு.பழனியப்பன் அவர்கள் இன்றைக்கு சிறப்புரை வழங்கவுள்ளார்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தனது 20ஆவது வயதில் முதல் நாடகத்தை எழுதினார்கள். அந்த நாடகத்தின் பெயர் `பழனியப்பன்’ அன்றைக்கு கலைஞர் அவர்களின் பழனியப்பனுக்கு என்ன வரவேற்பு இருந்ததோ அதே வரவேற்பு இங்கிருக்கும் நம் இயக்குநர் பழனியப்பனுக்கும் கிடைத்து வருகிறது.






சகோதரர் அவர்கள் பலமேடைகளில் பலமுறை கலந்துகொண்டு உரை நிகழ்த்தி வருகிறார்கள். அவர் இன்னும் கறுப்பு சிவப்பு வேட்டி மட்டும்தான் கட்டவில்லை.

எனக்கு இதற்கு முன்பெல்லாம் புத்தகம் படிக்கும் பழக்கமில்லை. இதைச் சொல்வதில் எனக்கு எந்தவித தயக்கமும் இல்லை. கோவிட் காலத்தில் எல்லோரும் வீட்டில் அடங்கி இருந்தோம். அப்போதுதான் புத்தகங்கள் அதிகம் வாசித்தேன். இயக்குநர் கருபழனியப்பன் நிறைய புத்தகங்கள் தந்து வாசிக்கச் சொல்வார்.

கலைஞர் அவர்களை மேடைகளில் நிருபராக பார்த்த பழனியப்பன் அவர்கள், பலமுறை அதை மேடையில் சொல்லி இருக்கிறார். மதுரையில் ஒரு மாநாட்டில் ஒரு பத்திரிகையாளராக செய்தியாளாராக நெருங்கிப் பழகியதைச் சொல்லி இருக்கிறார். இன்றைக்கு கலைஞரின் சாதனைகளை பட்டிதொட்டியெங்கும் கொண்டு சேர்த்து வருகிறார்.

முக்கியமாக கழக இளைஞர் அணி முன்னெடுக்கும் பணிகளில் தொடர்ந்து கைகோர்த்து செயல்பட்டு வருகிறார். ‘பொய்ப்பெட்டி’ நிகழ்ச்சியில் பங்கேற்று உரையாற்றினார். சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதியில் ‘கலைஞர் நடமாடும் நூலக’த்தை திறந்து வைத்தபோது, நம்முடன் இணைந்து அந்த நிகழ்வில் பங்கேற்றார். சகோதரர் கரு.பழனியப்பன் அவர்களை இந்த நிகழ்வுக்கு வருக வருகவென வரவேற்கிறேன்.

அதேபோல கவிஞர் யுகபாரதி அவர்களும் இங்கு சிறப்புரையாற்ற உள்ளார்கள். கலைஞர் அவர்களின் 90ஆவது பிறந்தநாளின்போது, கவிப்பேரரசு வைரமுத்து அவர்களின் ஏற்பாட்டில் 90 கவிஞர்கள் கலைஞர் அவர்களை சந்தித்து வாழ்த்தினார்கள். அப்போது, யுகபாரதி அவர்கள் அவர் எழுதிய `நேற்றைய காற்று’ புத்தகத்தை கலைஞர் அவர்களுக்கு பரிசாக கொடுத்தார்கள்.

அந்த புத்தகத்தை வாங்கிக்கொண்ட கலைஞர் அவர்கள், இது என்ன புத்தகம் என்று கேட்கிறார். பாடலாசிரியர்களை பற்றிய புத்தகம் என்று யுகபாரதி சொல்கிறார்.

உடனே, ‘இதில் நானிருக்கிறேனா’ என்று கலைஞர் அவர்கள் கேட்கிறார். ‘நீங்க இல்லாமலா?’ என்று பதில் சொல்கிறார் யுகபாரதி. இதை யுகபாரதி அவர்கள் பல இடங்களில் நினைவுபடுத்தி இருக்கிறார். ‘அவர் இல்லாத புத்தகத்தை அவரிடம் சென்று கொடுக்கமுடியுமா?’ என்றும் கேட்கிறார்.

அரசியல் வித்தகர் கலைஞர் – எழுத்தாளர் கலைஞர் – பத்திரிகையாளர் கலைஞர் – வசனகர்த்தா கலைஞர் – முதல்வர் கலைஞர் என கலைஞரின் பலமுகங்களை பற்றி பல புத்தகங்கள் வந்திருக்கின்றன.

ஆனால் ஒரு, பாடலாசிரியர் கலைஞரைப் பற்றி ‘நேற்றைய காற்று’ புத்தகத்தில் இடம்பெறச் செய்தவர் சகோதரர் யுகபாரதி. எனக்கும் அவர் நிறைய பாடல்கள் எழுதி இருக்கிறார். நான் பாடவில்லை அவரின் பாடலுக்கு வாயசைத்து இருக்கிறேன். நிறைய ஹிட் பாடல்களை எனக்குக் கொடுத்திருக்கிறார்.அவருக்கும் இந்த நேரத்தில் நன்றி கூறுகிறேன்.

இசையாய் கலைஞர்! – இசைக்கு என்னென்ன குணங்கள் இருக்கிறதோ, அந்த குணங்கள் அனைத்தையும் கலைஞர் அவர்களிடமும் நம்மால் பார்க்க முடியும். மனிதனின் உணர்வுகளோடு உரையாடும் வல்லமை இசைக்கு உண்டு. அந்த ஆற்றல் கலைஞர் அவர்களின் இலக்கியத்துக்கு உண்டு.

ஒரு மனிதனை உணர்ச்சிப்பெருக்கால் வெகுண்டெழச் செய்யும் வல்லமை இசைக்கு உண்டு. அந்த ஆற்றல் கலைஞர் அவர்களின் ஒவ்வொரு எழுத்துக்கும் உண்டு. ஒடுக்கப்பட்ட மக்கள், உழைக்கும் பாட்டாளி மக்கள் தாங்கள் படும் துயரை இசையின் மூலமாகவே வெளிப்படுத்தினார்கள். அவர்களின் துயரைப் போக்க தனது பேனாவால் போரிட்டவர் கலைஞர் அவர்கள்.

காயம்பட்ட மனதை இசை ஆற்றும். அதுபோல், சமுதாய இழிவால் காயம்பட்டிருந்த மக்களுக்கு தனது எழுத்தாலும் – அரசியலாலும் மருந்துப்போட்டவர் கலைஞர் அவர்கள். மகிழ்ச்சியில் உங்களை இசை துள்ளவைக்கும். கலைஞர் அவர்களின் முகம் பார்த்தாலே நம் உடன்பிறப்புகள் துள்ளி குதிப்பார்கள்.

ஒவ்வொரு காலகட்டத்திற்கு ஏற்ப இசை பரிணாம வளர்ச்சியும், மாற்றமும் அடையும். அதேபோல், கையெழுத்துப் பிரதியாக முரசொலியைத் தொடங்கி, ட்விட்டர் காலம் வரை மாற்றத்தை உள்வாங்கி வளர்ந்தவர் கலைஞர் அவர்கள்.

இசைக்கு நல்ல குரல் வளம் தேவை. ஏறத்தாழ 80 ஆண்டுகள் தமிழர்களை ஆட்கொண்டது ‘உடன்பிறப்பே’ என்றழைத்த கலைஞர் அவர்களின் வெண்கலக்குரல்தான். எனவே, இசையின் குணங்கள் அனைத்தையும் தனக்குள்ளே பெற்றவர் தான் நமது கலைஞர் அவர்கள். எனவேதான், இசையாய் கலைஞர் என்னும் தலைப்பு எனக்கு ரொம்பபிடித்திருக்கிறது. இசை எங்கும் நிறைந்திருப்பதைப் போல, உலகம் முழுவதும் கலைஞர் அவர்கள் எங்கும் நிறைந்திருக்கிறார்.

இந்த சிறப்பான நிகழ்ச்சிக்கு வரவேற்புரை வழங்கும் வாய்ப்பை எனக்கு அளித்த ‘கலைஞர் – கலைஞர்’ குழுவுக்கு எனது நன்றியையும் – வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொண்டு இதுபோல பல நிகழ்ச்சிகளையும் நடத்தத் திட்டமிட்டுள்ளோம் என்று கூறி விடைபெறுகிறேன்.

★★★



# இசையாய் கலைஞர்




**இ**ந்நிகழ்ச்சியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கதை, திரைக்கதை, வசனம், பாடல்கள் எழுதிய மந்திரி குமாரி, பராசக்தி, நாம், அம்மையப்பன், ராஜா ராணி, ரங்கோன் ராதா, குறவஞ்சி, காஞ்சித் தலைவன், பூம்புகார், பூமாலை, மறக்க முடியுமா, நெஞ்சுக்கு நீதி, தூக்கு மேடை, வீரன் வேலுத்தம்பி, ஒரே ரத்தம், மக்கள் ஆணையிட்டால், காவலுக்குக் கெட்டிக்காரன், மதுரை மீனாட்சி, கண்ணம்மா, பாசக் கிளிகள், பெண் சிங்கம் போன்ற திரைப்படங்களில் இடம்பெற்ற பாடல்கள் மற்றும் பல்வேறு திரைப்படங்களின் பாடல்கள் காணொலியோடு கூடிய இசையாய் கலைஞர் எனும் மெல்லிசை நிகழ்ச்சியாக நடைபெற்றது. இந்த மெல்லிசை நிகழ்ச்சியை பல்லவி குழுவினர் நடத்தினர். பாடல்களின் பின்னணியை விளக்கி நிகழ்ச்சியை கவிஞர் நெல்லை ஜெயந்தா அவர்கள் தொகுத்து வழங்கினார்.





# சமூக நீதிக் காவலர் – கலைஞர்



## 4. சமூக நீதிக் காவலர் – கலைஞர்

### குழுவின் விவரங்கள்

| | | |
|---|---|---|
| தலைவர் | : | **முனைவர் க. பொன்முடி**<br>மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் |
| இணைத் தலைவர்கள் | : | **முனைவர் பழனிவேல் தியாக ராஜன்**<br>மாண்புமிகு தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்<br><br>**டாக்டர் மா.மதிவேந்தன்**<br>மாண்புமிகு வனத்துறை அமைச்சர் |
| உறுப்பினர்-செயலர் | : | **முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப.,**<br>அரசு முதன்மைச் செயலாளர்,<br>உயர்கல்வித் துறை |
| உறுப்பினர்கள் | : | திரு சுப. வீரபாண்டியன்<br>திருமதி அருள்மொழி<br>பேராசிரியர் இராமசாமி<br>திரு கா. திருநாவுக்கரசு<br>முனைவர் இரா. சுப்பிரமணி<br>திரு ஏ.கே.எஸ். விஜயன்<br>திரு தீபக் நாதன்<br>திருமதி ஓவியா<br>திரு அதியமான்<br>திரு கோ. கருணாநிதி<br>திரு மணிகோ. பன்னீர்செல்வம்<br>மருத்துவர் ஜீ.ஆர். ரவீந்திரநாத் |


BOSCH
BOSCH










11.07.2023 தலைமைச் செயலகத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை சிறப்பாக கொண்டாடும் வகையில் அமைக்கப்பட்ட குழுக்களில் “சமூக நீதிக் காவலர் – கலைஞர்” எனும் குழுவின் கூட்டம், இக்குழுவின் தலைவரும் மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சருமான முனைவர் க.பொன்முடி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இணைத் தலைவர்கள் மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், உயர்கல்வித்துறை அரசு முதன்மைச் செயலாளரும், உறுப்பினர் செயலருமான திரு ஆ.கார்த்திக், இ.ஆ.ப,. உறுப்பினர்கள் தமிழ்நாடு அரசின் புதுதில்லி சிறப்பு பிரதிநிதி திரு. ஏ.கே. எஸ்.விஜயன், தொழிநுட்பக் கல்வி இயக்குநர் மருத்துவர் டி.ஜி.வினய், இ.ஆ.ப., முனைவர் திரு. இராமசாமி, திராவிட இயக்க எழுத்தாளர் திரு. க.திருநாவுக்கரசு, முனைவர் இரா.சுப்பிரமணி, திரு. தீபக் நாதன், திருமதி ஓவியா, முனைவர் பழ.அதியமான், திரு. கோ.கருணாநிதி, திரு. மணி கோ.பன்னீர்செல்வம், மருத்துவர் ஜி.ஆர்.ரவீந்திரநாத் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# பண்பாட்டுப் பாசறை – கலைஞர்



## 5. பண்பாட்டுப் பாசறை – கலைஞர்

### குழுவின் விவரங்கள்

| | | |
|---|---|---|
| தலைவர் | : | **திரு எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்**<br>மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் |
| இணைத் தலைவர்கள் | : | **திரு கா. ராமச்சந்திரன்**<br>மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர்<br>**திரு பி.கே. சேகர்பாபு**<br>மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் |
| உறுப்பினர்-செயலர் | : | **மருத்துவர் க. மணிவாசன், இ.ஆ.ப.,**<br>அரசு முதன்மைச் செயலாளர்,<br>சுற்றுலா, பண்பாடு மற்றும்<br>சமய அறநிலையத் துறை |
| உறுப்பினர்கள் | : | தவத்திரு பொன்னம்பல அடிகளார்<br>திரு ராமசுப்பிரமணியன்<br>திருமதி நர்த்தகி நடராஜ்<br>மருத்துவர் சீர்காழி கோ. சிவசிதம்பரம்<br>மதுரா டிராவல்ஸ் திரு பாலா<br>திருமதி சாரதா நம்பி ஆரூரன்<br>திருமதி கல்யாணி<br>குடவாயில் திரு பாலசுப்ரமணியம்<br>திரு அஜயன் பாலா<br>திரு ஸ்ரீராம் சர்மா<br>திரு அமர்நாத் ராமகிருஷ்ணா<br>திரு நீலகண்டன் |




# காலத்தை கி.மு. கி.பி. என்பது போல் அரசியலை க.மு. க.பி. (கலைஞருக்கு முன் – கலைஞருக்கு பின்) என அழைக்க வேண்டும்

கடலூர் திருப்பாதிரிப்புலியூர், புனித வளனார் மேல்நிலைப் பள்ளி அரங்கத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை சிறப்பிக்கும் வகையில் ‘கலைஞர் பண்பாட்டுப் பாசறை’ விழா நடைபெற்றது. மாண்புமிகு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் திரு. எம்.ஆ.ர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. கா.ராமச்சந்திரன் ஆகியோர் கலைஞரின் வாழ்க்கை வரலாற்றை நினைவு கூறும் வகையில் கலைஞர் 100 நிழற்பட கண்காட்சியை திறந்துவைத்து பார்வையிட்டனர்.



மேலும், கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு மாவட்ட அளவிலான பள்ளி, கல்லூரி மாணவ – மாணவிகளுக்கு நடத்தப்பட்ட பேச்சுப்போட்டி, ஓவிய போட்டி, வினாடிவினா போட்டி, கட்டுரை போட்டி போன்ற பல்வேறு போட்டிகளில் முதல் மூன்று இடங்களில் வெற்றி பெற்றவர்களுக்கும், கால்பந்து, கபடி, கைபந்து போன்ற போட்டிகளில் ஆண்கள் பெண்கள் என தனித்தனி பிரிவுகளில் வெற்றி பெற்ற அணியை பாராட்டி மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் பரிசு மற்றும் சான்றிதழ்களை வழங்கினர். மேலும், கலை பண்பாட்டு துறையின் சார்பில் 2022–2023 மற்றும் 2023–2024ஆம் ஆண்டுகளுக்கு மாவட்ட கலைமன்ற விருதுகளான இளமணி, கலை வளர்மணி, கலைச் சுடர்மணி, கலை நன்மணி, கலை முதுமணி போன்ற பிரிவின் கீழ் 30 நபர்களுக்கு விருதுகளும் ரூ.3,30,000 இலட்சம் மதிப்பீட்டில் பொற்கிழிகளும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களால் வழங்கப்பட்டது. தொடர்ந்து, மகளிர் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட சிறுதானிய உணவுத் திருவிழாவில் நடத்தப்பட்ட போட்டியில் வெற்றிபெற்ற 6 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும் மற்றும் கோலப் போட்டியில் வெற்றிபெற்ற 14 மகளிர் சுய உதவிக்குழுவினருக்கு பரிசுகள் மற்றும் ஆறுதல் பரிசுகளும் வழங்கப்பட்டது.


★★★

கலைமாமணி திண்டுக்கல் ஐ.லியோனி அவர்களை நடுவராக கொண்டு, ‘தமிழர் பண்பாடும், மொழியுணர்வும் விஞ்சி நிற்பது முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் கலை இலக்கியத்திலா? அரசு நலத்திட்டங்களிலா?” என்ற தலைப்பில் சிறப்பு பட்டிமன்றம் நிகழ்ச்சி நடைபெற்றது.

★★★

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற கலைஞர் பண்பாட்டுப் பாசறை விழாவில் ‘பண்பாட்டு தலைவர் நூற்றாண்டில் கலைஞர் என்ற தலைப்பில் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பயணங்களில் பல்வேறு பரிமாணங்களை தொகுத்த கலைஞர் பண்பாட்டுப் பாசறை விழா சிறப்பு மலரினை மாண்புமிகு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்;துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு அவர்கள், மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. சி.வெ.கணேசன்; ஆகியோர் வெளியிட்டனர்.





அதனைத் தொடர்ந்து, ‘எத்திக்கும் கலைஞர் என்ற தலைப்பில் கலைமாமணி ஜாகிர்உசேன் குழுவினரின் நாட்டிய நாடக நிகழ்ச்சியையும், ‘தமிழ் கலை பண்பாட்டுப் பயணம்’’ என்ற தலைப்பில் இசையமைப்பாளர் பரத்வாஜ் குழுவினரின் சிறப்பான கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றது.

கலைஞர் பண்பாட்டு பாசறை விழாவில் மாண்புமிகு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார்.

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பொதுமக்கள் பயனடையும் வகையில் சிறப்பு பட்டா வழங்கும் முகாம், சிறப்பு தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம், பல்நோக்கு மருத்துவ முகாம்கள், கல்வி கடன் முகாம் போன்ற பல்வேறு சிறப்பு நலத்திட்ட உதவிகள் அரசின் சார்பில் மாநிலம் முழுவதும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. அந்த வகையில் கடலூர் மாவட்டத்தில் இன்று முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கலைஞர் பண்பாட்டுப் பாசறை விழா நடைபெறுகிறது.

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக பதவி வகித்த காலங்களில் பள்ளி மாணவர்களுக்கு இலவச பேருந்து பயணம், பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு திட்டம், இலவச கண்சிகிச்சை முகாம், மாற்றுதிறனாளிகளின் நல்வாழ்வு திட்டம், விதவைகளின் மறுவாழ்வு திட்டம், ஆதரவற்ற சிறுவர் சிறுமிகளுக்கான கருணை இல்லங்கள், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், பெண்களுக்கு சொத்தில் சமஉரிமை, உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு இடஒதுக்கீடு, நிலமில்லாத விவசாயிகளுக்கு









நிலம் வழங்கும் திட்டம், இலவச வண்ண தொலைக்காட்சி பெட்டிகள், இலவச எரிவாயு அடுப்பு, மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு 20 சதவிகித இடஒதுக்கீடு வழங்கியவர் சமத்துவ கல்வி, அனைத்து மக்களிடையே ஏற்றதாழ்வுகளை களைவதற்காக அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் போன்ற பல்வேறு திட்டங்களை சாமானிய மக்கள் பொருளாதாரத்தில் வளர்ச்சியடையும் வகையிலும், மேலும் பொதுமக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையிலும் எண்ணிலடங்கா திட்டங்களை வகுத்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு நூற்றாண்டு விழா கொண்டாடுவது மிக பொருத்தமானது.

பொதுவாக காலத்தை கி.மு. மற்றும் கி.பி என்று பிரிப்பார்கள். அதை போலவே அரசியலில் எடுத்துக்கொண்டால் கலைஞருக்கு முன்பு, கலைஞருக்கு பின்பு என்று தான் சொல்ல வேண்டும். கலைஞரின் அவர்களின் படைப்புகளாக பல வரலாற்று நாவல்கள், சமூக நாவல்கள் மற்றும் பல்வேறு திரைப்படத்திற்கு வசனங்கள் மற்றும் பாடல்கள் எழுதியுள்ளார். சிற்பக்கலைக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையிலும், தமிழுக்கு பெருமை சேர்க்கும் வகையிலும் 133 அடி உயர திருவள்ளுவர் திருவுருவச் சிலையை கன்னியாகுமரியில் நிறுவினார் சங்கீத நாடக அகடெமியை இயல், இசை, நாடகம் என பெயர்மாற்றம் செய்தார் மனோன்மணீயம் பெ.சுந்தரனார் எழுதிய பாடலை தமிழ்த்தாய் வாழ்த்தாக 1970ஆம் ஆண்டு அறிவித்தார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அரசியல், கலை, திரைப்படம் என பண்முக தன்மையோடு விளங்கிய மாபெரும் தலைவருக்கு சிறப்பு சேர்க்கும் வகையில் கலைஞர் பண்பாட்டு பாசறை விழா நடைபெறுகிறது என்று மாண்புமிகு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பேசினார்.

★★★





# ஏழைப் பங்காளர் – கலைஞர்



## 6. ஏழைப் பங்காளர் – கலைஞர்

**குழுவின் விவரங்கள்**

| | | |
|---|---|---|
| **தலைவர்** | : | **திரு கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன்.**<br>மாண்புமிகு வருவாய்த்துறை<br>மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை<br>அமைச்சர் |
| **இணைத் தலைவர்கள்** | : | **திரு. சிவ. வீ. மெய்யநாதன்**<br>மாண்புமிகு சுற்றுசூழல் மற்றும்<br>காலநிலை மாற்றத் துறை அமைச்சர்<br><br>**திரு சி.வி. கணேசன்**<br>மாண்புமிகு தொழிலாளர் நலன் -<br>திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் |
| **உறுப்பினர்-செயலர்** | : | **திரு எஸ்.கே. பிரபாகர், இஆப.,**<br>கூடுதல் தலைமைச் செயலாளர்/<br>ஆணையர்,<br>வருவாய் நிருவாகம் மற்றும்<br>பேரிடர் மேலாண்மை |
| **உறுப்பினர்கள்** | : | முனைவர் ஜெயரஞ்சன்<br>முனைவர் நாகநாதன்<br>திரு திண்டுக்கல் ஐ. லியோனி<br>திரு தமிழ் காமராசன்<br>திருமதி பர்வீன் சுல்தானா<br>திரு நாஞ்சில் சம்பத்<br>பேராசிரியர் சபாபதி மோகன் |




# தந்தை பெரியாரின் கனவை நிறைவேற்றி காட்டியவர்

இராமநாதபுரம் அரசு மருத்துவக்கல்லூரி கூட்டரங்கில் மாநில அளவில் மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா 'ஏழைப் பங்காளர் கலைஞர்'' என்னும் மாபெரும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு வருவாய்த்துறை மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் அவர்கள், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கதர் கிராமத் தொழில்கள் வாரியத்துறை அமைச்சர் திரு. ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் அவர்கள் ஆகியோர்; தலைமையேற்று முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர்




அவர்கள் வரலாற்று சாதனைகள் குறித்த புகைப்படக் கண்காட்சியை திறந்து வைத்தார்கள்.

இக்கண்காட்சி அரங்கில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் அரசியல் வரலாறு,முதலமைச்சராக இருந்த பொழுது உலக தலைவர்களுடன் சந்திப்பு,மக்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கியது தொடர்பான புகைப்படப் தொகுப்புகள் மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வாழ்க்கை வரலாறு குறித்த குறும்படம் திரையிடப்பட்டது. மாநில அளவில் மாணவ, மாணவிகளுக்கு நடத்தப்பட்ட ஓவியப்போட்டியில் அவர்களால் உருவாக்கப்பட்ட ஓவியங்கள் பொதுமக்கள் பார்வைக்காக அரங்கில் கண்காட்சியாக வைக்கப்பட்டிருந்தது.









மாண்புமிகு அமைச்சர் பெருமக்களால் பாராட்டப்பட்டதுடன் பொதுமக்கள் இக்கண்காட்சியினை பார்வையிட்டு செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டிருந்தது.

தொடர்ந்து ஏழைப்பங்காளராய் கலைஞர் பெரிதும் ஒளிர்ந்தது அரசியலில், கலையில் என்ற பட்டிமன்றம் தமிழ்நாடு பாடநூல் கழக தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மேலும், மாநில திட்டக்குழு துணைத்தலைவர் முனைவர் ஜெ.ஜெயரஞ்சன் அவர்கள் தலைமையில் ஏழைகளின் தோழமையில் கலைஞர் தந்தது வாழ்வாதரம் மேம்பாடு குறித்து மாண்புமிகு அரசு தலைமை கொறடா முனைவர். கோவி.செழியன் அவர்கள், கல்வி விடுதலை குறித்து முன்னாள் துணை வேந்தர் முனைவர் சபாபதி மோகன் அவர்கள், பொருளாதார மேம்பாடு குறித்து திரு.நாஞ்சில் சம்பத் அவர்கள் கருத்துரை வழங்கினார்கள். தொடர்ந்து மகளிர் விடுதலை தந்த கலைஞர் குறித்து திண்டுக்கல் சக்தி போர்பறை குழுவின் நாட்டுப்புற கலை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

★★★





சுமார் 50 வருடங்களுக்கு முன்னர் சென்னையில் மனிதனை மனிதனாகவே கை ரிக்ஷாக்களை இழுத்துச் செல்வது வழக்கமாக இருந்தது கால்களில் மிதியடிகள் இல்லாமல் இழுத்துச் செல்வார்கள். இந்த நிலையை ஏழை பாட்டாளியின் நிலையை எண்ணி சிந்தித்து இந்த நிலை மாற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கில் கை ரிக்ஷாவினை தடை செய்து சைக்கிள் ரிக்ஷா திட்டத்தை கொண்டு வந்த ஒப்பற்ற தலைவர் நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களே. அதுமட்டுமின்றி அவர்களுக்கு இலவச ரிக்ஷாக்களை வழங்கி அவர்கள் வாழ்வில் புத்துயிர் ஊட்டினார்கள். தொழு நோயாளிகளின் எதிர்கால நலன் கருதி தொழுநோயாளிகள் மறுவாழ்வு திட்டத்தினை கொண்டு வந்தவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

தொழுநோயாளிகள் மறுவாழ்வு இல்லங்களை கட்டி சமூகத்தில் அவர்களும் சமம் என்ற நிலையை கொண்டு வந்தவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். சென்னையில் பூ விற்பவர், பழம் விற்பவர், சிறு தொழில் செய்பவர், நடமாடும் கடைகள் வைத்திருப்பவர்களை பற்றி சிந்தித்த மாண்புமிகு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். குடிசை மாற்று வாரியம் என்ற துறையை உண்டாக்கி அவர்களை தங்க வைத்து அழகு பார்த்தவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களே.

இவ்வாறு பல திட்டங்களை தீட்டி மக்களுக்காகவே வாழ்ந்து மக்களின் நலனில் அக்கறை கொண்டு வாழ்ந்த முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் நம் அனைவரின் இதயத்திலும் வாழ்ந்து வருகின்றார். முத்தமிழறிஞரின் திட்டங்களை நம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் நிறைவேற்ற நினைத்த திட்டங்களை ஒவ்வொன்றாக நிறைவேற்றி வருகிறார்கள்.

பெண்களுக்கு இலவசமாக பேருந்துகளில் பயணம் மேற்கொள்ளும் திட்டம், புதுமைப்பெண் திட்டம் 1921இல் தந்தை பெரியார் அவர்கள் பெண்களுக்கு சமூகத்தில் சமமாக மதிக்கப்பட வேண்டும் என தீர்மானம் கொண்டு வந்தார்கள். மாண்புமிகு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன் பெண்களுக்கு சொத்தில் சம பங்கு உண்டு என்ற சட்டத்தை கொண்டு வந்து தந்தை பெரியாரின் கனவை நிறைவேற்றி காட்டியவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

# சட்டமன்ற நாயகர் – கலைஞர்



## 7. சட்டமன்ற நாயகர் – கலைஞர்

### குழுவின் விவரங்கள்

| | | |
|---|---|---|
| **தலைவர்** | : | **திரு மு. அப்பாவு,**<br>மாண்புமிகு பேரவைத் தலைவர்,<br>தமிழ்நாடு சட்டமன்றப்<br>பேரவைச் செயலகம் |
| **இணைத் தலைவர்கள்** | : | **திரு எஸ்.எஸ். சிவசங்கர்**<br>மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர்<br>**திரு கு. பிச்சாண்டி,**<br>மாண்புமிகு சட்டமன்றப் பேரவை துணைத் தலைவர்<br>**முனைவர் கோவி. செழியன்,**<br>அரசு தலைமைக் கொறடா,<br>தமிழ்நாடு சட்டமன்றப்<br>பேரவைச் செயலகம் |
| **உறுப்பினர்-செயலர்** | : | **முனைவர் கி. சீனிவாசன்,**<br>செயலாளர்,<br>சட்டமன்றப் பேரவைச் செயலகம். |
| **உறுப்பினர்கள்** | : | திரு ஆர். ஆவுடையப்பன்<br>(முன்னாள் சட்டமன்றப் பேரவைத் தலைவர்)<br>திரு எஸ். பீட்டர் அல்போன்ஸ்<br>திரு வேலூர் ஞானசேகரன்<br>திரு க.ப. டில்லிதுரை<br>(முன்னாள் செயலாளர்,<br>சட்டமன்றப் பேரவைச் செயலகம்)<br>திரு செல்வராஜ்.<br>(முன்னாள் செயலாளர்,<br>சட்டமன்றப் பேரவைச் செயலகம்)<br>திரு சுகுமார் |



# சட்டமன்றத்தின் மூலம் சமூக முன்னேற்றம்

கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, கோயம்புத்தூர் மாவட்டம், நவஇந்தியா, அவினாசி சாலையில் உள்ள இந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சித்தாபுதூர், வி.கே.கே.மேனன் சாலையில் உள்ள மாநகராட்சி மேல்நிலைப் பள்ளி ஆகிய இடங்களில் சட்டமன்ற நாயகர் கலைஞர் விழாக் குழு சார்பில் மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு. மு.அப்பாவு அவர்கள் தலைமையில், மாநில சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் திரு.எஸ்.பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் ஆகியோர் முன்னிலையில் கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் பேரவைத் தலைவர் அப்பாவு அவர்கள் உரையாற்றினார்.

கலைஞர் அவர்கள் ஒரு பெரிய சாதனையாளர். உலக மகா சாதனையாளர். ஏறக்குறைய இரண்டரை இலட்சம் பக்கங்களை எழுதி சாதனை புரிந்து இருக்கிறார்கள். அவருக்கு தெரியாத இலக்கிய பிரிவே இல்லை. பலதுறைகளில் வரலாற்று சாதனையினை படைத்துள்ளார் என்பது உண்மை. 1900 ஆண்டுகளில் பெண்கள் கல்வி பெறவில்லை. இன்றைய காலக்கட்டத்தில் அனைத்து பெண்களும்



கல்வி கற்கின்றனர். இக்குழுவின் சார்பில் நடத்தப்படும் போட்டிகளில் 50 சதவிகிதம் மாணவியர்கள் கலந்துகொள்கிறார்கள். பெண்கல்வி மூலம் பெண்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

நம் நாட்டின் சுதந்திரம், மிகப்பெரிய பொருளாதார வளர்ச்சி, விஞ்ஞான வளர்ச்சியை நமக்கு வழங்கி இருக்கிறது. சுதந்திரம் அடைந்த காலகட்டத்தில் தமிழ்நாட்டில் இருந்த கல்விநிலையங்களை விரல்களில் எண்ணிவிடமுடியும். ஆனால் இன்று நகரங்களில் 20 முதல் 30 கல்லூரிகளுக்கு மேல் உள்ளன. பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் ஆரம்ப கல்வி வழங்க ஏறக்குறைய 36,000 பள்ளிகூடங்களை திறந்து வைத்து அடித்தளம் அமைத்தார். தொடர்ந்து கலைஞர் அவர்கள் மேல்நிலைக்கல்விக்கு மிகப்பெரிய கட்டுமானத்தை அமைத்தார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொழிற்கல்விக்கு கொடுத்துள்ள முக்கியத்துவம், தமிழ்நாட்டை முதன்மையான தொழிற்கல்வி நிறைந்த மாநிலமாக மாற்றி இருக்கிறது.

கலைஞர் அவர்களிடம் உங்கள் பொதுவாழ்வின் நோக்கம் என்ன என கேட்டபோது, “என்னுடைய நோக்கம் என்பது சாதியினுடைய ஆதிக்கத்தையும், மதத்தின் வெறியையும் அடித்து நொறுக்கவேண்டும் என்பதாகும்” என கூறினார். ஆகவே கலைஞர் நூற்றாண்டு விழா உங்களுக்கு சொல்கின்ற செய்தி சாதிவெறியையும் மதவெறியையும் மாய்ப்போம் என்ற எண்ணத்தில் நீங்கள் அனைவரும் செயல்பட வேண்டும்.




முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்கள் தொடர்பாக பல்வேறு நிகழ்ச்சிகள் மாநிலம் முழுவதும் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன. இந்நிகழ்ச்சிகளை நடத்துவதெற்கென தமிழ்நாடு அரசால் 12 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அக்குழுக்களில் ஒன்றான சட்டமன்ற நாயகர்கலைஞர்'' என்ற குழு சார்பில் தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள பள்ளிகள் கல்லூரிகளில் "நூற்றாண்டு விழா நாயகர் கலைஞர் சட்டமன்றத்தின் மூலம் சமூக முன்னேற்றத்திற்கு ஆற்றிய சாதனைகளில் மாணவர்களை ஈர்த்தது'' என்ற தலைப்பின்கீழ் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றது. அதனடிப்படையில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் கல்லூரி மற்றும் பள்ளியில் கருத்தரங்கம் நடைபெற்றது.

அந்த காலத்தில் பெண்களை சிறுவயதிலேயே திருமணம் செய்து கொடுத்துவிடுவார்கள். தற்போதைய காலகட்டத்தில் தமிழ்நாட்டில் பெண்கள் உயர்கல்விவரை பயில்கின்றனர். அதற்கு தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் பெண்கள் முன்னேற்றத்திற்காக மேற்கொண்ட பல்வேறு முன்னெடுப்புகள்தான் காரணமாகும். 10ஆம் வகுப்பு, 12ஆம் வகுப்பு, பட்டபடிப்பு, படித்த பெண்களுக்கு திருமண நிதியுதவி வழங்கும் திட்டத்தை கலைஞர் கருணாநிதி அவர்கள் கொண்டுவந்தார்கள். இதனால் பெண்கள் உயர்கல்வி பயிலும் எண்ணிக்கை அதிகரித்தது. இந்தியாவில் உயர்கல்வி படிப்பவர்கள் 27 சதவிகிதம் ஆனால், தமிழ்நாட்டில் 82 சதவிகிதம் பேர் உயர்கல்வி பயில்கிறார்கள்.

அதன்தொடர்ச்சியாக நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அரசுப்பள்ளியில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை படித்த பெண்கள்









உயர்கல்வி பயில்வதற்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்கும் புதுமைப்பெண்கள் திட்டத்தை கொண்டு வந்தார்கள். பெருந்தலைவர் காமராசர் பள்ளிகளில் மதிய உணவு திட்டத்தை கொண்டுவந்தார். கல்விக்கண் திறந்தவர் என போற்றப்படுகிறார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதல் தலைமுறை பட்டதாரி கட்டணமில்லாமல் கல்வி கற்கலாம் என்ற திட்டத்தை கொண்டுவந்தார். இதுபோன்ற திட்டங்களால்தான் தமிழ்நாடு இன்று உயர்கல்வி பயில்வதில் இந்தியாவிலே முதலிடம் பெற்றுள்ளது.

தாய்மார்கள் மற்றும் பள்ளிக்குழந்தைகளின் நலனை கருத்தில்கொண்டு, அரசு துவக்கப்பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு, காலை உணவு வழங்கும் திட்டத்தை நமது முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ளார்கள். தமிழ்நாட்டில் உள்ள அரசுப்பள்ளிகளில், ஸ்மார்ட் வகுப்புகள் உள்ளன. மேலும், அரசுப்பள்ளிகளில் ஸ்போக்கன் இங்கிலிஷ் கற்றுத்தரப்படுகிறது. கலைஞர் அவர்கள் மெட்ரிக் பள்ளிகளுக்கு இணையான பாடத்திட்டங்களை அரசு பள்ளிகளிலும், அரசு உதவிபெறும் பள்ளிகளிலும் கொண்டுவந்தார்கள் என்று பேரவைத் தலைவர் அப்பாவு அவர்கள் பேசினார்.

சட்டமன்ற நாயகர் கலைஞர் விழாக்குழு கருத்தரங்கில் கலைஞர் அவர்களின் சாதனைகள் குறித்து பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியர்கள் சிறப்பாக உரையாற்றினார்கள்.

பேச்சுப்போட்டியில் பங்கேற்று வெற்றிபெற்ற அனைத்து மாணவ மாணவியர்களுக்கும் பாராட்டு சான்றிதழ்களையும், பரிசுகளையும் மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு.மு.அப்பாவு அவர்கள் வழங்கினார்.

★★★





# பகுத்தறிவு சீர்திருத்தச் செம்மல் – கலைஞர்



## 8. பகுத்தறிவு, சீர்திருத்தச் செம்மல் – கலைஞர் குழுவின் விவரங்கள்

| | | |
|---|---|---|
| **தலைவர்** | : | **திரு துரைமுருகன்**<br>மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் |
| **இணைத் தலைவர்கள்** | : | **திரு. சு. முத்துசாமி**<br>மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்<br><br>**திரு. அர. சக்கரபாணி**<br>மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் |
| **உறுப்பினர்-செயலர்** | : | **முனைவர் சந்தீப் சக்சேனா, இ.ஆ.ப.,**<br>அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் நீர்வளத் துறை |
| **உறுப்பினர்கள்** | : | நீதியரசர் கே. சந்துரு<br>திருமதி ஏ.எஸ். குமாரி<br>திரு சுந்தர ஆவுடையப்பன்<br>திரு வே. மதிமாறன்<br>திரு வாலாசா வல்லவன்<br>திரு சூர்யா சேவியர்<br>திரு செந்தலை கவுதமன் |



# உயர்ந்த இமயம் இவர்தான்.

**வே**லூரில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நூற்றாண்டு விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.விழாவில் காலையில் கலைஞர் அவர்களின் அரிய புகைப்படங்கள் அடங்கிய புகைப்பட கண்காட்சி நகர அரங்கில் திறந்து வைக்கப்பட்டது. கலைஞர் அவர்களின் வாழ்க்கையை கலை நிகழ்ச்சிகள் மூலமும், மாலையில் கலைஞரின் நிலைத்த புகழுக்கு காரணம் இலக்கியப் பணியா அல்லது சமுதாய பணியா என்ற தலைப்பில் பட்டிமன்றமும் நடைபெற்றது. விழாவில் மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் உரையாற்றினார்.



கலைஞரைப் பற்றி சொல்ல வேண்டும் என்றால் சொல்லிக் கொண்டே இருக்கலாம். அவர் ஒரு அடி முடி காணாத அருணாச்சலேஸ்வரர் என சொல்லலாம். கலைஞர் ஒரு உயர்ந்த இமயம் இவர்தான் கலைஞர் என்று அவரை எதிலும் அடக்கி விட முடியாது. அவர் தொட்ட சிகரத்தை யாரும் தொடவும் முடியாது. தொட்டதும் கிடையாது. சினிமாவை எடுத்துக் கொண்டால் பராசக்தியிலும், மனோகராவிலும் அவர் எழுதிய வசனத்தை இன்றும் யாராலும் தொட முடியவில்லை. கிட்டத்தட்ட 50 ஆண்டுகளுக்கு மேலாக அந்த வசனம் திரைத்துறையில் பேசப்பட்டுக் கொண்டிருக்கிறது. அவர் தன்னுடைய வசனத்தில் ஒரு வார்த்தைக்கு வீரியம் கொடுத்தவர். பராசக்தியில் ஓடினாள் ஓடினாள் வாழ்க்கையின் ஓரத்திற்கே ஓடினாள் என ஓடினாள் என்ற ஒற்றை வார்த்தைக்கு வீரியம் கொடுத்தவர் டாக்டர் கலைஞர்.

அரசியலை எடுத்துக் கொண்டால் சுதந்திர தினத்திற்கும், குடியரசு தினத்தன்றும் கவர்னர்கள் தேசிய கொடியை ஏற்றி வந்தனர். சுதந்திர தினத்தன்று முதலமைச்சர்களும் கொடி ஏற்றலாம் என்ற உரிமையை அன்றைய பிரதமர் இந்திரா காந்தியிடம் போராடி



பெற்று கொடுத்தவர் டாக்டர் கலைஞர். எம்.ஜி.ஆர் அவர்கள் கூட முதலமைச்சரான பிறகு கோட்டையில் கொடியேற்றிய பொழுது நான் இந்த கொடியேற்றுவதற்கு காரண கர்த்தா டாக்டர் கலைஞர் என சொன்னார். மாநில சுயாட்சிக்காக தொடர்ந்து குரல் கொடுத்தவர், போராடியவர் கலைஞர். அதன் பிறகுதான் மண்டல் கமிஷன் வந்தது. வங்கிகளை தேசிய மயமாக்க வேண்டும் என்று கூறினார். அதை இந்திரா காந்தி செயல்படுத்தினார். இதுபோல அவர் எதை செய்தாலும் சிறப்புற செய்வார். அதை யாராலும் திரும்ப ஈடுசெய்ய முடியாது.

குமரியில் வள்ளுவருக்கு சிலையாகட்டும். தமிழ் மொழிக்கு செம்மொழி அந்தஸ்து, மதராசை மாற்றி சென்னை. இவையெல்லாம் அவர் தொட்ட, அவர் சென்ற சிகரத்திற்கு அடையாளங்கள். அவர் தொட்டதை யாராலும் தொட முடியாது. அது எழுத்தாற்றல், பேச்சாற்றல், நிர்வாகம் எதுவாக இருந்தாலும் அவர் செய்ததை யாராலும் செய்ய முடியாது. அப்படிப்பட்ட ஒரு மகத்தான தலைவர் கலைஞர். அவர் ஒரு இமயம், அந்த இமயத்தோடு 53 ஆண்டுகள் உண்மையாக பயணித்தவன் நான் என்னாலேயே இவர்தான் கலைஞர் என்று சொல்ல முடியாது

தொண்டர்களை அனுசரித்து செல்வதில் அவருக்கு நிகரான தலைவர் யாரும் கிடையாது. அதேபோன்று ஒரு நாளைக்கு குறைந்தது 500 முறையாவது அண்ணா என்ற சொல்லை அவர் உச்சரிப்பார். அப்படி தன்னுடைய தலைவருக்கு மரியாதை கொடுத்த ஒரு தொண்டன் யாரும் கிடையாது. ஒரு தொண்டன் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கும், ஒரு தலைவன் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கும் இந்த இரண்டிற்குமே மிகச் சிறந்த உதாரணம் கலைஞர்தான். அவருடைய சாதனைகளை சொல்லிக் கொண்டே போகலாம் இந்த ஒரு நாள் அதற்கு போதாது. இலக்கிய பணியை எடுத்துக் கொண்டாலும் அவரைப்போல் யாரும் இருக்க முடியாது. தொல்காப்பியத்திற்கு உரை எழுத போகிறேன் என்றார். அதற்காக கோவாவிற்கு என்னை அழைத்துச் சென்றார். அங்கே தங்கி இருந்து தொல்காப்பியத்திற்கு உரை எழுதினார். அதை அனைத்து தமிழ் அறிஞர்களும் ஏற்றுக் கொண்டார்கள்.



ஒரு தொண்டனாக. ஒரு தலைவனாக அவர் சாதித்த சாதனைகள் ஏராளம். அவரது வழியில் நின்று பயணித்தால் எதையும் சாதிக்க முடியும். எமர்ஜென்சி காலத்தில் கூட அவரை அச்சுறுத்திய போது எதற்கும் அஞ்சாமல் கொள்கையை மாற்றிக் கொள்ளமாட்டேன் என்று கூறி எதிர்த்து போராடியவர் கலைஞர். அப்படிப்பட்ட ஒரு மகத்தான தலைவருக்கு நூற்றாண்டு விழா கொண்டாடுவது மிகவும் பொருத்தமானது என்றும் உரையாற்றினார்.

மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் அவர்கள் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வேலூர் நகர அரங்கில் பகுத்தறிவு சீர்திருத்த செம்மல் கலைஞர் சிறப்பு புகைப்பட கண்காட்சியை திறந்து வைத்தார். இப்புகைப்பட கண்காட்சியை பார்வையிட்டு கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த பதிவேட்டில் “அந்த நாள் ஞாபகம் வந்ததே நண்பனே” என எழுதி தன்னுடைய கருத்தை பதிவு செய்தார்.

தொடர்ந்து மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் அவர்கள் வேலூர் பேபி மஹாலில் நடைபெற்ற நூற்றாண்டு விழா நிகழ்ச்சியில் பகுத்தறிவு சீர்திருத்த செம்மல் கலைஞர் நூற்றாண்டு விழா சிறப்பு மலரையும். குறும்படத்தையும் வெளியிட்டார்.

தொடர்ந்து கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருச்சி காவேரி கலை குழுவினரின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.

பின்னர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நிலைத்த புகழுக்கு காரணம் அவரது இலக்கியப் பணியா அல்லது சமுதாயப் பணியா என்ற தலைப்பில் சிறப்பு பட்டிமன்றம் நடைபெற்றது. இப்பட்டிமன்றத்தை மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில் அரக்கோணம் பாராளுமன்ற உறுப்பினர் முனைவர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் தொடக்கவுரையாற்றி தொடங்கி வைத்தார்.

இப்பட்டிமன்றத்திற்கு நகைச்சுவை நாவலர் புலவர் மா.இராமலிங்கம் அவர்கள் நடுவராக இருந்தார். முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நிலைத்த புகழுக்கு பெரிதும் காரணம் இலக்கியப் பணியே என்ற தலைப்பில் முனைவர் இரா. நவஜோதி,



முனைவர் பி. பாஸ்கர், திருமதி அன்னலட்சுமி ஆகிய மூவரும், சமுதாயப் பணியே என்ற தலைப்பில் முனைவர் அபு, கவிஞர் லலிதா, முனைவர் வேதநாயகி ஆகிய மூவரும் தங்களுடைய கருத்துக்களை எடுத்துரைத்தனர். இதில் இலக்கிய பணியே என்ற தலைப்பில் பேசிய பேச்சாளர்கள் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழ் இலக்கியத்திற்கு ஆற்றிய அரும்பணிகள் குறித்தும், குறிப்பாக அவர் எழுதிய திருக்குறள் உரை, தொல்காப்பிய உரை, திரைக்கதை, நாடகம்,வசனங்கள் போன்ற பல்வேறு இலக்கியப் பணிகளை நகைச்சுவை உணர்வோடு எடுத்துரைத்தனர்.

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நிலைத்த புகழுக்கு காரணம் சமுதாயப் பணியே என்ற தலைப்பில் சிறப்புரையாற்றிய பேச்சாளர்கள் முத்தமிழறிஞர்








டாக்டர் கலைஞர் அவர்கள் இச்சமூகத்திற்கு ஆற்றிய எண்ணற்ற திட்டங்களை நகைச்சுவை உணர்வோடு பட்டியலிட்டார்கள். குறிப்பாக மகளிருக்கு சொத்துரிமை, மகளிர் சுய உதவி குழுக்கள், விதவை மறுமணச் சட்டம், இலவச மின்சாரம், 108 ஆம்புலன்ஸ் போன்ற பல்வேறு சமுதாயப் பணிகள் குறித்து எடுத்துரைத்தார்கள்.

இப்பட்டிமன்றமானது நகைச்சுவை உணர்வோடு எளிதில் புரிந்து கொள்ளும் வகையிலும், பள்ளி கல்லூரி, மாணவ, மாணவியர்களுக்கு இலக்கியப் பணி மற்றும் சமுதாயப் பணியில் ஆர்வத்தை தூண்டும் வகையிலும் அமைந்திருந்தது.

★★★





# நவீன தமிழ்நாட்டின் சிற்பி – கலைஞர்



## 9. நவீன தமிழ்நாட்டின் சிற்பி – கலைஞர்

### குழுவின் விவரங்கள்

| | | |
|---|---|---|
| தலைவர் | : | **திரு. எ.வ. வேலு**<br>மாண்புமிகு<br>பொதுப் பணித் துறை அமைச்சர் |
| இணைத் தலைவர்கள் | : | **திரு. ஆர்.எஸ். ராஜகண்ணப்பன்**<br>மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்<br>**திரு. பி.மூர்த்தி**<br>மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் |
| உறுப்பினர்-செயலர் | : | **டாக்டர் பி. சந்தர மோகன். இ.ஆ.ப.,**<br>அரசு முதன்மைச் செயலாளர்,<br>பொதுப் பணித் துறை |
| உறுப்பினர்கள் | : | திரு சுகி சிவம்<br>திரு ஆர். சுப்பிரமணியம்<br>பேராசிரியர் விஜயபாஸ்கர்<br>பேராசிரியர் கலையரசன்<br>பேராசிரியர் இராம சீனிவாசன்<br>பேராசிரியர் ஜோதி சிவஞானம்<br>திருமதி ரூப்மதி<br>திரு ஓவியர் மருது<br>செல்வி தேன் சௌரிராஜன்<br>திரு ஏர்வாடி ராதாகிருஷ்ணன்<br>ஸ்தபதி திரு செல்வநாதன் |


கலைஞர்









21.08.2023 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், 'நவீன தமிழ்நாட்டின் சிற்பி – கலைஞர்' குழுவினால் மாநில அளவிலான நிகழ்ச்சி சேலத்தில் நடத்த முடிவு செய்யப்பட்டது. அதன்படி, D.S.K திருமண மஹால், சேலத்தில் கலைஞர் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்கள் நாள் முழுவதும் சீரும் சிறப்புமாக நடைபெற்றன.

"நவீன தமிழ்நாட்டின் சிற்பிகலைஞர்" என்ற தலைப்பில் புகைப்படக் கண்காட்சியைத் துவக்கிவைத்து சிறப்பு மலரினை வெளியிட்டதுடன், நவீன தமிழ்நாட்டின் சிற்பிகலைஞர் என்ற தலைப்பின் கீழ் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், நகர்ப்பகுதி மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு அவர்கள் சிறப்புரையாற்றினார். மாண்புமிகு பொதுப்பணி, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு அவர்கள் தலைமை உரையாற்றினார். மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் துறை அமைச்சர் திரு. ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் அவர்கள் மற்றும் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் திரு. பி.மூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.






இதனை தொடர்ந்து நண்பகலில் திரு. உதயச்சந்திரன், இ.ஆ.ப. அரசு முதன்மை செயலாளர், நிதித்துறை அவர்களின் தலைமையில் “நவீன தமிழ்நாட்டின் சிற்பி கலைஞர்” என்ற தலைப்பின் கீழ் கருத்தரங்கம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் முனைவர் திரு. ஜெ.ஜெயரஞ்சன், துணைத் தலைவர், மாநிலத் திட்டக்குழு, முனைவர் சுந்தர ஆவுடையப்பன், மேனாள் நிகழ்ச்சி இயக்குநர், அகில இந்திய வானொலி, திரு.மதுக்கூர் இராமலிங்கம் மற்றும் முனைவர் ந.விஜயசுந்தரி ஆகியோர் பங்கேற்றனர்.

தொடர்ந்து மதிய வேளையில் திருச்சிராப்பள்ளி கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரியின் கலை நிகழ்ச்சியும் மாலையில் “நவீன தமிழ்நாட்டின் சிற்பி கலைஞர்” என்ற தலைப்பின் கீழ் கவியரங்கமும் நடைபெற்றது. திரைப்பட பாடலாசிரியர் கவிஞர் நெல்லை ஜெயந்தா தலைமையில் நடைபெற்ற கவியரங்கத்தில் கவிஞர்கள் ஏர்வாடி இராதாகிருஷ்ணன், தஞ்சை இனியன், ஜான் தன்ராஜ், தங்கம் மூர்த்தி மற்றும் பா.மகாலெட்சுமி ஆகியோர் பங்கேற்று பேசினர்.

27.02.2024 அன்றைய நூற்றாண்டு கொண்டாட்டங்களைத் தொடர்ந்து 28.02.2024 மற்றும் 29.02.2024 ஆகிய நாட்களில் “நவீன தமிழ்நாட்டின் சிற்பி – கலைஞர்” என்ற தலைப்பில் புகைப்படக் கண்காட்சி நடைபெற்றது.

★★★

# நிறுவனங்களின் நாயகர் – கலைஞர்



### 10. நிறுவனங்களின் நாயகர் – கலைஞர்

**குழுவின் விவரங்கள்**

| | | |
|---|---|---|
| தலைவர் | : | **திரு.கே.என். நேரு**<br>மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் |
| **இணைத் தலைவர்கள்** | : | **திரு எஸ். ரகுபதி**<br>மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்<br><br>**திரு தா.மோ. அன்பரசன்**<br>மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அமைச்சர் |
| **உறுப்பினர்-செயலர்** | : | **திரு பா. பொன்னையா, இ.ஆ.ப.,**<br>இயக்குநர்,<br>நகராட்சி நிருவாகம் |
| **உறுப்பினர்கள்** | : | திரு வேணு சீனிவாசன்<br>திரு ஜி. விஸ்வநாதன்<br>மருத்துவர் சந்திரகுமார்<br>மருத்துவர் மோகன் காமேஸ்வரன்<br>திரு மதிவாணன்<br>திரு கிருஷ்ணராஜ் வானவராயர் |


கருத்தரங்கம்


கலைஞர் நூற்றாண்டு
மற்றும் கண்காட்சி












முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தனது ஆட்சிக்காலங்களில் மக்களுக்கு பெரிதும் பயனளிக்கும் வகையில் பல்வேறு நிறுவனங்களை உருவாக்கி சாதனை படைத்துள்ளார்கள்.

அவர் உருவாக்கிய முன்னோடி நிறுவனங்கள் மற்றும் தொழில்கல்வி சார்ந்த நிறுவனங்கள்என 51 அரங்குகள் கொண்ட சிறப்பு புகைப்படக் கண்காட்சி நடைபெற்றது.

இதனை மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் “நிறுவனங்களின் நாயகர் – கலைஞர்” நூற்றாண்டு விழாக்குழுத் தலைவர் திரு.கே.என். நேரு அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதிஸ்டாலின் அவர்கள் கருத்தரங்கினைத் தொடங்கிவைத்து சிறப்பு மலரினை வெளியிட்டார்கள்.

இக்கருத்தரங்கில்,

சமூகம் அரசியல் என்கிற தலைப்பில் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. க.பொன்முடி அவர்கள்,





கல்வித்துறை தலைப்பில் வி.ஐ.டி. வேந்தர் பல்கலைக்கழக நிறுவனர் மற்றும் வேந்தர் முனைவர் ஜி.விஸ்வநாதன் அவர்கள்,

இலயோலா மேலாண்மை கல்வி நிறுவனத்தின் (LIBA) இயக்குநர் அருள் முனைவர் ஜோ அருண்சேச அவர்கள்,

மருத்துவத்துறை என்கிற தலைப்பில் அப்பல்லோ குழும மருத்துவமனைகள் துணைத்தலைவர் மரு.ப்ரீதாரெட்டி அவர்கள், கோயம்புத்தூர் கங்கா மருத்துவமனை தலைவர் மரு. பேராசிரியர் எஸ்.இராஜசேகரன் அவர்கள், காவேரி மருத்துவமனை நிறுவனர் மற்றும் செயல்தலைவர் மரு. எஸ்.சந்திரகுமார் அவர்கள்,

தொழில்துறை என்கிற தலைப்பில் டி.வி.எஸ் மோட்டார் நிறுவனத்தின் தலைவர் திரு.வேணு சீனிவாசன் அவர்கள்,

இந்திய ஏற்றுமதி நிறுவனங்களின் கூட்டமைப்பு மற்றும் திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் முனைவர் அ.சக்திவேல் அவர்கள், கெவின்கேர் நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர் திரு. சி.கே. ரங்கநாதன் அவர்களும் கருத்துரையாற்றினர்.

★★★







# தமிழ்த்தாயின் தவப்புதல்வன் – கலைஞர்



## 12. தமிழ்த்தாயின் தவப்புதல்வன் – கலைஞர்

### குழுவின் விவரங்கள்

| | | |
|---|---|---|
| தலைவர் | : | **திரு தங்கம் தென்னரசு**<br>மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் |
| இணைத் தலைவர்கள் | : | **திரு அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்**<br>மாண்புமிகு மீன்வளம் - மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர்<br>**திரு வி. செந்தில்பாலாஜி**<br>மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் |
| உறுப்பினர்-செயலர் | : | **திரு த. உதயச்சந்திரன், இ.ஆ.ப.,**<br>அரசு முதன்மைச் செயலாளர், நிதித் துறை |
| உறுப்பினர்கள் | : | கவிப்பேரரசு வைரமுத்து<br>திரு ம. ராசேந்திரன்<br>திரு பொற்கோ<br>பேராசிரியர் அருணன்<br>பேராசிரியர் இராஜன்குறை<br>பேராசிரியர் மருதநாயகம்<br>திரு கலியபெருமாள்<br>திருமதி பாரதி கிருஷ்ணகுமார்<br>திரு அறவேந்தன் |





13.07.2023 தலைமைச் செயலகத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை சிறப்பாக கொண்டாடும் வகையில் அமைக்கப்பட்ட குழுக்களில் “தமிழ்த்தாயின் தவப்புதல்வன் – கலைஞர்” என்ற குழுவின் கூட்டம் இக்குழுவின் தலைவரும் மாண்புமிகு நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், குழுவின் இணைத் தலைவரும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.




எஸ்.எஸ்.சிவசங்கர், நிதித் துறை முதன்மைச் செயலாளரும் குழுவின் உறுப்பினர் செயலருமான திரு. த.உதயசந்திரன், இ.ஆ.ப., குழுவின் உறுப்பினர்கள், கவிப் பேரரசு வைரமுத்து, முனைவர் பொற்கோ, முனைவர் ம.ராசேந்திரன், திரு. பாரதி கிருஷ்ணகுமார், திரு. கலியபெருமாள், முனைவர் அருணன், முனைவர் இராஜன் குறை, முனைவர் அறவேந்தன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தொலைநோக்குச் சிந்தனையாளர் – கலைஞர்



## 11. தொலைநோக்குச் சிந்தனையாளர் – கலைஞர்

### குழுவின் விவரங்கள்

| | | |
|---|---|---|
| தலைவர் | : | **திரு இ. பெரியசாமி**<br>மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் |
| இணைத் தலைவர்கள் | : | **திருமதி. பி. கீதாஜீவன்**<br>மாண்புமிகு சமூகநலம் - மகளிர் உரிமைத்துறை அமைச்சர்<br>**முனைவர் டி .ஆர் .பி . ராஜா**<br>மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் |
| உறுப்பினர்-செயலர் | : | **முனைவர் ப. செந்தில்குமார். இ.ஆ.ப.,**<br>அரசு முதன்மைச் செயலாளர்<br>ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை |
| உறுப்பினர்கள் | : | நீதியரசர் அக்பர் அலி<br>திரு சி. கே. ரங்கநாதன்<br>கவிஞர் ரவி சுப்பிரமணியம்<br>பேராசிரியர் இன்னாசிமுத்து<br>திரு கால்டுவேல் வேள்நம்பி<br>கவிஞர் மனுஷ்யபுத்திரன் |



# கலைஞரின் வரலாற்றை இளைய சமுதாயத்தினர் படித்து உயர வேண்டும்

**க**ரூர் மாவட்டம், அட்லஸ் கலையரங்கில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தொலைநோக்கு சிந்தனையாளர் கலைஞர் என்ற பொருளிலான நிகழ்வுகளின் தொடக்க விழா கருத்தரங்கு நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாண்புமிகு ஊரக வளர்ச்சித் தறை அமைச்சர் திரு.ஐ.பெரியசாமி அவர்கள் சிறப்புரை வழங்க, மாண்புமிகு சமூக நலம், மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி கீதா ஜீவன் அவர்கள் மற்றும் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா அவர்கள் முன்னிலையில் கருத்தரங்கு நடைபெற்றது. இதில் மாண்புமிகு அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் உரையாற்றினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை பொருத்தவரையில் கிட்டத்தட்ட 75 ஆண்டுகள் அரசியலில் மட்டுமல்லாமல் சமூக பொருளாதாரத்தின் முன்னேற்றத்திற்காக 75 ஆண்டு காலம் உழைத்திருக்கின்றார்கள்.

பொதுமக்களின் எதிர்காலத்தை கொண்டு சிந்தித்தவர். பின் ஜனநாயகத்திற்காக குரல் கொடுத்தவர். இந்திய திருநாட்டில் நெருக்கடி நிலை அவசர காலகட்டத்தில் மட்டுமல்ல ஜனநாயகத்திற்கு எப்போதெல்லாம் ஆபத்து வருகின்றதோ அப்போது





முதல் குரலாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் குரல் தான் ஒலித்து கொண்டு இருக்கும்.

நமது நாட்டில் ஜனநாயகத்தை காப்பாற்றுவதற்கும் எல்லா மக்களும் சமத்துவமாக வாழ்வதற்கும் ஒரு பெரிய சிற்பியாகவும், சிந்தனையாளராகவும் செயல்பட்டவர் டாக்டர் கலைஞர் அவர்கள் தான்.

குறிப்பாக கலைஞர் அவர்கள் 1969 ஆம் ஆண்டில் இருந்து கிட்டத்தட்ட ஐந்து முறை முதலமைச்சராக இருந்திருக்கின்றார்கள். அந்தந்த காலகட்டங்களில் பல்வேறு திட்டத்தை தீட்டி இருக்கின்றார்கள். கடந்த காலத்தையும் சிந்திக்க வேண்டும், நிகழ்காலத்தையும் பார்க்க வேண்டும்.

எதிர்காலத்தில் யார் மக்களுக்கு நன்மையை செய்வார்கள் என்று எதிர்நோக்கி பார்க்க வேண்டும். இளைஞர் பருவத்தினராகிய நீங்கள். நாம் அனைவரும் இவ்வளவு தூரம் கல்வி கற்றதற்கு முக்கிய காரணமானவர்கள் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் மற்றும் கலைஞர் அவர்கள் தான்.

ஆனால் கடந்த காலங்களில் கிராமப்புறங்களில் ஐந்தாவது வகுப்பு வரை குழந்தைகளை படிக்க வைத்து விட்டு வீட்டில் இருந்து கொள்வார்கள் அதற்கு மேல் அவர்களுக்கு திருமணம் செய்து வைத்துவிடுவார்கள்.

அந்த காலகட்டங்களை மாற்றி பெண்கள் கல்வி பயில வேண்டும் அதுவும் எட்டாம் வகுப்பு வரை கண்டிப்பாக படிக்க வேண்டும் எட்டாம் வகுப்பு வரை படிக்கும்









பெண்களுக்கு திருமணத்திற்கு ரூபாய் 5000 உதவித்தொகை தருவேன் என்று வழங்கியவர் இந்தியாவிலேயே முதன் முதலாக கொண்டு வந்தவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள்.

அதேபோல் வீடு இல்லாதவர்களுக்கு கலைஞர் அவர்கள் ஆதிதிராவிடர் நலத துறை சார்ந்த அவர்களுக்கு 1 இலட்சம் வீடுகளை 1969ஆம் ஆண்டு இந்தியாவிலேயே முதல் முதலாக கட்டிக் கொடுத்தார்கள். நகரங்களில் குடிசையில் வாழும் மக்களுக்கு அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டிக் கொடுத்தார்கள்.

2006 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தவுடன் முதியோர்களுக்கு தன்னம்பிக்கையுடன் இருப்பதற்காக மாதம் ரூ.1000 உதவி தொகை யினை வழங்கினார்கள். அதேபோல் அனைத்து நபர்களுக்கும் சொந்தமாக குடியிருப்பதற்காக இடமில்லாதவர்களுக்கு அல்லது புறம்போக்கில் குடியிருப்பவர்களுக்கு 2006 ஆம் ஆண்டில் சட்டசபையில் வாக்குறுதி அளித்தது போல் உடனடியாக இலவசமாக வீட்டுமனை பட்டாவினை வழங்கினார்கள்.





பள்ளி குழந்தைகள் படிப்பதற்கு இலவச கல்வி பேருந்து செல்வதற்கு இலவச பயணம், பள்ளி கல்லூரியில் படிக்கும் மாணவ மாணவர்களுக்கு இலவச உதவி தொகை போன்ற எண்ணற்ற திட்டங்களை கலைஞர் அவர்கள் வழங்கினார்கள்.

மதிய உணவு திட்டம் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் கொண்டு வந்தார்கள் அதனை தொடர்ந்து மதிய உணவில் வாரம் முழுவதும் குழந்தைகளுக்கு முட்டை வழங்க வேண்டும் என்று கலைஞர் அவர்கள் வழங்கினார்கள்.

அதேபோல் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் ஆகியோரின் வழியில் இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களுக்கு எண்ணற்ற திட்டங்களை வழங்கி வருகின்றார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய வரலாற்றை படித்து சிந்தனைகளை வளர்த்துக்கொண்டு குழந்தைகளாகிய நீங்கள் அனைவரும் வாழ்க்கையில் மென்மேலும் வளர வேண்டும் என்று மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் உரையாற்றினார்.

தொடரந்து தொலை நோக்கு சிந்தனையாளர் கலைஞர் மையக்கருத்து பாடலினை மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. ஐ.பெரியசாமி அவர்கள் வெளியிட மாண்புமிகு மாண்புமிகு சமூக நலம், மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி கீதா ஜீவன் அவர்கள் மற்றும் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் முனைவர். டி.ஆர்.பி.ராஜா அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

★★★

கலைஞர் 100
1924 - 2024

# கலைஞர் நூற்றாண்டு நிறைவு மலர் - ஜூன் 2024

தொகுதி – 1

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர்:

**மரு. இரா.வைத்திநாதன்,** இ.ஆ.ப.,

இயக்குநர்,

செய்தி மக்கள் தொடர்பு மற்றும்

அலுவலால் அரசு துணைச் செயலாளர்,

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை,

தலைமைச் செயலகம்,

சென்னை - 600 009.

மலர் தயாரிப்புக் குழு:

ப.திருமாவேலன்

பொ.தங்கபாண்டியன்

வடிவமைப்பு

இரா. தமிழரசு

அச்சிட்டோர்:

தமிழரசு அச்சகம்

எண்.5, இராஜீவ் காந்தி சாலை, கானகம், தரமணி, சென்னை - 600 113.

தொலைபேசி : 044-22542224 / 22542221

மின்னஞ்சல்: ddpub.tamilarasu@tn.gov.in

இணையதளம்: www.tndipr.gov.in

**தமிழரசு**

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு



வீழ்ந்து கிடந்த தமிழ்ச் சமுதாயத்துக்கு விடிவெள்ளியாய்த் தோன்றி - வாழும் காலத்தில்
ஒளிதரும் உதயசூரியனாக வாழ்ந்து - நிறைந்து பிறகும் கலங்கரை விளக்கமாக
வழிகாட்டிக் கொண்டிருக்கிறவர்தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

– மு.க.ஸ்டாலின்
தமிழ்நாடு முதலமைச்சர்

தமிழரசு
செய்தி மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு